# தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்




தி. மதிவதனன் B.A. Dip. in Ed.

# தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்

(சங்ககாலம் தொடக்கம் ஐரோப்பியர் காலம் வரை)

க. பொ. த. உயர்தர, G. A. Q., B. A. மாணவர்களும் பயன்படுத்தலாம்.

**தீ. மதிவதனன் B. A., Dip. in Ed.**

நூல் : தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்

பதிப்புரிமை : திருமதி ஜெயசோதி மதிவதனன்

முதற் பதிப்பு : சித்திரை 1999

ஆசிரியர் : தி. மதிவதனன் B. A., Dip. in Ed.

அச்சுப் பதிவு : முல்லை அச்சகம்,
ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அட்டை பதிப்பு : குரு பட்டுத்துணி பதிப்பகம்,
32, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

விலை : ரூபா 75 /-

# ஆசியுரை

தமிழ் இலக்கிய வரலாறு பற்றி காலத்துக்கு காலம் தமிழகத்திலும் ஈழத்திலும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவை பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களாலும், அவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவையாவும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களாலும் விரிவுரையாளர்களாலும் எழுதப்பட்டவை.

இவ்வாறு வெளிவரும் நூல்களில் அவ்வகுப்புக்களில் கற்கும் மாணவனது கற்றல் தேவைக்கும் ஆசிரியரது கற்பித்தற் செயற்பாட்டிற்கும் உதவக் கூடிய நூலாக இந்நூல் அமைகின்றது நீண்டகாலமாக க. பொ. த உயர்தர வகுப்புக்களில் தமிழ் கற்பித்தலில் பட்டறிவுடைய ஆசிரியர் திரு. தி. மதிவதனன் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார். இந்நூலில் அவரது வகுப்பறைக் கற்பித்தல் அனுபவமும், அவரது தமிழ் இலக்கிய ஆர்வமும், தேடல் முயற்சியும் வெளிப்படுகின்றது. இந்நூல் பாட நூலாகவும், துணை நூலாகவும் அமைகின்றது தமிழ் இலக்கிய வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் விடயத்தை இரத்தினச் சுருக்கமாக அள்ளிக் கொடுக்கின்றது

இந்நூல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டுச் சிறப்படைய ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை*
கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

ஜெ-2 ட-4

# வாழ்த்துரை

தமிழ் இனத்தின் வரலாறு, வளர்ச்சி, பண்பாடு என்பவற்றுடன் தமிழ் இலக்கிய வரலாறு பின்னிப் பிணைந்துள்ளது. தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்புக்கும் அடித்தளமாக விளங்குவதும் தமிழ் இலக்கியங்களே ஆகும். தமிழ் மொழி மீது நாட்டம், ஆராய்ச்சியுணர்வு, பண்பாட்டைப் பேணல், கலாசாரத்தை வளர்த்தல் போன்ற குறிக்கோள்களை மாணவர் அடைய வேண்டும் என்ற நோக்கிலேயே தமிழ் இலக்கிய வரலாறு உயர்தர தமிழ் மொழிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

பேராசிரியர் வி. செல்வநாயகம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூல் க. பொ. த (உ. த) தமிழ்மொழிப் பாடத்திற்குரிய உசாத்துணை நூலாக சிபார்சு செய்யப்பட்டு நீண்ட நாட்களாகப் பயன்பட்டு வருகிறது இதனை அடிப்படையாகக் கொண்டு மேலும் மெருகூட்டிய வகையிலும் மாணவர் பரீட்சையில் படும் இடர்களைக் களையும் வகையிலும் க. பொ. த. (உ. த) வகுப்பில் நீண்ட காலமாகக் கற்பித்து தான் பெற்ற அனுபவ வாயிலாக இந்நூலை ஆசிரியர் திரு. தி. மதிவதனன் அவர்கள் எழுதியுள்ளார்.

இவரின் அரிய இம்முயற்சியைப் பாராட்டுவதுடன் இவருடைய ஆக்கத்திற்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் உற்சாகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இவர், மேலும் பல தமிழ் நூல்களை எழுதுவதற்குரிய வல்லமையையும் மன உறுதியையும் வழங்க நயினை நாகபூஷணி அம்பாளின் திருவடிகளைப் பிரார்த்திக்கிறேன்.

ப. விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்வித் திணைக்களம்,
தீவகம், வேலணை.

# அணிந்துரை

ஒவ்வொரு மொழியில் தோன்றிய இலக்கியத்திற்கும் வரலாறு இருத்தல் போலத் தமிழ் இலக்கியத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு. தமிழ் இலக்கிய வரலாறு க. பொ. த உயர்தர வகுப்பு தமிழ்ப்பாட மாணவர்களுக்கு ஒரு நூலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இலக்கிய வரலாற்றைப் பலர் எழுதியபோதிலும் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களின் நூலே பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவரின் நூலே மாணவர்களுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது.

மாணவர்களின் இடர்பாடுகளை நீக்குவதற்காகவும் தற்காலத் தேவையைக் கருதியும் பல வருடங்களாக உயர்தர மாணவர்களுக்குத் தாம்கற்பித்த அனுபவத்தைக் கொண்டும் ஆசிரியர் திரு. தி. மதிவதனன் அவர்கள் இந் நூலைத் தந்துள்ளார். இந் நூல் மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும். மாணவர் மனங் கொள்ளும் வகையில் பல இலக்கிய நூல்களையும் ஆய்வு நூல்களையும் ஆராய்ந்து சுருங்கிய வடிவிலும் எளிமையாகவும் எழுதியுள்ளார். எடுத்த விடயத்தை விளக்க முன் மாணவர் மனத்தில் பதியவைத்துக் கொள்ளக்கூடிய வகையில் பொருளடக்கம் தந்துள்ளார்.

பேராசிரியர் செல்வநாயகத்தின் கருத்தோடு நின்றுவிடாது ஏனைய இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களையும் ஆங்காங்கே எடுத்துச் சொல்கிறார். தமது கருத்துக்களுக்குப் பல மேற்கோள்களைக்காட்டி நிலைநிறுத்திச் செல்கின்றார். இவர் எழுதிய தலையங்கங்கள் யாவும் பரீட்சை வினாத்தாளில் வந்துகொண்டிருப்பனவாகும். இதனால் இந்நூல் மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை

அதிபர்,

யா / கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி., காரைநகர்.

# ஆய்வுரை

தமிழ் இலக்கிய வரலாறு பற்றிப் பல நூல்கள் வெளி வந்துள்ளன. வெளிவந்த நூல்கள் வெளியிடப்பட்டவர்களின் ஆராய்ச்சித் திறனையும், அவர் தம் நுண்மாண் நுழை புலனை யும் பறை சாற்றுவனவாக அமைந்து காணப்படுகின்றன. பெரும் பாலான தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் - பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும், பேராசிரியர்களாலுமே வெளியிடப்பட் டன. ஆனால் தற்பொழுது எமது கைகளில் தவழும் தமிழ் இலக்கிய வரலாற்று நூல் அப்படிப்பட்டதன்று. பல்கலைக்கழ கத்தில் பட்டம் பெற்று பல்கலைக்கழகத்து வெளியில் நின்று கல்விப்பரப்பில் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு நற்றமிழ் ஆசானின் பெருமுயற்சி எனலாம்.

தமிழ் இலக்கிய வரலாறு இன்று பெருமளவில் பயில் துறையாக விளங்குகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பின் அளவு விரிவடைந்து கொண்டே வருகிறது. இதனால் தமிழ் இலக்கியம் சம்பந்தமாக புதுநோக்கும், படைப்பு முயற்சியும் இன்றியமை யாததாக இருக்கின்றது. இந்த வகையில் இந்த இலக்கிய வர லாற்று நூல் நல்லதொரு முயற்சி எனலாம்.

இந்த நூலை ஆக்கிய திரு தி. மதிவதனன் நூல்களைச் சேகரிப்பதில் பெருவிருப்புக் கொண்டவர். நூல்களே தனது அரும் பெரும் சொத்துக்கள் என்று நினைப்பவர். இதனால் எங்கு நல்ல நூல்கள் கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் நாளும் வாங்கிச் சேகரிக்கும் மனப்பாங்குடையவர். இதனால் இவரது வீட்டில் சிறந்ததொரு நூல் நிலையத்தையே கண்டு கொள்ள முடியும். தேடல் முயற்சி காரணமாக இவரது சிந்தனை பரந்து பட்டதாகிவிட்டது. அதுமட்டுமல்ல பலரது படைப்புக்களை மனமூன்றி வாசித்துப் பதிய வைத்ததன் காரணமாக இவரிடம் கவர்ச்சியானதும், கருத்துச் செறிந்ததுமான தமிழ் உரை நடை யொன்று உருவாகிவிட்டது. இந்தச் சிறப்பினால் இவரது நூல் யாவராலும் சுவைத்து வாசிக்கத்தக்கதாக அமைந்து விட்டது எனலாம்.

எண்பது நூல்கள் வரை வாசித்து அவற்றின் பின்னணி யில் தமிழ் இலக்கிய வரலாற்று நூலை இவர் படைத்துள்ளார். வண்டுகள் பூக்கள் பலவற்றை நாடி, தேடி, ஓடி தேனைச் சேகரித்து வந்து தேன் கூடு கட்டிச் சேமித்து வைத்தது போல இவரது இம்முயற்சி அமைகின்றது.

பாடமையக்கல்வி போய்விட்டது. இன்றிருப்பது மாணவர் மையக்கல்வி. மாணவரை முழுக்க மனதிற் கொண்டே இந்த நூல் படைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல பாடசாலைகளில் இலக்கிய வரலாறு கற்பிக்கும் துறையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கெல்லாம் இந்த நூல் அருந்துணையாக அமையும் என்பதிலும் எதுவித ஐயமுமில்லை எனலாம்.

பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றை அடியொற்றி அதன் போக்கில் இந்த நூல் எழுதப்பட்டதாக இதன் ஆசிரியர் குறிப்பிட்டமை இவரது நேர்மைக்குத்தக்க சான்று. அதேவேளை இந்தநூலைத் தனது கற்பித்தல் அனுபவத்தின் அடிப்படையில் வகுப்பில் மாணவருக்கு எப்படி இலகுவாக, நயமாகக் கற்பிக்கலாம் என்ற நோக்கில் எழுதப்பட்டுள்ளமையை நூலை வாசிக்கும் எவரும் அறிந்து கொள்வர்.

இந்த நூலில் ஆசிரியர் கையாண்டுள்ள உத்திகள் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கற்க வேண்டும் என்ற ஆவலை யாவருக்கும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

1. சங்கமருவியகால இலக்கியத்தை அறிமுகம் செய்தல்

2. சங்ககால சங்கம்மருவிய கால இலக்கியங்களின் ஒப்பீடு - இதைப் போன்ற ஏனைய காலங்களையும் அதற்கு முந்திய காலங்களோடு ஒப்பீடு செய்கின்றமை.

3. உரை நடையின் சிறப்பும் கவர்ச்சி ஆற்றலும் - சொல்லும் பாங்கு.

உரை நடையின் ஆற்றலுக்குச் சில எடுத்துக்காட்டுகள் :

'சங்ககாலப் புலவனிற்குப் பொருளிற்தேவையிருந்தது. புரவலனிற்கு புகழில் ஆசையிருந்தது. இந்தத் தேவையும் ஆசையும் புணர்ந்த போது புறநானூற்றுப் பாடல்கள் பிறந்தன எனக் கூறலாம்." (பக்கம் 09)

'பக்தி இலக்கியத்தின் உதயதாரைகைகளாகிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் மீது உள்ளம் உருகி நின்றும் உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தியபோது பிறந்தவையே பக்தி இலக்கியங்களாகும். இவை தவிரப் பாராளு மன்னரையும், பணம் படைத்த பெருஞ் செல்வரையும் விதந்து பேசும் பக்தி சாரா இலக்கியங்களும் இக்காலத்தில் தோற்றம் பெற்றன." (பக்கம் 40

'ஐரோப்பியர் வருகை தமிழக வரலாற்றில் அரசியல் பொருளாதார நோக்கில் தீமை பயத்தது உண்மை. ஆனாலும் தமிழ் இலக்கியத்திலும் தமிழக சமுதாயத்திலும் அவர்களது வருகை புதுமையைப் புகுத்தியது. புரட்சி பூரிக்கச் செய்தது. தமிழர்கள் எட்டுத் திசையும் அலைந்து புதிய கலைகளைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இன்றி அக்கலைகள் தமிழைத் தேடி, தமிழரைத்தேடி, தமிழகத்தைத்தேடி, தமிழ் அன்னையின் மடியில் வந்து குவிந்தன. அவற்றைக் கொண்டு வந்து குவித்தவர்கள் ஐரோப்பியர்கள் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.' (பக்கம் 81)

திரு. தி. மதிவதனன் ஆசிரியரின் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியதேயாகும். பொறுமையாக இருந்து இத்தனை நூல்களையும் மனமூன்றி வாசித்த பின்பே இலக்கிய வரலாற்று நூலை அவர் ஆக்கியிருக்கிறார். இம்முயற்சி கற்கின்றவர் நலனை கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டதே. எனவே இந்த நூலை யாவரும் மனமுவந்து வாங்க வேண்டும். மனமூன்றி வாசிக்க வேண்டும். திரு. தி. மதிவதனனுக்கு இதனால் மேலும் இத்துறையில் ஈடுபட இது உந்துதலை அளிக்கும் என்பது எனது எண்ணமாகும். இவர் இத்துறையில் மேலும் பல வெளியீடுகளை வெளியிட்டுக் கற்பவர் மனத்துக்கு உறுதுணை பயப்பவராக இருக்கவேண்டும் என்பது எனது பேரவா ஆகும்.

ம. ஜெயராமசர்மா
உதவிக் கல்விப் பணிப்பாளர், (தமிழ்)

தீவகக் கல்வி வலயம்,
தீவகம்.

⊞ ⊞ ⊞

# என்னுரை

தமிழ்மொழி நெடிய நீண்டவரலாறு உடையது. காலம் தோறும் பல்வேறு இலக்கியங்கள் இலக்கணங்கள் தோன்றி செந் தமிழைச் செழுமைப்படுத்தியுள்ளன. பலரும் போற்றிப் பெரு மைப்படும் வகையில் மொழியும் இலக்கியமும் வளர்ந்து வரலாறு படைத்துள்ளன. இவற்றின் பன்முக நலன்களை வெளிக்கொண ரும் வகையில் பல இலக்கிய வரலாறுகள் தோன்றியுள்ளன.

பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆட்சிக்காலங்களின் அடிப்படையில் பகுத்து எழுதியுள்ளார். தமிழகத்திலும் பல அறிஞர்கள் தமிழ் இலக்கிய வரலாறு எழுதியுள்ளனர். பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர் களின் இலக்கிய வரலாறே இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பாடநூலாக அமைகிறது. அவ்வகையில் அவரது பகுப்பினை அடிப்படையாக வைத்து கடந்த பல வருடங்களாக உயர்தர வகுப்புகளுக்கு இலக்கிய வரலாறு கற்பித்த அனுபவத்தையும் திரட்டிய குறிப்புக்களையும் ஏனைய பல ஆராய்ச்சி நூல்களையும் படித்துச் சேர்த்த விடயங்களையும் உள்ளடக்கி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் எளிமையான தமிழ் நடையில் இந் நூலினை சங்க காலம் தொடக்கம் ஐரோப்பியர் காலம் வரை எழுதியுள் ளேன். இதன் தொடர்ச்சியாக 20ம் நூற்றாண்டு பின்னர் வெளிவரும்.

இந் நூலுக்கு ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தவர் யாழ்ப் பாணக் கல்வி வலய பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை அவர்கள்.

இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தவர் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள்.

இந் நூலினை முழுதும் வாசித்து அணிந்துரை வழங்கி சிறப்பித்தவர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள்.

இந் நூல் முழுதும் வாசித்து ஆய்வுரை வழங்கி அணி செய்தவர் தீவக வலயத் தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப் பாளர் திரு. ம. ஜெயராம சர்மா அவர்கள்.

எனது ஆள்வினைகளுக்கெல்லாம் ஊன்று கோலாக இருந்து என்னை ஊக்குவித்தவர் எனதருமைத்துணைவியார் ம; ஜெய சோதி அவர்கள்:

இந் நூலினை அழகிய முறையில் பிரதி செய்துதவியவர் எனது மாணவி செல்வி கலாசக்தி நவரத்தினம் அவர்கள்:

நூற் பிரதியை வாசித்து செம்மைப்படுத்தியவர் ஆசிரியை செல்வி சிவமலர் சிவராசா அவர்கள்.

இந் நூலினை மெச்சத் தகுந்த முறையில் அச்சுப்பணி செய்து உதவியவர் முல்லை அச்சக உரிமையாளர் திரு: க: மயில்வாகனம் அவர்கள். சரவைத் திருத்தம் செய்து நூலை மேன்மையுறச் செய்தவர் திரு: க: லோகநாதன் அவர்கள் மற்றும் அச்சக ஊழியர்கள்.

அட்டைப்பதிப்பு செய்துதவிய குருபட்டுத்துணிப் பதிப்பக உரிமையாளரும் அவர்தம் ஊழியர்களும்:

என்றும் என் நினைவில் நின்று போற்றுதலுக்குரியவர்கள்: இவர்கள் அனைவர்க்கும் எனது அன்பினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பன்

தி. மதிவதனன்

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
02 - 05 - 1999

## சமர்ப்பணம்

அறிவூட்டி ஆட்கொண்ட
அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை
நயினை நாகபூஷணி அம்பாளின்
பாதகமலங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஓர் அறிமுகம் | 01 - 02 |
| சங்க காலம் | 03 - 16 |
| சங்கம் மருவிய காலம் | 17 - 31 |
| பல்லவர் காலம் | 32 - 46 |
| சோழர் காலம் | 47 - 60 |
| நாயக்கர் காலம் | 61 - 72 |
| ஐரோப்பியர் காலம் | 73 - 84 |

# தமிழ் இலக்கிய வரலாறு

## ஓர் அறிமுகம்

ஒருவர் தன்னுடைய கருத்தினைப் பிறருக்குப் புலப்படுத்தவும், பிறருடைய கருத்தினை தாம் புரிந்து கொள்ளவும் பயன் படுகின்ற பொதுவான கருவி மொழி எனப்படும். வடக்கே வேங் கடமலை தொட்டு தெற்கே கன்னியாகுமரி வரை பரந்து பட்டுக் கிடந்த நிலப் பரப்புக்களில் வாழ்ந்த பழங்குடி மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சாதனம் தமிழ்மொழி எனப்படும். மக்களின் வாழ்க்கையின்கால் வரும் அனுபவங்களை அழகுணர்ச்சியோடு எடுத்துக் கூறுவதாகவும் மகிழ்ச்சியூட்டலை முதற் கருத்தாகவும், நல்லறிவூட்டுதலை உட்கருததாகவும் கொண்டது இலக்கியம் எனப்படும். வரலாறு என்பது நடந்து முடிந்த சம்பவங்களை எடுத்துக் கூறுவதாகும். ஆனால் இவை உண்மைச் சம்பவங்களாக இருகக வேண்டுமென்பதால் வரலாற்றிற்கு ஆதாரங்கள் அவசிய மாகின்றன, தமிழ்மொழியின் வரலாற்றை அறிவதற்கு ஆதாரங் களாக அமைபவை இலக்கியங்களே. தமிழில் தோன்றிய இலக் கியங்களைக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றை ஆய்வு செய்வர். 'வடவேங்கடம் தென்குமரியாயிடை தமிழ் கூறும் நல்லுலகம்' என்று தொல்காப்பியரினால் வரையறை செய்யப்பட்ட தமிழ் நாட்டிலே வாழ்ந்த மக்களது முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிகோள்களையும் தன்னகததே கொண்டு விளங்கு கின்ற தமிழ் இலக்கியமானது எப்பொழுது தோன்றியது எனக் கூறுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை. இதனால் தமிழ் மொழியின் தொன்மையை நிரூபிப்பதும் கடின மாகவே உள்ளது. இருப்பினும் தற்போது கிடைத்துள்ள இலக் கியங்களைக் கொண்டு அவற்றுள் காலத்தால் முந்தியவை எவை?, காலத்தால் பிந்தியவை எவை? என்று நிறுவலாம். அவ்வாறு நிறுவுமிடத்து பேராசிரியர் வி. செலவநாயகம் அவர்கள் அரசி யலை அடிப்படையாகக் கொண்டும், முன்னோர் வழி நின்றும்

தமிழிலக்கிய வரலாற்றை ஏழு கால கட்டங்களாக வகுத்துள்ளார். அவையாவன.

01. சங்க காலம் - கி.பி. ஒன்று தொடக்கம் மூன்று நூற்றாண்டுகள்.

02. சங்கம் மருவிய காலம் - கி.பி. நான்கு (4) தொடக்கம் ஆறு (6) நூற்றாண்டுகள்.

03. பல்லவர் காலம் - கி.பி. ஏழு (7) தொடக்கம் ஒன்பது (9) நூற்றாண்டுகள்.

04. சோழர் காலம் - கி.பி. பத்து (10) தொடக்கம் பதின்மூன்று (13) நூற்றாண்டுகள்.

05. நாயக்கர் காலம் - கி.பி. பதின்னான்கு (14) தொடக்கம் பதினேழு (17) நூற்றாண்டு.

06. ஐரோப்பியர் காலம் - கி.பி. பதினெட்டு (18) தொடக்கம் பத்தொன்பது (19) நூற்றாண்டுகள்.

07. 20 - ம் நூற்றாண்டு - கி.பி. (20) இருபது நூற்றாண்டுகள்.

கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தமிழிலக்கிய வரலாற்றை ஐந்து கால கட்டங்களாக வகுத்துள்ளார். அவை முறையே,

01. சங்ககாலம் - இயற்கை நெறிக் காலம்
02. சங்கம் மருவிய காலம் - அறநெறிக் காலம்
03. பல்லவர் காலம் - பக்தி நெறிக் காலம்
04. சோழர் காலம், நாயக்கர் காலம் - தத்துவ நெறிக் காலம்
05. ஏனையவை - அறிவியல் நெறிக் காலம்

இவ்வாறு தத்தமது அறிவியலிற்கேற்ப இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்திருந்தாலும் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு பாடநூலாக பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களது தமிழ் இலக்கிய வரலாறே அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் அவரது இலக்கிய வரலாற்றையே மூலமாகக் கொண்டு அவை ஒவ்வொன்றையும் சற்று விரிவாக நோக்கலாம்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம்புறம் என்றிகத்திறத்த எட்டுத்தொகை. } எட்டுத்தொகை

முருகு பொருநாறு பாணிரண்டு
முல்லை பெருகு வளமதுரைக்காஞ்சி
மருவினிய கோலநெடுநல்வாடை
கோல் குறிஞ்சி பட்டினப்பாலை கடாத்தொடும் பத்து.

# சங்க காலம்

## அறிமுகம் :

தமிழ் இலக்கிய வரலாற்றின் முதற் காலம் சங்க காலம் ஆகும். முதற் சங்கம் தென்மதுரையிலும், இடைச்சங்கம் கபாட புரத்திலும், கடைச்சங்கம் மதுரையிலும் வீற்றிருந்து தமிழை வளர்த்து வந்தன என்பர். இச் சங்கங்களில் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர், தொல்காப்பியர், வள்ளூர்க் காப்பியன், கபிலர், பரணர் நக்கீரர் போன்ற பெரும் புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர் எனவும், அகத்தியம், வாய்ப்பியம் முது நாரை, முதுகுருகு, வெண்டாழி, வியாழ மாலை அகவல், காக்கை பாடினியம் முதலிய இலக்கியங்கள் அரங்கேற்றப்பட்டன என்றும் இறையனார் களவியலுரை கூறுகிறது. சங்க காலத்தைச் சேர்ந்தனவாக இன்று கிடைக்கும் இலக்கியங்கள் தொல்காப்பியம், எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்பன ஆகும்.

## சங்க காலச் சமுதாய நிலை :

சங்க கால அரசியல், சமுதாய நிலையினைக் கவனிக்கின்ற போது அது ஓர் மன்னர் ஆட்சிக் காலமாக இருந்தது என்பது கவனிக்கத்தக்கதாகும், குழுமுறை அமைப்புக்களும் அவற்றிற்கு இடையிலான போட்டிகளும், போர்களும் நிறைந்திருந்த சங்க சமுதாயத்திலே அக்குழுக்களின் தலைவர்களே மன்னர்கள் என்ற நிலையைப் பெற்றனர் என்று குறிப்பிடலாம். பொதுவாக இம் மன்னர்கள் மக்கள் நலன் பேணுபவர்களாக இருந்தனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சங்க கால சமுதாய நிலையினைக் கவனிக்கின்ற போது அக் காலத்தில் மக்களது வாழ்க்கை இயற்கையோடு ஒட்டிய மைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இயற்கை அமைவிற்கேற்ப மக்களது வாழ்க்கை தீர்மானிக்கக்கூடிய அளவிற்கு இயற்கை யோடு பின்னிப் பிணைந்திருந்தது. இயற்கை என்னும் போது மக்கள் வாழ்ந்த நிலம் இங்கு பிரதான இடம் பெறுகிறது. சங்க காலத்தில் நிலமானது ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி, காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதம், கடலும் கடல் சார்ந்த இடமு மாகிய நெய்தல், மணலும் மணல் சார்ந்த இடமுமாகிய பாலை என்பனவே அவ் ஐவகை நிலப் பிரிவுகளாகும். ஐவகை நிலப் பிரிவுகளும் வெவ்வேறு புவியியல் தன்மையுடையனவாய் விளங் கின. இந் நிலத்தில் வாழ்ந்த மக்கள் முறையே குறவர், ஆயர், உழவர், பரதவர், மறவர் என அழைக்கப்பட்டனர். இந்நிலங் களின் இயற்கை அமைவிற்கேற்ப மக்களது தொழில்கள் அமைந் திருந்தன எனலாம்.

குறிஞ்சி நிலம் மலைப் பிரதேசம். ஆகையால் அங்கு பெரும் பயிர்கள் செய்கை பண்ணுவது முடியாததாய் இருந்தது. எனவே தினை விதைத்தலும், வேட்டையாடுதலையும் தொழி லாகக் கொண்டு இம்மக்களது வாழ்க்கை முறை அமைந்தது. காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லையில் அக்காடுகளை அழித்துப் பயிர் செய்வதை விட அக்காடுகளை உண்டு வளரு கின்ற ஆடு, மாடுகளாகிய மந்தைகளை வளர்ப்பது சுலபமான தாகையால் மந்தை வளர்த்தல் அவர்களது தொழிலாயிற்று. வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதம் சிறந்த வளமான பிரதேசமாக அமைந்ததனால் அங்கு வாழ்ந்த மக்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டனர். கடலும் கடல் சார்ந்த இடமு மாகிய நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் கடற்றொழிலான மீன்பிடித்தல, சங்கு குளித்தல், முத்துக்குளித்தல் முதலான தொழில்களை மேற்கொண்டனர். மணலும் மணல் சார்ந்த இடமுமாகிய பாலையில் வாழ்ந்த மககள் விவசாயம் செய்ய முடியாததனாலும், அயலில் கடலும் இல்லை ஆதலால் கடற் றொழிலும் செய்ய முடியாதிருந்தது. இதனால் குறிஞ்சியிலிருந்து முல்லைக்கும், முல்லையிலிருந்து குறிஞ்சிக்கும் பிரயாணம் செய் கின்ற பிரயாணிகளைக் கொள்ளையடித்தலையும், சூறையாடு தலையுமே தங்களுடைய தொழிலாக மேற்கொண்டனர். நிலங் களின் இயற்கை அமைவிற்கேற்ப மக்களது தொழில்கள் அமைந் திருந்தன. இவ்வாறு நிலம் தொழிலை நிர்ணயிக்க தொழில்

வாழ்க்கையை நிர்ணயிக்க வாழ்க்கை இயற்கையோடு ஒட்டி யமைவதாயிற்று.

இத்தகைய சங்க சமுதாயத்தினது வாழ்க்கையில் எந்த வித வரையறையோ கட்டுப்பாடோ இருக்கவில்லை. சங்க கால மக்கள் அளவு கடந்து மது அருந்தினார்கள். அளவு கடந்து புலால் புசித்தார்கள், அளவு கடந்து பெண் இன்பங்களை அனுபவித்தார்கள். அதாவது உலகியல் இன்பங்கள் அனைத்தை யும் ஒன்றும் விடாமல் அனுபவிக்கின்ற எந்தவித வரையறையோ கட்டுப்பாடோ அற்ற ஒரு வாழ்க்கை முறை சங்க காலத்தில் இருந்தது எனலாம்.

இத்தகைய வாழ்க்கையில் காதலுக்கும், வீரத்திற்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டு இருந்தது. காதல். களவியல், கற் பியல் என வகுக்கப்பட்டு சங்க கால மக்களது வாழ்க்கையில் பிரதான இடம்பெற்றுக் காணப்பட்டது. ஒரு ஆண்மகனுக்கு இருக்க வேண்டிய பிரதானமான தகுதிப்பாடு வீரம் எனக் கொள்ளப்பட்டது. நோயுற்று ஒருவன் இறந்தாலும் அவன் மார்பில் வாளினால் கீறி அவன் காயத்தினால் இறந்தானென சொல்லிக் கொள்ளும் அளவிற்கு வீரத்திற்குப் பிரதான இடம் கொடுக்கப்பட்டது. சங்க காலச் சமுதாய நிலையானது நிலங்க ளினடிப்படையில் அமைந்த காதலுக்கும் வீரத்திற்கும் முக்கியத் துவம் அளிக்கின்ற ஒரு வாழ்க்கை முறையைக் கொண்டமைவ தாயிற்று. இத்தகைய ஒரு சமுதாயத்திலிருந்து தோற்றம் பெறு கின்ற இலக்கியம் இச் சமுதாயப் போக்கிற்கு இணங்க எழுவ தாக அமைகிறது எனலாம்.

## சங்க இலக்கியங்களும் அவற்றின் பொருள் மரபுகளும்

இலக்கியமானது தான் எழுகின்ற சமுதாயத்தின் தன் மைக்கு அமையவே தோற்றம் பெறுகிறது என்ற பொது விதிக் கேற்ப காதலும், வீரமும் பிரதான சிறப்பிடம் பெற்ற சங்க சமுதாயத்தில் இருந்து தோன்றிய இலக்கியங்கள். அவற்றையே தம்முடைய பொருள் மரபாக ஏற்றுக் கொள்கின்றது. இலக்கி யங்களில் இவை அகமும் புறமுமென சித்திரிக்கப்படுகின்றன. அகம் எனப்படுவது காதலையும் காதல் பற்றிய செய்திகளையும் சொல்வதாகவும், புறம் எனப்படுவது காதல் தவிர்ந்த ஏனைய போர் ஒழுக்கங்களைச் சொல்வதாகவும் அமைகின்றது. சங்க இலக்கியங்களானவை; அகம், புறம் என தமது பொருள் மரபை வகுத்துக் கொண்டன இன்றைய இலக்கிய சிந்தனையாளர்களது கருத்துப்படி வாய்மொழிப் பாடல்களும், செய்திகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அகம் எனப்படுவது காதல் பற்றிய செய்திகள் எனப் பொதுவாக வரையறுத்துக் கொண்டாலும் உரையாசிரியர்களது கூற்றுப்படி அதற்குத் தனித்தவொரு வரைவிலக்கணம் கொடுக் கப்படுகின்றது. நர்ச்சினார்க்கினியர் அகமெனப்படுவது 'ஒத்த அன்பினரான தலைவனும் தலைவியும் தம்முள் தாம் எதிர்ப் பட்டுக் கூடும் கூட்டத்தில் பிறந்து அக் கூட்டத்தின் பின்னர் இத்தன்மையானது இன்ன வகையானது என்று சொல்லப்பட முடியாமல் தோன்றுமோர் உணர்வேயாகும்' என்று குறிப்பிடு கின்றார். புறமெனப்படுவது பிரதானமாக போரொழுக்கங்களை சொல்வதானாலும் தனிப்பட்ட ஒரு தலைவனது வீரம், புகழ், கொடை, ஆட்சித்திறன் என்பனவும் அதில் அடங்குவன ஆகும், இவை மட்டுமன்றி பொதுப் படையாகச் சொல்லப்பட்டனவாக வும், புலவர்களால் மன்னர்களுக்கு அறிவுறுத்தப்பட்டனவாக வும் அமையும் அகக் கருத்துக்களும் புறத்தில் அடங்குகின்றன. அகம் புறம் என்பன பற்றி பல்வேறு வகையில் விரிவுபடுத்திச் சித்திரிப்பனவாய் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களாக இன்று நமக்குக் கிடைக்கின்ற எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களில் இந்த அகப் புறச் சித்திரிப்பை தெளிவாகக் காணமுடிகிறது. எட்டுத் தொகை நூல் களுள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை என்னும் ஐந்தும் அக இலக்கியங்களாகவும், புற நானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்னும் மூன்றும் புற இலக்கியங்களாகவும் கொள்ளப்படுகின்றன பத்துப் பாட்டு நூல் களுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை என் னும் மூன்றும் அக நூல்களாகவும், திருமுருகாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), பொருணராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்ற ஏழும் புறநூல்களாகவும் அமைகின்றன. (நெடுநல் வாடை காதல் பற்றிய செய்திகளைச் சொல்லும் அக இலக்கியமாக அமைந்தும் வேம்பு தலையாத்த நோகா ழெஃகம் என்ற தொடரில் வேம்பு பாண்டியனின் பெயர் சுட்டிப் பாடப் பட்டதனால் புறத்திணையில் அடக்கப்பட்டது.) சங்க இலக் கியங்கள் ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்களை பத்து புற நூல்கள் ஆகவும் எட்டு அகநூல்களாகவும் வகுத்துக் காட்ட முடிகின்றது.

அகம், புறம் என்னும் இப்பொருள் மரபு மக்கள் வாழ்ந்த நிலங்களின் அடிப்படையில் அமைந்திருந்ததனால், நிலங்களின் அடிப்படையில் ஐந்திணை ஒழுக்கத்தையும் முதல், கரு, உரி என முப்பொருள்களாக வகுத்துக் கொண்டு பாடப்பட்டது. குறிஞ்சி,

முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களிற்கும் முறையே அன்பின் ஐந்திணையாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்ற அக ஒழுக்கங்களும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்ற புற ஒழுக்கங்களும் சங்க இலக்கியங்களில் பாடப்பட்டது, மக்களது வாழ்க்கை, தொழில் என்பவற்றில் மட்டுமன்றி ஒழுக்கங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு இயற்கை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது எனலாம்.

குறிஞ்சி நில மக்களின் தொழில்களாக தினை விதைத்தலும், வேட்டையாடுதலும் அமைந்தன. தினைப்பயிரை பறவைகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக கன்னிப் பெண்கள் காவலுக்குச் செல்லுவதும், காளையர்கள் வேட்டைக்குச் செல்வதும் வழக்காறாக இருந்தது. இவ்வாறு தினைப்புனம் காத்து நின்ற கன்னியரும், வேட்டைக்குச் செல்லும் காளையரும் கண்டு காதல் கொள்வதற்கு குறிஞ்சி நிலம் இடம் வகுத்துக் கொடுத்ததனால் காதலின் ஆரம்ப நிலையான புணர்தல் இந் நிலத்திற்கு அமைவதாயிற்று. ஐவகை நிலங்களிற்கும் புணர்தல் ஒழுக்கம் பொதுவேயானாலும் குறிஞ்சி நிலத்திற்கு சிறப்பாக போதிக்கப்பட்டமைக்கு மனித இனத்தினது பரிணாமத்தின் முதற்கூறு புணர்தல் ஒழுக்கத்தினுடனேயே தொடங்குகின்றது என்பதனாலாகும். இத்தகைய காரணங்களினாலேயே குறிஞ்சிக்குப் புணர்தல் ஒழுக்கமாயிற்று எனக் குறிப்பிடுகின்றனர்.

காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லையில் வாழ்ந்த மக்கள் ஆனிரை மேய்த்தலையும், சிறு விவசாயம் செய்தலையும் தமது பொருளியற் பணியாகக் கொண்டனர். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் முதன்முறையாக இயற்கையைக் கட்டுப்படுத்தி வாழத் தொடங்கும் நிலை முல்லையிலே தொடங்குகின்றது என வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தலைவன் பொருளுடைமையாளனாக முல்லைத் திணையிலேயே மாறுகின்றான். தலைவன் ஆனிரை மேய்த்தலிற்கும், ஆனிரையைக் கள்வர்களிடமிருந்து காப்பாற்றுவதற்கும் செல்வதனால் அவன் வரவைப் பார்த்து தலைவி கற்போடு இருத்தலினால் இருத்தல் அந் நிலத்திற்குரிய அக ஒழுக்கமாயிற்று, தமிழ் மக்களது வாழ்க்கை வரலாற்றில் முதன் முறையாக கற்புக் கோட்பாடு முல்லைத் திணையிலேயே உருவாகிறது எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். மனித இன வளர்ச்சிக் கட்டத்தின் இரண்டாவது படிநிலையாக முல்லைத் திணையைக் கொள்ளலாமென்பர்.

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்று அழைக்கப்பட்டது தமிழ் மக்களின் வரலாற்றிலே முதன் முறையாக நிலமுடையாளன் மருதத் திணையிலேயே தோற்றம் பெறுகின்றான் எனச் வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மருத நிலத் தலைவன் ஊரன் என்ற பெயரால் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றான். வயலையும், வயலைச் சூழவும் நில முடையார்களும், இரவலர்களான பாணர், கூத்தர் என்ற இரு வர்க்கத்தினரும் குடியமர்கின்றனர். இதனால் நிலமுடையானாகிய மருத நிலத் தலைவனின் ஆதரவு நிலமற்ற இரவலர்களுக்குத் தேவைப்பட்டது ஓய்வுடைய மருத நிலத் தலைவன் தன் ஓய்வு நேரத்தை மகிழ்வுடன் கழிக்க இக் குடியிருப்புக்களை நாடியதை யறிந்த மருத நிலத் தலைவி தலைவன் மீது பொய்க் கோபம் கொள்ளலாகிய ஊடல் அந்நிலத்தில் அடிக்கடி ஏற்பட்டதால் ஊடல் அந்நிலத்திற்குரிய அகவொழுக்கமாயிற்று.

கடலும் கடல் சார்ந்த பிரதேசமாகிய நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் கடற்றொழிலாகிய மீன்பிடித்தல், சங்கு குளித்தல், முத்துக் குளித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். தமிழ் நாட்டிலுள்ள புவியியல் அமைப்பிற் கவர்ச்சி மையத்தளம் (Town) நெய்தல் நிலத்திலேயே உண்டாகியது எனக் கூறப்படுகிறது முதன்முறையாக நகரம் நெய்தல் நிலத்திலேயே தோற்றம் பெற்றதென்பர். அதிகம் வளர்ச்சியுற்றதாக நெய்தல் நிலம் காணப்பட்டாலும் அதற்குரிய ஒழுக்கம் இரங்கலாகவே காணப்படுகிறது. அன்றும் இன்றும் கடலில் தொழிலுக்குச் செல்பவர்கள் உயிரோடு வருவது நிச்சயமன்று. எனவே தொழிலின் நிமித்தம் தலைவன் கடல் மேற் செல்ல தலைவியானவள் அவனது நிலை பற்றி இரங்கிக் கொண்டு இருப்பதனால் இரங்கல் அந்நிலத்திற்குரிய ஒழுக்கமாயிற்று.

தமிழகத்தின் புவியியல் அமைப்பிலே முதலில் நால்வகை நிலமே காணப்பட்டது. இதனாலேயே பழந்தமிழ்க் கவிஞர்கள் உலகை நானில மென்றே அழைத்தனர், 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து தன் இயல்பு கெட்டு பாலையென்பதோர் படிமங் கொள்ளும்' என்ற சிலப்பதிகார வரிகள் தமிழ் மக்களின் நிலப் பாகுபாட்டின் வளர்ச்சி நிலையில் பாலைத்திணை புதிதாக வந்து சேருகின்றது என்பதைக் காட்டுகின்றது. தமிழகத்தின் வரண்ட பிரதேசமே பாலை எனப்பட்டது. இப் பாலைநில மக்கள் ஆறலைத்தலையும், சூறையாடுதலையும் தம் தொழிலாக மேற்கொண்டனர். தம் தொழிலின் நிமிர்த்தம் பாலை நிலத் தலைவன் அன்றாடம் தம் தலைவியைப் பிரிந்து சென்றதனால் பிரிதல் அந்நிலத்துக்குரிய அக ஒழுக்கமாயிற்று.

இத்தகைய அகவொழுக்கங்களைத் தவிர அவையோடு தொடர்பில்லாததாய் இன்னும் இருதிணைப் பகுப்புக்களை சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. அவை கைக்கிளை, பெருந் திணை எனக் குறிப்பிட முடிகிறது. கைக்கிளை என்பது ஒரு தலைக் காதலாகும். தலைவன் தலைவி மீது ஆசை கொண்டு அவளிடம் பதில் பெறானாகில் அவளைப் பற்றிப் பலவாறெல்லாம் தனக்குத் தானே சொல்லி இன்புற்றுக் கொள்ளல் கைக்கிளை ஆகும். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் எனப் பட்டது. தலைவன் மிக்க காமத்தவனாகி தலைவியை அடையப் பெறாது மடலூர்தல், வரை பாய்தல் என்பவற்றின் மூலம் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல் பெருந்திணையாகும். இவ் விரண்டு ஒழுக்கங்களும், தூய காதல் ஒழுக்கங்கள் அல்ல என் பதனால் சங்க கால முற்பகுதி அக நூல்களான அக நானூறு, நற்றிணை, குறுந்தொகை என்பவற்றில் பாடப்படவில்லை. முதன் முதலில் ஐங்குறு நூறிலே கைக்கிளைப் பாடல்கள் காணப்படுகின்றன ஐங்குறு நூறிலுள்ள கிளவர்க்கு உரைத்த பத்து என்னும் பகுதியிலுள்ள பத்துப் பாடல்களும் கைக்கிளைப் பாடல்களாக அமைகின்றன. கலித்தொகையில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு ஒழுக்கங்களையும் காணலாம்.

போரொழுக்கங்களைப் பொறுத்த வரையில் சங்க காலத் தில் ஐவகை நிலங்களிற்கு ஐவகைப் போரொழுக்கங்கள் கூறப் படுகின்றன. இவற்றைப் புறத்திணை என்று வரையறை செய்துள் ளனர், இப் புறத்திணையிலேயே அரசனின் ஆட்சிச் சிறப்பு, கொடைத் தன்மை, வெற்றிக்களிப்பு முதலியன சிறப்பாகப் பேசப்படுகின்றன.

பெரும்பாலான புறப் பாடல்கள் 'ஆளும் வர்க்கத்திற்கு அனுசரணையாக பக்கம் சார்ந்து பாடப்பட்டது' என பேரா சிரியர் க. கைலாசபதி குறிப்பிடுகின்றார் சங்க காலப் புல வனிற்கு பொருளிற் தேவையிருந்தது, புரவலனிற்கு புகழில் ஆசையிருந்தது, இந்தத் தேவையும் ஆசையும் புணர்ந்த போது புறநானூற்றுப் பாடல்கள் பிறந்தன எனக் கூறலாம். சங்க காலப புறப் பாடல்கள் முகஸ்துதியாக பாடப்பட்டன எனப் பேராசிரியர். ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார். சங்க காலப் புறப் பாடல்களில் இக் காலப் போர் மரபுகள் இயற்கையோடு இயைந்தே பகுக்கப்பட்டன. அகத்திணையில் ஐவகை நிலத்திற் கும் ஐவகைத் தாவரங்கள் குறிப்பிடப்பட்டது போல் புறத்திணை யிலும் ஐவகை நிலங்களுக்கும ஐவகைப் பூக்கள் சூடப்பட்டன. குறிஞ்சி நிலத்தவர்கள் புரிந்த போர் வெட்சி எனப்பட்டது. மந்தை கவர வருகின்றவர்களுக்கும் முல்லை நிலத்தவர்களுக்கும்

இடையே நடந்த போர் வஞ்சியெனப்பட்டது. அரண் அமைத்து அதனுள் இருக்கும் மன்னனிற்கும் அதனை முற்றுகையிட்ட மன்னனிற்கும் இடையே நடக்கும் மருதநிலப் போர் உழிஞை எனப்பட்டது. கடற்கரை வெளியே களம் அமைத்து தம் வீரத்தை வெளிப்படுத்த நெய்தல் நில மன்னர்கள் புரிந்த போர் தும்பை எனப்பட்டது. பாலை நிலத்தவர் புரிந்த போர் வாகை எனப்பட்டது. இப் போரொழுக்கங்கள் மன்னர் போரிற்குப் போகும் போது சூடிச் சென்ற பூக்களின் பெயர் பெற்றது. இத்தகைய போரொழுக்கங்களைத் தவிர காஞ்சித் திணை, பாடாந்திணை எனும் போரொழுக்கங்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. காஞ்சித்திணை என்பது வாழ்க்கை நிலையாமை பற்றிய கருத்துக்களைச் சொல்வதாகும். இது ஆண்பாற் காஞ்சி, பெண்பாற் காஞ்சி என இரண்டாக வகைப்படுத்தப்பட்டது. பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு என்ற வகையில் ஒரு தலைவனது வீரம், கொடை, ஆட்சிச்சிறப்பு என்பவற்றைக் கூறுவதாகும். சங்க காலப் புலவன் பொதுசனத் தொடர்புகள் சாதனமாக விளங்கியதனால் போலும் அரசர்கள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து தம்மைப் புகழும் வண்ணம் பேச வைத்தனர். புலவர்களின் பொருள் வாஞ்சை, புரவலர்களுக்கு (அரசர்களுக்கு) போர் வாஞ்சையையும், போர் வெறியையும் ஏற்படுத்தியது எனலாம். ‘அயலவனின் நாடு எரிகின்ற வெப்பத்திலே உன்னுடைய தலைமாலை வாடுவதாக’ என்பன போன்ற பாடல்கள் போர் வெறியை ஊட்டும் தன்மை வாய்ந்தவையாக அமைந்துள்ளன.

சங்கப் புறப் பாடல்களிலே நிலையாமைக் கருத்துக்கள் மறு உலகம் பற்றிய கருத்துக்கள் கடவுளர்களை குறிக்கும் பொதுவான பெயர்கள் காணப்படுகின்றன ‘இன்னா தம்மை இவ்வுலகம், தீதும் நன்றும் பிறர் தர வாரா, நீலமணிமிடற்று ஒருவன் ஆலமர் செல்வன் முதலிய பாடல்களைச் சுட்டலாம். சங்கப் புலவர்கள் அரசனுக்கு இடித்துரைத்துக் கூறும் அறிவுரைகளாகவும் சில சிறுபான்மையான புறப்பாடல்கள் காணப்படுகின்றன. யுத்த நிறுத்தம், சமாதானம் முதலியவற்றிலே சில புலவர்கள் ஈடுபட்டனர். வாழ்க்கையில் பொய்மைகளை வலியுறுத்தி அறிவுரை கூறும் இப் பண்புக்கு மதுரைக் காஞ்சியை நல்ல உதாரணமாகச் சுட்டலாம். கோவூர் கிழாரின் வரலாறு புலவர்கள் போர் நிறுத்த உடன்பாட்டில் ஈடுபட்டமைக்கு நல்ல சான்று ஆகும்.

சங்க இலக்கியங்களில் அற நீதி ஒழுக்கக் கருத்துக்கள் விரவியுள்ளன. இல்லறத்தின் சிறந்த பண்பாகிய விருந்தோம் பலை,

'நன்மனை நனிவிருந்து அயரும்
கைதூவின்மையின் எய்தாம் ஆறே'

என நற்றிணை விளக்குகிறது. மக்களுக்கு அறிவு புகட்டும் நீதிக் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன. ஒழுங்கு தவறிய நெறியில் பொருள் சேர்ப்பவரிடம் அப்பொருள் நிலைத் திராது; இம்மையிலும் பகையாகி நின்று துன்பம் தரும்; மறுமை யிலும் பகையாகி நின்று துயர் தரும்,

'செம்மையின் இகந்து ஒரீ இப் பொருள் செய்வார்க்கு
அப்பொருள் இம்மையும் மறுமையும் பகையாவது
அறியாயோ'

எனக் கலித்தொகை கூறுவதைக் குறிப்பிடலாம் அரசாட் சியின் வெற்றி படைபலத்தில் இல்லை. கடுமையான கோபத் துடன் எதிரிகளைக் கொன்று குவிக்கின்ற யானைப் படைகள் இருந்தால் என்ன? நீண்ட கொடிகள் பறக்கும் பெரிய தேர்ப் படைகள் திரண்டிருந்தால் என்ன? கலங்கா நெஞ்சமும், புகழும் உடைய காலாட் படைகள் கணக்கின்றி இருந்தால் என்ன? இவை கள் அரசாட்சியின் அடிப்படைகள் ஆகா. அரசாட்சியின் வெற் றியும் சிறப்பும் சிறந்த அறநெறியில் தான் இருக்கின்றது என் பதனை,

கடும் சினத்த கொல்களிறும் சதழ் பரிய கலிமாவும்
நெடும் கொடிய நிமிர் தேரும் நெஞ்சுடைய
புகல் மறவரும் என
நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

என்று புறநானூறு புகல்வது போற்றுதற்குரியது.

## சங்க கால இலக்கியப் பண்புகள்

சங்க இலக்கியப் பொருள் மரபினைக் கவனித்த பின்னர் அவ் இலக்கியங்கள் கொண்டமையும் இலக்கியப் பண்புகளை விரி வாக நோக்கலாம். சங்க இலக்கியங்களானவை இயற்கையோடு ஒட்டியமைதல் என்ற பண்பினைக் கொண்டமைந்தன. இக்கால மக்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒட்டியமைந்ததனால் அதைச் சித்திரிக்கப் புகுந்த இலக்கியமும் இயற்கையோடு ஒட்டி

யமைவது தவிர்க்க முடியாததாயிற்று. மேலும் உரிப்பொருளாகிய அன்பின் ஐந்திணையைச் சித்திரிப்பதற்கு கருப் பொருளையே துணையாகக் கொண்டனர் என்பதனாலும் இலக்கியமானது அக் கருப் பொருளாகிய இயற்கையோடு ஒட்டியமைவது இயல்பாயிற்று.

உள்ளதை உள்ளபடி கூறுதல் சங்க இலக்கியங்களின் ஒரு பண்பாகும். சங்கப் புலவர்கள் தாம் கண்டு, கேட்டு, அனுப வித்தவற்றை அப்படியே தமது பாடல்களில் கையாண்டுள்ளனர். விசயத்தைக் கூட்டிக் குறைத்தோ அல்லது இல்லது புனைந்தோ சங்கப் புலவர்கள் செய்யுட் செய்வதில்லை. குறைகளாயினும், நிறைகளாயினும் அவற்றைப் புலவர்கள் அப்படியே சித்திரித்துள் ளனர். 'கனவிற் பாடாது நனவிற் பாடும் கபிலன்' என கபிலப் புலவர் பாராட்டப்படுவதைச் சுட்டிக் காட்டலாம்.

தேவையற்ற வர்ணனைகள் இல்லாதிருத்தல் சங்க இலக் கியங்களின் மற்றோர் பண்பெனலாம். இயற்கையோடு ஒட்டி அமைந்ததனாலும், உள்ளதை உள்ளபடி சொன்னதாலும் விசயம் மிகச் சுருக்கமாகவே அமைந்து விட்டது. விடயத்தை தேவை யற்று, நீட்டி முடக்குகின்ற தன்மை சங்கப் புலவர்களிடம் இல் லாததனால் அதனால் ஏற்படும் அநாவசிய வர்ணனைகள் சங்கப் பாடல்களில் காணப்படவில்லை. இதனால் சங்க இலக்கியங்களில் வர்ணனைகள் இல்லை எனக் கருதக் கூடாது வர்ணனைகள் இருந்தன வாயினும் தேவை கருதித் தான் அவை பயன்பட்ட னவே தவிர தேவையற்றுக் கையாளப்படவில்லை.

உள்ளதை உள்ளபடி கூறியதனாலும் தேவையற்ற வர் ணனைகள் இல்லாதிருந்ததனாலும் விடயம் மிகச் சுருக்கமாக அமைந்துவிட அதனால் அது ஒரு பாடலிலேயே சொல்லி முடிக் கப்பட்டது. இதனை ஒரு துறை ஒரு செய்யுளில் குறிப்பிடுதல் எனச் சொல்லலாம். புலவனது ஆளுமையைப் பொறுத்தும் சொல்லப்படும் முறையைப் பொறுத்தும் பாடல் வரிகளது தொகை வேறுபட்டதாக அமைந்தது. குறுந்தொகைப் பாடல் களுடைய சிற்றெல்லை நான்கு வரிகளையும் பேரெல்லை ஏழு வரிகளையும் கொண்டு அமைய நற்றிணைப் பாடல்கள் ஒன்பது வரிகளைச் சிற்றெல்லையாகவும், பன்னிரண்டு வரிகளைப் பேரெல்லையாகவும் கொண்டமைய, அகநானூற்றுப் பாடல்கள் பதின்மூன்று வரிகளைச் சிற்றெல்லையாகவும், முப்பத்திரண்டு வரிகளைப் பேரெல்லையாகவும் கொண்டமைந்தன இவ்வாறு பாடல்வரிகளது தொகை வேறுபட்டாலும் இவ் இலக்கியங்கள் அனைத்தும் ஒரு துறையை ஒரு செய்யுளில் சொல்லுதல் என்ற பண்பினைக் கொண்டமைந்தன.

இயற்கை உவமைகளையும், வர்ணனைகளையும் கையாளுதல் என்ற பண்பு சங்க இலக்கியங்களின் மற்றொரு பண்பெனலாம். சங்க காலப் புலவர்கள் தாம் எடுத்துக் கொண்ட பொருளினை விளக்க இயற்கை உவமைகளையும் வர்ணனைகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டனர். முன்பின் அறிமுகமில்லாத தலைவனும் தலைவியும் சந்தித்து அவர்கள் உள்ளங்கள் இரண்டறக் கலந்ததனை தலைவன் சொல்வது போல வரும்

'யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயர் நீர் போல
அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே.'

என்ற குறுந்தொகைப் பாடலில் செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் அந் நிலத்தின் நிறத்தோடு இரண்டறக் கலந்து கொண்டன என்று தலைவன் குறிப்பிடுகின்றான். இங்கு உள்ளங்கள் இரண்டும் பிரிவின்றிக் கலந்தமை தலைவனால் விளக்கப்படுகிறது உள்ளங்கள் கலத்தலாகிய புணர்தல் பொருளை விளக்க செம்மண் நிலம், மழைநீர் என்னும் இயற்கை அமைப்புக்கள் துணையாவதைக் காணலாம்.

திருமணத்தின் அவசியத்தைத் தலைவனுக்கு வலியுறுத்த வந்த தோழி அத் தலைவனது நாட்டு வளத்தை வர்ணிக்கின்றாள். நன்றாகப் பழுத்த பலாப்பழம், நன்றாகக் கனிந்த வாழைப்பழம் என்பவற்றின் சாறு சுனைநீரில் விழ அந் நீரை உண்ட குரங்கு மரங்களில் ஏறிச் செல்வதை விடுத்துப் புல்வெளிகளில் படுத்துறங்குகின்றது. இவ்வாறு விலங்குகளும எளிதாக இன்பத்தை அடையக்கூடிய வளமான நாட்டை சேர்ந்தவனே என வருகின்ற அகநானூற்று வர்ணனையில் சுனைநீரை உண்டதனால் தனது கடமையை மறந்து உறங்கிவிடும் குரங்கைப் போல தலைவியை எளிதாகச் சந்திக்க முடிந்ததால் தனது கடமையாகிய திருமண முயற்சியை மறந்தவனாகத் தலைவன் இருக்கின்றான் என்ற கருத்து உணர்த்தப்படுகின்றது. இக் கருத்தினை உணர்த்துவதற்கு இயற்கை வர்ணனை துணையாவதை காணலாம்.

உள்ளுறை உவமைகளையும், இறைச்சிப் பொருளையும் கொண்டிருத்தல் மற்றொரு பண்பாகும். நேரடியான ஒரு கருத்தையும், சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய உள்ளுறையான உவமைகளைக் கொண்டிருத்தல் உள்ளுறை

உவமையாகும். உதாரணம் திருமணத்தின் அவசியத்தை சொல்ல வந்த தோழி தலைவியின் நிலை பற்றிக் கூறும்,

'சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கியவாங்கு இவள்
உயர் தவச் சிறிது காமமோ பெரிது'

என்ற குறுந்தொகை பாடலில் சிறிய காம்பில் பெரிய பழம் தொங்குவது போல தலைவியினது சிறிதான உயிரில் உன்மேற் கொண்ட பெரிதான காதல் தங்கியிருக்கிறது என்ற ஒரு கருத்தும் தலைவனிற்குப் புரிந்து கொள்ளக் கூடியதாக சிறிய காம்பில் பெரிய பழம் தொங்குவது ஆபத்தானது. காம்பு முறிந்து பழம் கீழே விழுந்து பயனற்றுப் போகலாம். அதே போல் எளிதாகப் போக்கிக் கொள்ளக் கூடிய வலிமையற்ற தலைவியின் உயிரில் காதல் தங்கியிருப்பது ஆபத்தானது. அவ்வுயிர் போகும் நிலை ஏற்படுவதற்கு முன் விரைந்து திருமணத்தைச் செய்யென்ற உள்ளுறையான கருத்தும் காணப்படுகிறது. இத்தகைய உள்ளுறை உவமங்களும் சங்க கால அகப் பாடலிற் கூடுதலாகக் காணப்படு கின்றன.

நேரடியான கருத்தொன்றும், சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மறைமுகமான ஒரு கருத்தும் கொண்டுள்ள சொற்றொடர் இறைச்சிப் பொருள் தருவதாக குறிப்பிடப்படுகின்றது. அகநானூற்றுப் பாடல் ஒன்று திருமணத் தின் அவசியத்தை தலைவனிற்குக் கூறுவதாக அமையும்.

'வேங்கையும் ஒள்ளினர் விரிந்தண நெடுவெண்
திங்களும்
ஊர் கொண்டன்றே.'

என்ற வரிகளில் வேங்கையும் பூக்கத் தொடங்கி விட்டது. நில வும் பகல் போலக் காய்கின்றது என்ற கருத்தும், தலைவனிற்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாக கார் காலத்தில் வேங்கைகள் பூக்கும். இதனால் தினைப்புல அறுவடை முடிந்து விட்டது என்றும் எனவே பகலிற் தலைவியைச் சந்திக்க முடியாதென்றும் நிலவும் பகல் போற் காய்ந்ததனாலும் இரவிலும் தலைவியைச் சந்திக்க முடியாது என்றும் ஆகவே அவளைச் சந்திக்க ஒரே வழி விரைந்து திருமணத்தை செய்து கொள்ள வேண்டியது என்ற கருத்தும் அமைந்துள்ளன.

எளிய சிறிய சொற்களைக் கொண்டு பொருள் விளக்குதல் சங்க இலக்கியங்களின் ஓர் பண்பாகும். போர்க் களத்தில் போர் புரிந்து கொண்டிருந்த அதிகமான் தனக்குப் பிறந்த குழந்தை

யைப் பார்ப்பதற்காக அரண்மனைக்கு வந்த போது அவனது தோற்றப் பொலிவினை,

'கையது வேலே காலது புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்'

என ஔவையாரால் பாராட்டப்படுகின்றது. கையிலே வேலைத் தாங்கியவனாகவும், காலிலே கழல் அணிந்தவனாகவும், உடம் பெங்கும் வியர்வையாகவும், கண்டத்திலே பசுமையான புண் கொண்ட அவனது தோற்றப் பொலிவினை சாதாரண சிறிய சொற்களைக் கொண்டு பொருள் விளக்குவது சங்க இலக்கியத் தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

தொகைகளையும், அடைமொழியையும் கொண்டு சுருங் கிய வடிவில் பாடல்களை அமைத்தல் சங்க இலக்கியங்களின் மற்றொரு பண்பெனலாம்.

'செறுத்த செய்யுள் செய் செந்நாவின்
வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்.'

என வரும் பாடலின் செறுத்த என்னும் அடைமொழிகளால் ஆன வடிவில் செய்யுளின் தன்மை முழுதாக விளங்குவதாக அமைகிறது. செய்த, செய்கின்ற, செய்யும் செம்மையாகிய நாவென்கின்ற நீளமான தொடர் வினைத் தொகையையும், பண்புத்தொகையையும் அமைப்பதனால் செய்செந்நாவென மருங்கி வருவதையும் கவனிக்கலாம். எனவே இத்தகைய தொகைகள், அடைமொழிகளைச் சேர்த்து சுருங்கிய வடிவில் பாடப்படுவது சங்க இலக்கியங்களின் சிறப்பம்சமாகின்றது.

சங்க இலக்கியங்களிற் கூறப்படும் முக்கியமான பண்பு இரங்கிப் பாடலாகும். ஒல்லையூர் நாட்டு மன்னனான பெருஞ் சாத்தன் என்ற பெருமன்னன் இறந்த போது குடவாயில் கீர்த் தனார் பாடிய பாடல் தமிழ்க் கவிதை வரலாற்றில் தன்னுணர்ச் சிப் பாடல்களின் தோற்றுவாயாக அமைந்தது.

'இளையோர் சூடார்
வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கி
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்பு
முல்லையும் பூர்த்தியோ ஒல்லையூர் நாடே;

என அமையும் பாடலைச் சுட்டிக் காட்டலாம். இன்று நம்மி டையே வழங்கும் ஒப்பாரிப் பாடல்களிலும் இத்தகைய தன்னு

ணர்ச்சிப் பாடல்களைக் காணலாம். எனவே தன்னுணர்ச்சிப் பாடல்களைக் கொண்டு அமைதல் சங்க இலக்கியப் பண்பாயிற்று.

சங்கப் பாட்டுக்களிற் பாடப்படும் பொருள்களானவை பலவாறு சொல்லுதல் கூவி அழைத்தல், புலம்புதல், இரங்குதல் என்பனவாக அமைந்தன. இத்தகைய பொருட்களைச் சொல்ல அகவல், வஞ்சி முதலான பாவகைகளே பொருத்தமானவை எனக் கண்டதனால் அவற்றையே கூடுதலாகக் கையாண்டனர். எனவே அகவல், வஞ்சி பாவகையாகக் கையாளுதல் என்ற பண்பு சங்க இலக்கியங்களுக்குரிய தாகும்

சங்க இலக்கியங்கள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, கரந்தை என போர் ஒழுக்கத்தைப் பகுத்துப் பாடியுள்ளது. பன்மொழிகளிலும் உள்ள வீரயுகப் பாடல்களை ஆராய்ந்த சி. எம். பௌரா என்பவர் தமது 'Heroic Poetry' என்ற நூலில் வீரயுகப் பாடல்களுக்கு உரிய பொதுவான எட்டு அமைப்புக்களைப் பற்றிக் கூறுகின்றார். அவை அனைத்தும் சங்க இலக்கியத்தில் செறிந்துள்ளன. கிரேக்க வீரயுகப் பாடல்களில் யுலிசெஸ். தீசியஸ், புரோமித்தியஸ் போன்ற சிலரது வீரமும் புகழும் பெரிதும் போற்றப்படுவதைப் போலவே சங்கப் பாடல்களில் கரிகாலன், நெடுஞ்செழியன், நெடுஞ்சேரலாதன் போன்ற சிலரது பெருமையே பெரிதும் பேசப்படுகிறது என அறிஞர்கள் குறிப்பிடுவர்.

நாலடி நான்மணி நானாற்பதைந்திணை முப்
பால் கடுகங் கோவை பழமொழி - மாமூலம்
இந்நிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பதூஉம்
கைந்நிலையுமாங் கீழ்க்கணக்கு

# சங்கம் மருவிய காலம்

(சங்ககாலத்தை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் காலப் பகுதி சங்கம் மருவிய காலம் ஆகும். கி.பி 4 - ம் நூற்றாண்டு தொடக்கம் 6 - ம் நூற்றாண்டு வரையுள்ள 300 ஆண்டுகளை உள்ளடக்கியது என பேராசிரியர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவர்.)

சங்கம் மருவிய காலத்தில் அறநூல்கள் பெருந் தொகையாக எழுந்தமைக்குரிய காரணங்கள் :

சங்கம் மருவிய காலச் சமுதாயச் சூழ்நிலை அக்காலத்தே அற இலக்கியங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன எனலாம். சங்க காலத்தே குழுமுறை அமைப்புக்களும், அவற்றினது போட்டிகளும் மலிந்த குறுநில மன்னராட்சி நிலவிய சமுதாய நிலை காணப்பட்டது. மன்னராட்சி முறையிலிருந்தும் வேறுபட்டு அரசு என்கின்ற நிறுவனத்தினது தோற்றம் சங்கம் மருவிய காலத்தில் உருப் பெறுவதனை அக்கால இலக்கியமான திருக்குறள் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. திருக்குறளில் இருபத்தைந்து அதிகாரங்களில் அரசினது தோற்றம், தன்மை, செயற்பட வேண்டிய முறை என்பன விரிவாகப் பேசப்படுகின்றன.

'படை குடி கூழ்நட்பு அமைச்சு அரண்
இவையாறும் உடையான் அரசருள் ஏறு.'

என்று அரசினது தோற்றத்தையும்,

'குடிதழீஇ கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.'

என அரசு செயற்பட வேண்டிய முறைமையினையும் திருக்குறள் தெளிவாக விளக்குகின்றது. இவ்வாறு 'அரசியல் பிழைத்தோர்க்கு

அறங் கூற்றாகும்' எனச் சிலப்பதிகாரம் அரசு செயற்படவேண்டிய முறைமையினைத் தெளிவுபடுத்துகின்றது. இவற்றிலிருந்து சங்கம் மருவிய கால அரசினது தோற்றத்தைக் காண முடிகின்றது. இவ் அரசானது உறுதியானது ஆகவும், செயற்திறன் மிக்கதாகவும், மக்கள் நலன் பேணுவதாகவும் அமைவதற்கு அங்கு அமைதி சமூகம் மிக்க சூழ்நிலை அவசியமாகிறது. இந்நிலையில் அத்தகைய சூழ்நிலையை உருவாக்கித் தரவல்லது அற ஒழுக்கப் போதனைகளே என உணர்ந்த சமுதாயம் அக் காலத்தே அற இலக்கியங்களை பெருந் தொகையாக தோற்றுவித்தது.

சங்க காலத்திலே இருந்த வணிக முறையானது சங்கம் மருவிய காலத்தே பெரு வணிக வர்க்கமாக எழுச்சி பெற்றது. சிலப்பதிகாரம் அக்காலப் பெருவணிக வர்க்க எழுச்சியின் உன்னத நிலையினைக் காட்டுகின்ற இலக்கியமாக விளங்குகின்றது. 'ஏசாச்சிறப்பின் இசை விளங்குப் பெருங்குடி மாசாத்து வணிகன் —' எனக் கண்ணகி கூறுவதும், பெருவணிக குலத்தைச் சேர்ந்த புனிதவதியாரது வரலாறும் அக்கால வணிக குல எழுச்சியினைப் புலப்படுத்துகின்றன. வாணிகம் சிறப்புற நடைபெறுவதற்கு அமைதி மிக்க சூழ்நிலை அவசியமாகின்றது. வாணிகத்தின் மூலம் செல்வத்தைப் பெருக்க வேண்டுமாயின் அவ் வாணிகமும் அற வழியிலே செய்யப்பட வேண்டும். இதனையே,

'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்'

எனத் திருக்குறள் வலியுறுத்துகிறது. பெரு வணிக வர்க்க எழுச்சி பெற்ற சமுதாயச் சூழ்நிலை அக் காலத்தே அற இலக்கியங்கள் பெருந்தொகையாக எழுவதற்கு வழிவகுத்தது.

சங்கம் மருவிய காலத்தே தமிழகத்தைச் சேராத அந்நியர்கள் ஆகிய களப்பிரர் தமிழ் நாட்டைக் கைப்பற்றிக் கொடுங்கோன்மை செய்தனர். இந் நிலையில் தமிழ்ச் சமுதாயம் களப்பிரர்களது கொடுங்கோல் ஆட்சியினாலும், வருணப் பாகுபாட்டினாலும், மணவினை ஒழுக்கங்களினாலும் சீர்கேடு அடைந்தது. தன்னிலை குன்றித் தாழ்வுபட்ட தமிழ்ச் சமுதாயத்தை மேல் நிலைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டமை அக் காலத்தே பல அற நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

சங்கம் மருவிய காலத்தில் காணப்பட்ட சமுதாயச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் எண்ணங்களையும், மன உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவர்களின் நல்வாழ்வுக்கு அறமே அவசியமானது எனக் கண்டு தம் மதக் கருத்துக்களாக அற

ஒழுக்கக் கருத்துக்களைத் தமிழகத்திலே பிரசாரம் செய்ய சமண பௌத்த துறவிகள் முற்பட்டனர். சங்க காலத்தே ஏற்பட்ட போர்களினாலும், சங்கம் மருவிய கால களப்பிரர் படையெடுப்பினாலும் தமிழ் மக்கள் ஓயாத துன்பத்தையும், தொடருகின்ற மரண ஓலங்களையும், துயரங்களையும் அனுபவித்த கால கட்டத்தே தோன்றிய சமண, பௌத்த மதங்கள் அம் மக்களை மேல் நிலைப் படுத்த அறமே சிறந்த வழி எனக் கண்டன.

புறநானூற்றுக் காலப் போர்களினாலும், களப்பிரர் படையெடுப்பாலும் கலங்கிய தமிழகம் அன்பைத் தன் உயிராகக் கொண்ட சமணத்திடம் ஆறுதலை நாடியது எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கூறுவது புறநானூற்றுக் காலப் போர்களினாலும் காதல் வாழ்க்கை, வீர வாழ்க்கை என்பவற்றில் ஊக்கம் கெட்டு நொந்த தமிழ் மக்களுக்கு இச் சமண, பௌத்த மதக் கருத்துக்கள் நல்விருந்தாக அமைந்ததைக் காட்டுகிறது.

தமிழர் வரலாற்றில் ஆரம்ப காலமாகிய சங்க கால மக்கள் வாழ்க்கையிலே காணப்பட்ட குறைபாடுகளான அக ஒழுக்கங்களில் காணப்பட்ட நேர்மையீனமும் போரினது கொடுமையும் சீரழிவும் சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்தது எனலாம். சங்க கால மக்களின் வாழ்க்கை மிக சிறப்பானதெனக் கூறி வந்த போதிலும் அக்கால இலக்கியங்களை நுணுகி நோக்கும் போது சங்க கால மக்களிடையே விரக்தி, வேதனை, துன்பம், துயரம் முதலியன மலிந்து இருந்ததனை அவதானிக்க முடிகிறது. உயர்ந்த பண்பாகப் போற்றப்பட்ட காதல் ஒழுக்கத்தின் பின்னணியில் நிறைவேறாத காதல்களும், கைகூடாத திருமணங்களும் நிகழ்ந்தமைக்கு;

'யாருமில்லை தானே கள்வன் தானது பொய்ப்பின்
யானவன் செய்கோ திணைத்தாலன்ன சிறு
பசுங்கால ஒழுகுநீர் ஆரல் பார்க்கும் குருகும்
உண்டு தான் புணர்ந்த ஞான்றே.'

எனத் தலைவனால் வஞ்சிக்கப்பட்ட தலைவி தன்துயர நிலையைத் தோழிக்குக் கூறுவதாக அமையும் குறுந்தொகைச் செய்யுளை ஒரு பதச் சோறாகக் குறிப்பிடலாம்.

வீரமென்றும், புறமென்றும் புகழ்ந்து போற்றும் வாழ்க்கையின் பின்னணியில் ஓயாத அழுகையும், தொடருகின்ற மரண

ஓலங்களும் நிலவியமைக்கான சான்றுகள் பல உள. புறநானூற்றில் வரும்;

'கெடுக சிந்தை கடுதிவள் துணிவே

--------------------------------------------

--------------------------------------------

இன்னும் போர்ப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
ஒரு மகன் அல்லது இல் என
பாறுமயிர் குடுமி நீவி வேல்கை கொடுத்து
செருமுனை நோக்கி செல்க கென விடுமே.'

என்ற பாடலில் புறநானூற்றுப் புலவன் வீரத் தாயை வியந்து போற்றினாலும் அது குடும்பத்தின் பரிபூரண அழிவின் தன்மையினையே சுட்டி நிற்கிறது எனச்சில வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுவர். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்த மக்கள் அகிம்சை, நீதி; அறம் ஆசாரம் என்பவற்றை அவாவியதில் ஆச்சரியம் இல்லை எனலாம். பொறியாலும், புலனாலும், உள்ளுணர்வுகளாலும் கவர்ச்சியடைந்து காதல் வாழ்க்கையிலும், வீர வாழ்க்கையிலும், ஊக்கங் கொணடு வாழ்ந்த தமிழ் மக்கள் அவ் வாழ்க்கையில் துன்பத்தைக் கண்டனர் தம்முடையதும் தம் முன்னோருடையதும் வாழ்க்கைமுறையிலே அதிருப்தி நிலை ஏற்பட்டிருக்காது விட்டால் புறநானூறு தோன்றிய தமிழ நாட்டில் திருக்குறள் தோன்றியிருக்க முடியாது என பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை அவர்கள் கூறுவது சங்க காலக் குறைபாடுகள் சங்கம் மருவிய காலத்தில் அற நூல்கள் பெருந் தொகையாகத் தோன்றக் காரணமாய் இருந்ததை விளக்குகின்றது.

## சங்கம் மருவிய கால இலக்கியங்களும், அவற்றினது பாடு பொருளும்

சங்கம் மருவிய கால இலக்கியங்கள் அவை கூறும் பாடு பொருளுக்கமைய நான்கு வகையாகப் பாகுபடுத்தப்படுகிறது:

1) அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம்
2) அகம்
3) புறம்
4) பக்தி

அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம் என்பவற்றை வலியுறுத்துவன ஆக திருக்குறள், நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஏலாதி, சிறுபஞ்ச

மூலம், திரிகடுகம், ஆசாரக் கோவை, முதுமொழிக் காஞ்சி பழமொழி நானூறு ஆகிய கீழ்க் கணக்கு நூல்கள் பதினொன் றும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரட்டைக் காவியங் களும் அமைகின்றன.

ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றி ஐம்பது, கார் நாற்பது, கைந் நிலை ஆகிய ஆறு இலக்கியங்களும் அகத்திணையை வலியுறுத்து கின்ற அக இலக்கியங்களாக அமைகின்றன.

களவழி நாற்பது என்கின்ற இலக்கியம் போரைப் பற்றிப் பாடுகின்ற புற இலக்கியமாக அமைகிறது.

காரைக்கால் அம்மையாரினது அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் என்பவையும், முதல் ஆழ்வார்களாகிய பொய்கை ஆழ்வார், பூதத் தாழ்வார், பேயாழ்வார் முறையே பாடிய முதலாம், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளும் பக்தி இலக்கியங்க ளாக அமைகின்றன.

இவ் இலக்கியங்களுள் தலையாய அற இலக்கியமாகக் கொள்ளப்படுவது திருக்குறளாகும். 'அறத்தினூங்கு ஆக்க மில்லை' என எல்லா நன்மைகளுக்கும் அறமே வழி எனக் காட்டி,

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்'

என அறத்திற்கு இலக்கணம் வகுத்து 'சிவிகை பொறுத்தா னோடு ஊர்ந்தான்' என அறத்தின் பயனை விளக்கி 'செயற் பால தோறும் அறனே' எனச் செய்யப்பட வேண்டியது எல் லாம் அறமாகும் என அறத்தை வலியுறுத்துகின்றது இவ்வாறே நாலடியாரில் அறன் வலியுறுத்தலில் அறம் வலியுறுத்தப்படு கின்றது ஈற்றடியில் பழமொழி ஒன்றினைக் கொண்டமையும் பழமொழி நானூறு அப் பழமொழியை வாழ்வோடு தொடர்பு படுத்தி அறத்தினை வலியுறுத்துகின்றது. ஏலாதி, சிறுபஞ்ச மூலம், திரிகடுகம் என்னும் மருந்துப் பெயர்கள் கொண்டமை யும் இலக்கியங்கள் உடலிற்கு உரம் தரும் மருந்தினைப் போன்று உள்ளத்திற்கு உரம் தரும் அறக் கருத்துக்களை வலியுறுத்துவன வாக அமைகின்றன.

'நலத்துக் கணியென்ப நாணம் தனக்கணியாம் தன் சொல் உகத்த அறம்' என நான்மணிக் கடிகை அறம் வலியுறுத்துகின் றது. வாழ்க்கைக்கு உதவாதவற்றை எடுத்துக் கூறி, அறத்தை

வலியுறுத்துவதாக அமையும் இன்னா நாற்பது 'ஆற்றலிலாதான் பிடித்த படை இன்னா' எனக் கூறி விளக்குகிறது. வாழ்க்கைக்கு வேண்டியவற்றை எடுத்து விளக்கி மக்களை அற வழிப்படுத்தும் இலக்கியமாக அமையும் இனியவை நாற்பது 'குழவி தளர் நடை காண்டலினிதே' என அறத்தை வலியுறுத்துகிறது.

மனிதருக்குரிய அறங்களை எடுத்து விளக்கும் ஆசாரக் கோவை அவ் ஆசாரங்களில் தவறாதவர் நற்குடிப் பிறப்பு, நீண்ட குடி வாழ்க்கை, செல்வம், வனப்பு முதலிய எட்டுவகை நன்மை களைப் பெறலாம் எனக் கூறி அறத்தை வலியுறுத்துகின்றது.

'ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலில் சிறந்தது ஒழுக்கமுடைமை' 'ஈரத்தினறிப ஈரமுடைமை ஈகையின் அறிப' என அறத்தை வலியுறுத்துவனவாக முதுமொழிக் காஞ்சி அமை கிறது.

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை யும் அறத்தை வலியுறுத்தும் கருத்துக்களைக் கொண்டமைகின் றன. கதை நிகழ்ச்சிகள் வாயிலாகவும், பாத்திரங்கள் வாயிலாக வும் இக் காவியங்களில் அறம் வலியுறுத்தப்படுவதனைக் காண முடிகிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என சிலம்பும், பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும் உலகியற்கை என்றும், தவத்திறன் அறுகை அறமே என மணிமேகலையும் அறத்தை வலியுறுத்துவதனைச் சுட்டிக் காட்டலாம்.

சங்கம் மருவிய காலத்தில் அகத்திணை மரபினைப் பேணும் இலக்கியங்களில் ஐந்திணை ஐம்பது;

'சுனைவாய் சிறுநீரை எய்தாதென்று எண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டி கலைமான் தன்
கள்ளத்தினூச்சும் சுரமென்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.'

எனக் காதல் காட்சியினைப் படம் பிடித்துக் காட்டுவதனைச் சுட்டிக் காட்டலாம். திணைக்குப் பதினான்கு பாடல்களாக ஐந்து திணைக்கும் எழுபது பாடல்களில் அகக் காட்சியைச் சித் திரிப்பதாகப் பாடப்பட்ட இலக்கியமே ஐந்திணை எழுபது ஆகும், திணைக்கு முப்பது பாடல்களாக ஐந்திணைக்கும் நூற்றி ஐம்பது பாடல்களைக் கொண்ட திணை மாலை நூற்றிஐம்பது 'முணிந்தார் முனிவொழிய செய்யுட்கண் முத்துக்களீந்தார் கள

வியற் கொள்கை" என இதனைப் பாடிய புலவர் போற்றப்படு வது இவரின் அகப் பொருள் சித்திரிப்பை புலப்படுத்துகின்றது. திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் ஐம்பது பாடல்களைக் கொண்ட திணைமொழி ஐம்பது அகப் பொரு ளைச் சித்திரிக்கிறது. முல்லைத் திணையைப் பற்றி நாற்பது வெண்பாக்களில் அகப் பொருட் சுவை ததும்பப் பாடப்பட்ட அக இலக்கியமாக அமைவதே கார்நாற்பது ஆகும். திணைக்குப் பன்னிரண்டு பாடல்களாக ஐந்திணைக்கும் அறுபது பாடல்களைக் கொண்ட அக இலக்கியமாக அமையும் கைந்நிலை இறைச்சிப் பொருளும் உள்ளுறை உவமமும் கொண்டு விளக்குவதனை 'எள் ளுறு போல் தினிய பழம் கவுற் கொண்டு ஒல்லென ஓடு மலை நாடன்' எனச் சித்திரித்துள்ளதனைக் குறிப்பிடலாம். போர்க்கள வர்ணனை பற்றிய நாற்பது வெண்பாக்களைக் கொண்ட கள வழிநாற்பது அக்காலத்து புற இலக்கியமாக அமைகிறது.

சங்கம் மருவிய காலப் பிற்பகுதியில் சமண, பௌத்த மதங் களுக்கு எதிரான சைவ, வைஷ்ணவங்கள் பக்தியை ஆரம்பித்தன. இப் பக்தி இலக்கியங்களில் இராவணனை நசுக்கியமை, அடிமுடி காணாது ஒளிப் பிழம்பாக எழுந்து நின்றமை, மன்மதனை எரித்தமை போன்ற சிவனது பெருமை பேசும் புராண இதிகாசக் கதைகளையும், ஹம்சனை வதைத்தமை, அரக்கியர்களைக் கொன றமை, காளிங்க நர்த்தனம் புரிந்தமை போன்ற விஷ்ணுவினது பெருமை கூறும் புராண இதிகாசக் கதைகளும் கையாளப்பட்டன. 'காலையே போன்றிலங்கும் மேனி ——' எனக்காரைக் கால் அம்மையாரும் 'அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடு திரியாம்' என முதலாழ்வார்களும் தமது பக்தியுணர்வினை வெளிப்படுத்தியுள்ளமையைச் சுட்டிக் காட்ட லாம்.

## சங்கம் மருவிய கால இலக்கியப் பண்புகள்

சங்கம் மருவிய கால இலக்கியங்களைக் கொண்டு அவை சுட்டும் இலக்கியப் பண்புகளைக் கவனிக்க வேண்டி உள்ளது. சங்கம் மருவிய கால இலக்கியப் பண்புகளாக,

சமயப் பிரசார வாகனமாக அமைதல்.

அற இலக்கியங்கள் பொருளாதல்.

வெண்பா பெருவழக்காதல்.

துறைகள் தொடர்ந்து வரச் செய்யுள் இயற்றுதல்.

வடமொழிப் புராண இதிகாசக் கதைகளைக் கையாளு தல்.

விருத்தப் பாவினதும் பதிக வடிவத்தினதும் தோற்றத்தினைக் கொண்டிருத்தல்.

அந்தாதி தோற்றம் பெறல்.

இறைவனுக்கு அகவுருத் தோற்றம் கொடுத்தல்.

காவிய இலக்கியத் தோற்றத்தைக் கொண்டிருத்தல்;

தமிழில் உரை நடையைக் கொண்டிருத்தல்;

என்பன அமைகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த மதங்கள் தங்களுடைய மதக் கருத்துக்களாக அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம் என்பவற்றைப் போதித்தன. இம்மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு இலக்கியங்களையே கையாண்டதனால் இம்மதக் கருத்துக்களைச் சுமந்து வருவனவாக இக் கால இலக்கியங்கள் அமைந்தன. இவ்வாறே மருவிய காலப் பிற்பகுதியில் ஊற்றெடுத்த சைவ, வைஷ்ணவ மதங்கள் தம் மதக் கருத்துக்களாக பக்தியைப் போதித்தன. சங்கம் மருவிய காலத்தே இப் பக்தி உணர்வினை மககள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு சைவ, வைஷ்ணவ அடியார்கள் இலக்கியங்களையே கையாண்டனர் சங்கம் மருவிய காலத்தில் சமணம், பௌத்தம், சைவம், வைஷ்ணவமாகிய மதங்கள் தம் பிரசார நடவடிக்கைகளுக்கு இலக்கியங்களைப் பயன்படுத்தியதனால் அம் மதக் கருத்துக்களைச் சுமந்து வருவனவாக இலக்கியங்கள் அமைந்தன.

தமிழ் இலக்கிய சரிதத்தில் வேறு எக்காலப் பகுதியிலும் இல்லாதவாறு பெருந்தொகையான அற இலக்கியங்கள் இக் காலப் பகுதியிலேயே தோற்றம் பெற்றன. இக் காலப் பகுதியிலே செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த மதங்கள் தம் மதக் கருத்துக்களாக அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கக் கருத்துக்களைப் போதித்ததனால் இக் காலத்தே அற ஒழுக்கக் கருத்துக்கள் அதிகமாகக் காணப்பட்டன. இதனாலேயே பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை அவர்கள் இக் காலத்தை அற நெறிக் காலம் என அழைக்கிறார் எனபதுவும் கவனிக்கத்தககது.

மனிதரிடத்திலே மேலோங்கிக் காணப்படுகின்ற அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய அழுக்கை அகற்றி மனத்தை வெண்மைப்படுத்த, அறக் கருத்துக்களைப் போதித்த, சங்கம் மருவிய காலத்திலே அக் கருத்துக்களைப் போதிப்பதற்குப் பொருத்தமான பாவகை ஒன்று தேவைப்பட்டது. வெண்மை தூய்மையைக் குறிப்பதால் தூய்மையான அறக் கருத்துக்களைச்

சொல்வதற்குத் தூய்மையான பாவாகிய வெண்பா இக்காலத்தே கையாளப்பட்டது. இவ்வகையில் அறநூல்கள் மட்டுமன்றி அகத் திணை நூல்களும் வெண்பாவிலேயே பாடப்பட்டது. ஆசிரியப் பாவினால் ஆக்கப்பட்ட சிலப்பதிகாரம் இடையிடையே வெண் பாவைக் கொண்டு காணப்படுவதும் பக்தியுணர்வு அனுபவங் களைச் சொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அற்புதத் திருவந் தாதி முதலாம், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளும் வெண்பாவிற் பாடப்பட்டமை வெண்பா பெருவழக்காதல் என்ற பண்பினையே சுட்டி நிற்கிறது எனலாம்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நிலையில் உலகியல் இன் பங்களுள் ஈடுபாடு கொண்ட சங்க சமுதாயத்திலிருந்து வேறு பட்டு, வாழ்வு ஆன்மீக இலட்சியத்தை உடையது என்ற நிலை சங்கம் மருவிய கால சமுதாயத்தில் இருந்தது. ஆன்மீக இலட் சியத்தைத் தொடர்ந்து சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்ட தனால் தாம் எடுத்துக் கொண்ட விடயத்தை விளக்க அதனைப் பத்து அல்லது பதினொரு பாடல்களிலே சொல்லுகின்ற நிலை ஏற்பட்டது. திருக்குறள், நாலடியார் போன்ற இலக்கியங்கள் ஒவ்வொரு விடயத்தையும் இத்தகைய தொடர் நிலைச் செய்யுட் களிலேயே கொண்டு அமைந்துள்ளன. காரைக்கால் அம்மை யாரும், முதல் ஆழ்வார்களும் தமது பக்தி உணர்வு அனுபவங் களைச் சொல்வதற்கு இத்தகைய தொடர்நிலைச் செய்யுட் களையே கையாண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்த சைவ, வைஷ்ணவ அடியார்கள் தங்கள் பக்தி உணர்வு அனுபவங்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு ஓர் உத்தியாக வடமொழிப் புராண இதிகாசக் கதைகளைக் கையாண்டனர். இராவணனை நசுக்கியமை, அடிமுடி காணாது ஒளிப் பிழம்பாக எழுந்து நின்றமை, மன்மதனை எரித்தமை போன்ற சிவனது பெருமை பேசும் புராண இதிகாசக் கதைகளைக் காரைக்கால் அம்மை யாரும்; ஹம்சனை வதைத்தமை, அரக்கியர்களைக் கொன்றமை, காளிங்க நர்த்தனம் புரிந்தமை போன்ற விஷ்ணுவினது பெருமை பேசும் புராண இதிகாசக் கதைகளை முதல் ஆழ்வார்களும் கையாண்டுள்ளமையைச் சுட்டிக் காட்டலாம்.

விருத்தப் பாவினதும், பதிக வடிவத்தினதும் தோற்றத் தினைக் கொண்டிருத்தல் சங்கம் மருவிய கால இலக்கியங் களுக்கு உரிய சிறப்பம்சமாகும். அற ஒழுக்கங்களைச் சொல் வதற்குப் பயன்பட்ட வெண்பா உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பிர வாகிக்கும் பக்தியுணர்வு அனுபவங்களைச் சொல்வதற்குப் பொருத் தமற்றுக் காணப்பட்டதனால் அற்புதத் திருவந்தாதியை வெண்பா

விற்பாடிய காரைக்கால் அம்மையார் திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகத்தை விருத்தப் பாவில் பாடினார். இவ்வாறே உள்ளத்தில் ஊற்றெழும் பக்தி உணர்வு அனுபவங்களை முழுமையாகச் சொல்வதற்கு அம்மையாருக்கு ஓர் இலக்கிய வடிவம் தேவைப்பட்டதனால் பதிக வடிவத்தையும் தோற்றுவித்தார். முதலாவது பாடலில் ஆரம்பித்து ஆறாவது, ஏழாவது பாடலில் உச்ச நிலை அடைந்து எட்டாவது, ஒன்பதாவது பாடலில் கீழிறங்கி பத்தாவது பதினோராவது பாடல்களில் மூடிவடைவதாக இப் பதிக வடிவம் அமைகிறது.

ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாத உள்ளத்தால் உவந்து உணரத்தக்க இறைவன் மீது அன்பு செலுத்துவதற்கு இறைவனுக்கு ஒரு வடிவம் தேவைப்பட்டது. காரைக்கால் அம்மையாரும். முதலாழ்வார்களும் தமது உள்ளத்தே ஊற்றெடுத்துப் பிரகாசிக்கும் அன்பினைச் சொல்வதற்கு இறைவனுக்கு அகவுருத் தோற்றத்தினை ஆக்கிக் கொடுத்து தமது பக்தி உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தினர். காரைக்கால் அம்மையார் தனது அற்புதத் திருவந்தாதியில் 'காலையே போன்றிலங்கும் மேனி கடும் பகலில் வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு மாலையின் தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றையவர் வீங்கிருளே போலும் மிடறு' என்ற வெண்பாவில் ஒரு நாளின் காலை, நண்பகல், மாலை, இரவு என்னும் பொழுதுகளை இறைவனது அங்கங்களோடு ஒப்பிட்டு அகவுருத் தோற்றம் கொடுத்துள்ளமையைச் சுட்டிக் காட்டலாம்.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் இறைவன் மீது தாம் கொண்ட அன்பின் வெளிப்பாட்டைச் சொல்வதற்கு அந்தாதி என்கின்ற இலக்கிய வடிவத்தை அம்மையார் ஆக்கிக் கொடுத்துள்ளார்.

சங்க காலத்தே தனிப் பாடல்களாகவும் தொடர் நிலைச் செய்யுட்களாகவும் இருந்த இலக்கியம் சங்கம் மருவிய காலத்தில் தனியொருவரைப் பாடும் காவியமாக உதயமாயிற்று. ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற துன்ப துயரங்களைச் சுட்டிக் காட்டி இலட்சிய வாழ்வினைச் சித்திரிக்கும் காவியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இக் காலத்தே தோன்றியமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

தமிழின் உரை நடை வளர்ச்சியின் தொடர்ச்சியை சங்கம் மருவிய கால சிலப்பதிகாரத்தில் கண்டு தெளியலாம். ஆய்ச்சியர் குரவையையும், குன்றக் குரவையையும் ஏனைய பாடல் வரிகளோடு ஒப்பிடுகின்ற பொழுது வித்தியாசமான தன்மை

யைக் கொண்டு காணப்படுகின்றது என்றும், இதுவே தமிழின் ஆரம்ப உரை நடை என்றும் இதனாலேயே சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என அழைக்கப்படுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

## சங்க இலக்கியங்களும், சங்கம் மருவிய கால இலக்கியங்களும் ஓர் ஒப்பீடு :

1. இலக்கியங்கள்
2. பாடுபொருள்
   (i) அகம்
   (ii) புறம்
   (iii) பக்தி
   (vi) நிலையாமை
   (v) உலகியல் வாழ்க்கை
   (vi) அறம்
3. இலக்கிய வடிவம்
4. இலக்கியப் பண்புகள்:

சங்க கால இலக்கியங்களையும், சங்கம் மருவிய கால இலக்கியங்களையும் ஒப்பீட்டு நோக்குவதற்கு ஆதாரங்கள் ஆக அமைபவை அவ்வக் காலங்களில் தோன்றிய இலக்கியங்களே ஆகும். சங்க காலத்தைச் சேர்ந்தனவாகக் கிடைக்கின்ற இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு ஆகும். சங்கம் மருவிய காலத்தில் எழுந்த இலக்கியங்களாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும், பக்தி இலக்கியங்களாகிய அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதல் ஆழ்வார்களது முதலாம், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளும் ஆகும். இவ் இலக்கியங்கள் மூலம் அவ்வக் கால சமுதாய நிலைகள் புலப்படுகின்றன. வட இந்தியச் செல்வாக்கு அதிகம் காணப்படாத சங்க சமுதாயத்தில் இருந்து தோன்றிய சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களுக்கே உரியதான வாழ்க்கை முறையினைச் சித்திரிப்பனவாக அமைந்து உள்ளமை புலப்படுகின்றது. வட இந்தியச் செல்வாக்கும், சமயக் கருத்துக்களும் புகுந்த சங்கம் மருவிய கால இலக்கியங்களில் அக்கால சமுதாய சூழ்நிலை வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. இருப்பினும் தமிழ் மக்கள் தம் கலாசார விழுமியங்களை அந்நிய

நாட்டாருக்கு அடிபணிய வைக்காத தன்மையினையும், சங்க இலக்கியங்களே தாய்மை இலக்கியங்கள் என்ற கருத்தினையும் வலியுறுத்துவனவாக அமைகின்றன என சில வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுவர், இவ் வகையில் சங்க இலக்கியங்களில் பாடு பொருளாக இருந்த அம்சங்கள் சங்கம் மருவிய காலத்தில் தொடர்வதனை அவதானிக்க முடிகிறது.

சங்க இலக்கியங்களில் பாடுபொருளாக இருந்த அகம் என்ற காதலொழுக்கம் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் இடம் பிடிக்கின்றன. பதினெண் மேற்கணக்குத் தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும், பத்துப்பாட்டு நூல்களுள் முல்லைப் பாட்டு. குறிஞ்சிப்பாட்டு. பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகத்திணை வலியுறுத்துகின்றன பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஐந்திணை ஐம்பது. ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணை மாலை நூற்றி ஐம்பது, கார்நாற்பது, கைந்நிலை ஆகிய ஆறு இலக்கியங்களும் அகத்திணை வலியுறுத்துகின்றன. உதாரணமாக: 'செம்புலப் பெயனீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என வருகின்ற குறுந்தொகைப் பாடல் கருத்துக்களை உள்வாங்கிய வள்ளுவர் திருக்குறளில் காமத்துப் பாலை அமைத்திருக்கலாம் அவ்வாறே 'சுனைவாய் சிறுநீரை எய்காதென்று எண்ணி பிணைமான் இனிதுண்ண வேண்டி கலைமான் கள்ளதின் ஊச்சும் சுரமென்ப காதலர் உள்ளம் படர்ந்த நெறி' என ஐந்திணை ஐம்பது கூறுவதனையும் சுட்டிக்காட்டலாம்.

புறம் என்று வீரத்தை விதந்து பேசுகின்றனவாகத் தொகை நூல்களில் பதிற்றுப் பத்து, புறநானூறு, பரிபாடல் ஆகிய மூன்றும், பத்துப்பாட்டுநூல்களுள் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை. சிறுபாணாற்றுப்படை பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய ஏழும் அமைகின்றன. இக் கருத்துக்களை வலியுறுத்துவனவாக சங்கம் மருவிய காலத்தில் களவழி நாற்பது என்ற புற இலக்கியம் அமைகிறது. அதே வேளை புறநானூற்றுக் காலச் சமூகத்தில் வீரனுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அறநூற் காலத்தில் துறவிக்குக் கொடுக்கப்பட்டது. புறநானூற்றுக் காலத்தில் ஏற்பட்ட வறுமையும் அதன் பயனாக ஏற்படும்

இரத்தலும், அறநூலாருக்குப் பெரும் பிரச்சினையைத் தோற்று வித்தது எனலாம்:

'ஈயென இரத்த இழிந்தன்று அதனெதிர் ஈயேனென்றல்
அதனினும் இழிந்தன்று.'

என்று வறுமை காரணமாக வள்ளல்களை நாடிக் கையேந்துவதும், செல்வர்கள் ஈயாமையும் வள்ளுவர் கவனத்தைத் திருப்பியதினாலேயே நன்றியல் செல்வம், இரவச்சம் என்ற அதிகாரங்கள் எழுந்திருக்கலாம். இரந்து திரியும் தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவதாகவே உழவு என்னும் அதிகாரத்தை வள்ளுவர் ஏற்படுத்தினார். சங்க காலத்தில் இருந்து வந்த ஈதலை வற்புறுத்தியும், ஏற்பதை இழித்துக் கூறியும் சமாதானம் காண முயன்றுள்ளார் வள்ளுவர். சங்க காலத்தில் வீரம் பெருத்த புகழை வள்ளுவர், 'உலகத்துப் பொன்றாது புகழல்லார் இல்லை' என்று வற்புறுத்தியுள்ளார்.

சங்க காலத்தில் காணப்பட்ட பக்தி பற்றிய கருத்துக்கள் சங்கம் மருவிய காலத்திலும் தொடர்வதாயிற்று. சங்க காலத்தில் குறிப்பிடப்பட்ட ஐவகைத் தெய்வங்களும் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் தொடர்வதாயிற்று. ஐங்குறு நூற்றில் வருகின்ற சிவனது அர்த்த நாரீஸ்வர தோற்றம், புராண இதிகாசக் கதைகள் என்பன சங்கம் மருவிய கால காரைக்கால் அம்மையாருக்கும், முதல் ஆழ்வார்களுக்கும் பக்திப் பாடல்களுக்குக் கருப்பொருளாக அமைந்தது எனலாம்.

புறநானூற்றில் இருந்த நிலையாமைக் கருத்துக்கள் சங்கம் மருவிய கால இலக்கியங்களில் காணப்பட்டது. உதாரணமாக 'ஈமப் புறங்காட்டைச் சுட்டிக் காட்டி' வாழ்க்கை நிலையாமையை வலியுறுத்த மணிமேலையில் சக்கர வாளக கோட்டங்காட்டி அதே கருத்து வலியுறுத்தப்படுகின்றது என பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுவார். புறநானூற்றில் வரும் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற ஊழ் பற்றிய கருத்துக்கள் திருக்குறளில்

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.'

என வள்ளுவரால் எடுத்து ஆளப்படுகின்றது. அதே வேளை சங்க காலத்தில் இருந்து வந்த பரத்தமை ஒழுக்கம் வள்ளுவரால் கண்டிக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவே 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரம் ஆகும்.

சங்க காலத்தில் இல்லற வாழ்வு குழந்தையுடன் பூரணத்துவம் பெறுகிறது. குழந்தைச் செல்வம் இல்லற வாழ்வின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகவும், முக்கிய பயன்களில் ஒன்றாகவும் விளக்குவதனை ஐங்குறுநூறு, புறநானூறு போன்ற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இக்கருத்தை உள்வாங்கியே 'மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன் நன்கலம் என்பது நன் மக்கட் பேறே' எனப் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரம் அமைக்க வழிவகுத்தன.

சங்க காலத்திலே காணப்பட்ட அற ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் சங்கம் மருவிய காலத்திலும் தொடர்ந்து செல்வதனை அவதானிக்கலாம். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்றும், 'அன்பெனப்படுவது தன்கிளை செறாமை' என்றும் கூறுகின்ற கலித் தொகைப் பாடல் வரிகள் வள்ளுவரிடத்திலே அன்புடைமை ஆகவும், ஒழுக்கமுடைமை ஆகவும் பரிணமிக்கின்றது. புறநானூற்றில் அரசின் வெற்றி நால்வகைப் படைகளில் தங்கி இருக்கவில்லை. அறநெறியிலே தங்கியிருந்தது என்ற கருத்தே சிலப்பதிகாரத்தில் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்' என்ற கருத்துத் தோன்ற வழிவகுத்தது.

சங்க காலத்திலே பயின்று வந்த பதிற்றுப்பத்து என்ற இலக்கிய வடிவம் சங்கம் மருவிய காலத்திலே பதிக வடிவம் தோன்றுவதற்கு தோற்றுவாயாக அமைந்தது எனலாம். புறநானூற்றில் வரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அம்சம் சங்கம் மருவிய காலத்தில் சேர, சோழ, பாண்டிய தேசங்களை இணைத்த மும்மைக் காவியமான சிலப்பதிகாரம் தோன்ற வழிவகுத்தது. நற்றிணையிலே வருகின்ற 'ஒருமுலை இழந்த திருமா உண்ணி' என்ற தொடர் சிலப்பதிகாரக் காவியம் தோன்ற வழிவகுத்தது எனலாம். சங்க இலக்கிய வடிவமான ஐங்குறுநூறு, சங்கம் மருவிய காலத்தில் திணைமொழி ஐம்பது தோன்ற வழிவகுத்தது எனலாம். சங்காலத்தில் பாடப்பட்டு வந்த அகவற்பா, வஞ்சிப்பா சங்கம் மருவிய காலத்தில் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் தொடரப்படுகிறது. சங்க காலத்தில் வருகின்ற அகத்திணைப் பாடல்கள் நாடகப் பாங்கில் அமைய அதை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகார வழக்குரை காதை பாடப்பட்டது என்பர்.

சங்க காலத்தில் ஐங்குறுநூற்றில் வருகின்ற தொண்டிப் பத்தில் உள்ள செய்யுட்கள் பத்தும், பதிற்றுப்பத்திலுள்ள நான்காம் பத்திலுள்ள செய்யுட்கள் பத்தும் அந்தாதி முறையில்

அமைந்துள்ளன. இதுவே சங்கம் மருவிய காலத்தில் அந்தாதி என்கின்ற தனி இலக்கிய வடிவம் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தது.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றநிலை முனியாது கற்கை நன்றே.'

என்ற புறநானூற்று பாடல் வரிகளே வள்ளுவர் கையில் கல்வி என்ற அதிகாரம் தோன்ற வழிவகுத்தது எனலாம்.

'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்.'

என்ற நற்றிணையில் கூறப்பட்டுள்ள நாகரிசம் சார் ஒழுக்கக் கருத்துக்களே பெயர்க்கண்டு நஞ்சுண்டமைபவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என வள்ளுவர் நாகரிகத்தின் உயர்வினைக் கூற வழி வகுத்தது.

இவ்வாறு சங்க இலக்கியங்களிலே காணப்பட்ட கருத்துக்கள் சங்கம் மருவிய காலத்திலும் தொடர்வதனை அவதானிக்கலாம். ஒரு காலத்திலே நிலவிய சமுதாய சூழ்நிலை அக் காலத்திலேயே முற்றாக நிறைவு பெறுவதில்லை என்பதுவும், அடுத்த காலத்திலும் அதன் எச்சங்கள் காணப்பட்டது, காணப்படுகின்றன என்ற வகையிலே தமிழ் இலக்கிய சரிதத்திலே, சங்க காலத்தில் காணப்பட்ட கருத்துக்கள் அறாத் தொடர்ச்சியுடன் இன்று வரை காணப்படுவதனைச் சில வரலாற்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவதற்கு அமைய சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டுக் கோலங்கள் சங்கம் மருவிய காலத்திலும் தொடர்ந்து செல்வது வியப்புக்கு உரியதன்று.

# பல்லவர் காலம்

(சங்கம் மருவிய காலத்தை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் காலப்பகுதி பல்லவர் காலம் ஆகும். கி.பி. 7-ம் நூற்றாண்டு தொடக்கம் 9-ம் நூற்றாண்டு முடியவுள்ள 300 ஆண்டுகளை உள்ளடக்கியது என பேராசிரியர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவர்.)

## பக்தி இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலை

காலத்திற்கு ஏற்ற வகைகள் அவ்வக் காலத்திற்கு ஏற்ற ஒழுக்கமும், நூலும், ஞாலம் முழுமைக்கும் அவசியம் தேவை என்ற பாரதியின் கூற்றுக்கு அமையப் பல்லவர் காலச் சமுதாயச் சூழ்நிலையே பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தது எனலாம்.

'இயற்கையோடு ஒன்றிய மக்கள் சமுதாயத்திலிருந்து தோன்றிய இலக்கியங்களில் வேறுபட்டு அறம், நீதி, ஆசார ஒழுக்கப் போதனைகள் தோன்றுவதற்கு அக் காலச் சமுதாயச் சூழ்நிலையே காரணமாயிற்று. அறநெறிக் காலத்தே ஆணி வேரை ஊன்றிக் கொண்டிருந்த அசைக்க முடியாத சமண பௌத்த மதங்கள் தொடர்ந்து பல்லவர் காலத்தே தமிழகத்தை ஆக்கிரமிக்கும் நிலை உருவாகியது. தமிழருடைய மதங்களாகிய சைவம், வைஷ்ணவம் கலை கலாசாரங்களும் கவனிப்பாரற்றுக் கைவிடுகின்ற நிலை உருவாவதை உணர்ந்த தமிழ் மக்கள் தம் மதத்தையும், தம் பண்பாட்டு மரபுகளையும் பேணிப் பாதுகாக்கு முகமாக பக்தி இயக்கத்தை உருவாக்கினர் எனலாம்.

தமிழகத்தில் கொடி கட்டிப் பறந்த சமண, பௌத்த மதங்களுக்கு வடபால் மகேந்திர பல்லவனும் தென்பால் பாண்டியன் நெடுமாறனும் ஆதரவு தந்தனர். இம் மதங்களே அரச

மதங்களாக விளங்கியதும் இந்து மதம் அரச ஆதரவற்ற அநாதையாக அல்லற்படுவதையும் தமிழக வரலாறு படம் பிடித்துக் காட்டுகின்றது. மகேந்திர பல்லவன் திருநாவுக்கரசருக்கு நஞ்சு கொடுத்தும், நீற்றறையில் இட்டும், யானையை ஏவியும் கல்லோடு கட்டிக் கடலில் போட்டும்; பாண்டியன் நெடுமாறனின் ஆதரவுடன் சம்பந்தர் இருந்த மடத்திற்கு சமணர் தீ வைத்தும், அனல் வாதம், புனல்வாதம் சுரவாதம் முதலிய கொடுமைகள் ஆற்றியமையும் அக்கால இந்து மதத்தின் நிலையை எடுத்துக்காட்டுகிறது. இச் சூழ் நிலையில் இந்துமதத்தை வளர்க்கப் பக்தி இயக்கத்தை உருவாக்கினர்.

பல்லவர் காலத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் தமது அரச சபைகளிலே வடமொழிப் புலவர்களை ஆதரித்தனர். இந் நிரழ்ச்சி வடமொழியும், வடமொழிக்கலை கலாசாரங்களும் தமிழகத்தில் புகுந்து செல்வாக்குப் பெறத் தமிழ் மொழியும் தமிழர் தம் கலை கலாசாரங்களும் நலிந்தும், மெலிந்தும் சீரழிந்து போகவழிவகுத்தது. இதனை உணர்ந்த தமிழ் மக்களின் உள்ளக் குமுறல்கள் பக்தி இயக்கத்தைப் பிரசவித்தது எனலாம்.

இயற்கை நெறிக் காலம் தொடக்கம் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த தமிழ் மக்களது கலை கலாசார பண்பாட்டு மரபுகள் அவைதீக மதங்களினாலும், அந்நிய மன்னர்களினாலும் வெறுக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் வருவதை உணர்ந்த தமிழ்ச் சமுதாயம் அந்நிய கலை கலாசாரங்களைத் தமது சொந்தக் கலை கலாசாரங்களாக ஏற்க மறுத்ததன் விளைவே பக்தி இயக்கத்தின் தோற்றத்திற்கு அடிக்கல்லாக விளங்கியது என்பர்.

அந்நியர் ஆட்சியினாலும் அவைதீக மதங்களின் எழுச்சியினாலும் கவனிப்பாரற்றுக் கைவிடப்படுகின்ற நிலையில் இருந்த இந்து ஆலயங்களைக் கண்ட தமிழ் மக்கள் மனம் புழுங்கினர். திருமறைக் காட்டில் வழிபாடு செய்ய முடியாது அடைக்கப்பட்டிருந்த ஆலயத்தை அப்பர் திறக்கச் செய்து அடியார் இறை வழிபாட்டிற்கு வழி அமைத்தமையும் 'பெருக்காறு சடைக் கணிந்த ————' என்ற பாடலில் ஞாலக் கோயில், கொகுடிக் கோயில் போன்ற பல கோயில்கள் பற்றிக் குறிப்பிடுவதும் அக் கோயில்களைப் பின்னர் காண முடியாமல் போனதுவும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

பல்லவர் காலச் சமுதாயச் சூழ்நிலையில் அந்நியப் படையெடுப்பும், அவர்களது மணவினை ஒழுக்கங்களும், வர்ணப்

பாகுபாடும் தமிழ்ச் சமுதாயத்தில் துன்பம், துயரம், விரக்தி வேதனை மிக்க சூழ்நிலையை ஏற்படுத்தியது. இந்நிலை தமிழ்ச் சமுதாயத்தை மேல்நிலைப்படுத்தவோ இந்துமதத்தை உயர்நிலை அடையச் செய்யவோ உதவுவதாக அமையவில்லை. தமிழ் மக்களது சமுதாயத்தில் சமூக ஏற்றத் தாழ்வுகள் மலிந்து தமிழ்ச் சமுதாயம் மிகவும் கீழ்நிலை அடைவதனைக் கண்டு கலங்கிய மக்கள் தமிழ்ச் சமுதாயத்தை மேல் நிலைப்படுத்தவும் இந்துமதத்தை உயர்வடையச் செய்வதற்கும் உகந்தது பக்தி இயக்கமே என உணர்ந்தனர்.

தமிழ் மக்களது உள்ளத்து உணர்வுகளையும், அன்றாடத் தேவைகளையும் அவைதீக மதங்களால் அளிக்க முடியவில்லை. இவ்வுலக வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நிலையில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என எண்ணிக் காதல் வாழ்க்கையிலும், வீர வாழ்க்கையிலும் விருப்புற்று மயங்கிக் கூடிக் களித்து குலாவி மயங்கிய மக்களின் உணர்வுகளைக் கடுந்துறவினாலும், கணக்கற்ற கடுமையான விதி முறைகளினாலும் மாற்றியமைத்த சமண பௌத்த மதங்களின் கருத்துக்கள் தமிழ் மக்கள் மனதில் விரக்தியை ஏற்படுத்தியதனால், வீறு கொண்ட மக்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர் என்ற வேறுபாடின்றி பக்தி இயக்கத்திற்கு விரைந்தனர்.

## பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட வழிமுறைகள்

சங்கம் மருவிய காலத்தே தோற்றம் பெற்ற சமண பௌத்த மதங்கள் பல்லவர் காலத்தில் மன்னர் ஆதரவுடன் பெருவளர்ச்சி பெற்றுத் தமிழகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. தமிழரது சொந்த மதமாகிய சைவம், வைஷ்ணவம் என்பன தன்னிலை குன்றித் தாழ்வுபட்டு ஒளி மங்கிக் கொண்டிருந்த நிலையில் சைவ, வைஷ்ணவ மதங்களை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருமை பக்தி இயக்கத்தை வளர்த்த நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் சாரும். பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை நாயன்மார்களும், ஆழ்வார்களும் கையாண்டுள்ளமை அவர்கள் அருளிய தோத்திரப் பாசுரங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

எந்த ஒரு மதத்தினது வளர்ச்சிக்கும், அதன் உயர்ச்சிக்கும் அரச ஆதரவு மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. வட தமிழகத்திலும், தென் தமிழகத்திலும் மகேந்திர பல்லவனினதும், பாண்டியன் நெடுமாறனினதும் ஆதரவோடு

கொடி கட்டிப் பறந்த சமண, பௌத்த மதங்களை அழிவுறச் செய்து சைவ, வைஷ்ணவ மதங்களை மேன்மையுறச் செய்வ தற்கு அம் மன்னர்களை மதம் மாற்ற வேண்டிய தேவை ஏற் பட்டது. இத்தேவையை நிறைவு செய்வதாக அப்பர் மகேந்திர பல்லவனையும், சம்பந்தர் பாண்டியன் நெடுமாறனையும் மத மாற்றம் செய்தமை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாக அமைகிறது. மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி என்பதற் கமைய மன்னர்களது மத மாற்றம் மக்களையும் மதம் மாற வைக்க சைவ, வைஷ்ணவ மதங்கள் பெருவளர்ச்சி அடைந்தன.

தாய் மொழியால் அதன் பற்றுணர்வால் ஈர்க்கப்படாத வர் எக் காலத்தும், எவ்விடத்திலும் இல்லை எனலாம். பல்லவ மன்னர்கள் அரச சபைகளில் வடமொழிப் புலவர்களை ஆதரித் ததினால் தமிழ் மொழியும், தமிழர் தம் பண்பாட்டுக் கலா சாரங்களும் நலிந்தும், மெலிந்தும் போவதனை அறிந்த நாயன் மார்களும், ஆழ்வார்களும் தமிழ் மொழிக்கும், இறைவனுக்கும் இடையிலான அத்தியாந்தத் தொடர்பினை ஏற்படுத்தி பக்தி இயக்கத்தை வளர்த்தனர். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்று சம்பந்தர் முத்திரைக்கவி பாடுவதும் அப்பர் 'தமிழோடு இசைபாடல் மறந்து அறியேன்' என்று கூறுவதும், 'துறைவாய் நுழைந்தனையோ ஒன்தீம் தமிழின்' என மாணிக்கவாசகர் கூறுவதும், 'பழந்தமிழின் பின் சென்ற பச்சைத் தமிழ்ப் பசுங் கொண்டலே' என ஆழ்வார்களும் மொழிப் பற்றை ஆயுதமாகக் கையாண்டனர். செந்தமிழ் பாண்டி நாட்டிலே தமிழ்ச் சங்கம் இருந்த மதுரையிலே குறள், சிலம்பு, தொல்காப்பியம் முதலி யன கொடுத்து தமிழ் வளர்த்த சமணரை எதிர்த்துப் போராட வேண்டி இருந்ததனால் போலும் சங்கத மொழியைப் போற் றும் பிராமண குலத்துதித்த சம்பந்தர் தம் தமிழ் ஆர்வத்தை உணர்த்த வேண்டி ஏற்பட்டது எனப் பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தம் பிரதேசத்தைப் பற்றி பிறர் புகழத் தாம் கேட்டு மகிழாத மனிதர் இல்லை எனலாம். இப் பிரதேச உணர்வை ஊட்டுவதன் மூலம் தமிழ் மக்களைத் தம் பக்கம் கவரலாம் என்றுணர்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஊர் ஊராகக் கிராமம், கிராமமாகச் சென்று உள்ளதை விரித்தும், இல்லது புணர்த்தியும் அங்கு இருக்கும் இறைவனையும், இறைவன் வாழும் திருத்தலத்தின் பெருமையினையும் புகழ்ந்து போற்றினர். 'வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்று அஞ்சி சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே',

எனச் சம்பந்தரும், 'கரும்பருகே கருங்குவளை கண் வளரும் களனி கமலங்கள் முக மலரும் கலைய நல்லூர் காணே' எனச் சுந்தரரும், 'தெங்கு திரள் சோலை தென்னம் பெருந்துறையான்' என மாணிக்க வாசகரும், தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனை என ஆழ்வார்களும் பிரதேச உணர்வினை ஊட்டினர்.

பழந்தமிழர் வாழ்வினைக் கண்டனம் செய்து கடும் துறவை வலியுறுத்திய சமண, பௌத்த மதங்களின் கொள்கைகளில் நெகிழ்ச்சியினை ஏற்படுத்துவதன் மூலம் பக்தி இயக்கத்தினை வளர்த்துக் கொண்டனர். திருமணம் செய்தல் பாவம் என்ற அவைதீகக் கோட்பாட்டிற்கு மாறாக 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். ........ பெண்ணினல்லாளொடு பெருந்தகை இருந்ததே' என்று சம்பந்தரும், 'அம்மை நீ அப்பன் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ' என்று அப்பரும் இறைவனையே குடும்பஸ்தனாகக் காட்டியுள்ளார்கள். நாடகம் சாராமை நன்று என்ற சமண, பௌத்த கோட்பாட்டிற்கு மறுதலையாக கூத்துகந்தான் என்றும், ஆடல் வல்லான் என்றும், திருமுறைகள் சுட்டி பக்தியினைப் பேசுகின்றன.

ஆணைத் துறவியாகவும், பெண்ணைப் பக்தாவுக்கேற்ற பதி விரதையாகவும் ஆக்க முற்பட்ட சமண பௌத்த மதங்களில் விரக்தியைக் கண்டதனாலோ என்னவோ பெண்களும் பக்தி இயக்கத்தில் சேர்ந்து உழைத்தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர் என்ற வேறுபாட்டின்றி எல்லோரும் ஒன்றுபட்டு நிற்க தமிழகத்தில் பக்தி இயக்கம் வீறுநடை போட்டது.

மதத்தினது திடீர் வளர்ச்சிக்கு அற்புதங்கள் நிகழ்த்துவது தவிர்க்க முடியாததே. சமண, பௌத்த மதங்கள் ஆங்காங்கு சிறுபான்மையாக அற்புதங்கள் நிகழ்த்தினும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பற்பல சந்தர்ப்பங்கள் பல்வேறு இடங்களில் பல வகையான அற்புதங்களை நிகழ்த்தினர். ஆண் பனையைப் பெண் பனையாக்கியும், நரியைப் பரியாக்கியும், எலும்பைப் பெண்ணாக்கியும், இறந்தவர்களை எழுப்பியும் பக்தி இயக்கத்தைப்பரவச் செய்தனர்.

எங்கோ இருக்கின்ற எட்டித் தொட முடியாத, அதே வேளை உள்ளுணர்வால் உவந்துணரக் கூடிய இறைவனை எங்களுள் ஒருவனாக அவனைப் பல்வேறு உறவு நிலைகளில் கண்டு தமது பக்தி உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தினர். சம்பந்தர் இறைவனைத் தாய் தந்தையராகக் கண்டு 'பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான்' எனப்பாடி மகிழ்கிறார். சைவத்திலிருந்து

சமணத் துறவியாக விளங்கிச் சைவத்திற்கு மீண்ட அப்பர் இறைவனுடைய அடியவனாகத் தம்மைக் கண்டு 'ஏற்றாய் அடிக்கேன் இரவும் பகலும் பிரியாது வணங்குவன்' என்று கழிவிரக்கத்தைக் காட்டுகின்றார். சுந்தரர் இறைவனைத் தோழனாகக் கண்டதனால் தோழமை உரிமையோடு 'பித்தா' என அழைக்கிறார். குருந்த மர நிழலில் தனக்கு அறிவூட்டி ஆட்கொண்ட இறைவனைக் காதலனாகக் கண்ட மாணிக்கவாசகர் 'அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்' என்பதாக அவருடைய சித்திரிப்பு அமைகின்றது. பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் கண்ணனைக் குழந்தையாகக் கண்டு 'மாணிக் குறளனே தாலேலோ வையம் அளந்தானே தாலேலோ' என அவர்களது சித்திரிப்பு அமைகிறது. ஆண்டாள் இறைவனைக் காதலனாகக் கண்டு 'கற்பூரம் நாறுமோ, கமலப் பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்து இருக்குமோ' எனக் காதல் உணர்வை சித்திரிக்கின்றாள். இவ்வாறே ஏனைய ஆழ்வார்களும் தாம் கண்ட உறவு நிலைகளில் பக்தி உணர்வினை வெளிப்படுத்தி உள்ளனர்.

சைவத்திலிருந்து சமணம் சென்று மீண்டும் சைவத்திற்கு திரும்பிய மக்கள் திரும்பவும் மதம் மாறாது தடுப்பதற்கான பக்தி உணர்வு அனுபவங்களைத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்தனர். சம்பந்தர் தமது ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணன் இறைவனது காலின் கீழ் நசுக்குண்டமையைச் சுட்டிக் காட்டி சைவத்திற்கு மாறாக நடக்காது இருக்குமாறு பல்லவ மன்னர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதனையும், ஒன்பதாவது பாடலில் எல்லாச் சமயங்களிலும் சைவமே மேலானது எனக் காட்ட அடிமுடி தேடிய கதையினையும், பத்தாவது பாடலில் சமண, பௌத்த மதங்களை இழிவு படுத்தும் பிறமதக் கண்டனத்தையும், பதினோராவது பாடலில் சைவத்தை வாழ வைக்கும் தகுதி தமக்கு உண்டெனக் காட்டும் முத்திரைக் கவியாகவும் பாடியுள்ளார். இவ்வாறே அப்பரது பெரும்பாலான பதிகங்களில் ஒன்பதாவது பாடல் இராவணனைப் பற்றியும் இருப்பதைச் சுட்டிக் காட்டலாம்.

மனித குலம் ஒன்றே என்ற சீரிய பண்பினைச் சிறப்புறக் கையாண்டு தம் சமுதாயத்தில் காணப்பட்ட சாதி ஏற்றத் தாழ்வினைப் புறங் கண்டனர். பிராமண குலத்திலே தோன்றிய சம்பந்தர், வேளாளர் குலத்திலே தோன்றிய அப்பரை வணங்குவதும், சம்பந்தருக்குப் பாணர் குலப் பெண் யாழ் வாசித்தமையும், வேடர் குலக் கண்ணப்பரை மாணிக்கவாசகர் போற்றுவதும், வணிகர் குலத்திலே தோன்றிய காரைக்கால் அம்மை

யார், கீழ்க் குல நந்தனார் வரலாறுகளும் இதனை உணர்த்து கின்றன. 'சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் கோத்திரமும் குல மும் கொண்டு என்ன செய்வீர்' எனச் சாதித் திமிரையும், கல்விச் செருக்கையும் கண்டித்து 'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சிற் குள்ளே இறைவன் புக்கு நிற்பான்' என அப்பர் புகல்வதும் கவனிக்கத்தக்கது.

'பண்ணைத் தோன்றிய எண்ணாங்கு கிளவியும்' எனத் தொல்காப்பியரினால் விதந்து ஓதப்பட்ட சாதாரண நாட்டார் இலக்கிய வடிவங்களைப் பக்தி இயக்கம் தன்னுள் கவர்ந்து கொண்டது. மாணிக்க வாசகர் இவ் இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி அருளிய திருப்பொற் சுண்ணம், திருப்படையாட்சி, திருவெம்பாவை, திருப்பொன்னூசல், திருப்பள்ளியெழுச்சி என் பனவும், ஆண்டாளது திருப்பாவையும், தொண்டரடிப் பொடி ஆழ்வாரது திருப்பள்ளியெழுச்சியும் இவ் வகையில் விதந்து குறிப் பிடத்தக்க இலக்கிய வடிவங்களாக அமைகின்றன.

## இலக்கியங்களும் அவற்றின் பொருள் மரபும்.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்போரது தேவாரம், திருவாசகம், திருக்கோவையார் என்பவையும், முத லாழ்வார் மூவர் தவிர ஏனைய ஒன்பது ஆழ்வார்களது திருப்பா சுரங்களும் பக்தி இலக்கியங்கள் ஆக அமைகின்றன. இவை தவிர நந்திக் கலம்பகம், முத்தொள்ளாயிரம், பாரத வெண்பா, பாண்டிக்கோவை, கொங்குவேளீர் மாக்கதை அல்லது உதயணன் கதை போன்ற பக்தி சாரா இலக்கியங்களும் (இவை தவிர பொருள் இலக்கணத்தை விளக்குவதாக இறையனார் களவியல் உரையும்) அமைகின்றன.

சைவ, வைஷ்ணவ, சமண, பௌத்தம் ஆகிய மதங்களி னது போட்டி நிலவிய பல்லவ கால சமுதாயத்திலிருந்து தோன் றிய இலக்கியங்கள் அவற்றையே தம்முடைய பாடுபொருளாக ஏற்றுக் கொள்கின்றன. ஒரு சமுதாயத்தினது மாற்றம் அடுத்த காலப் பகுதியில் முற்றிலும் மாறுவதில்லை என்பதனை முற் கால சமுதாயத்தில் காணப்பட்ட அகம், புறம் என்னும் பொருள் மரபுகளையும் பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி சாரா இலக்கி யங்கள் புலப்படுத்துகின்றன.

பக்தி என்பது இறைவன் மீது அன்பு வைத்தல் என்ற வகையில் மனிதன் தன்னிலும் உயர் பொருளாகிய இறைவன்

மீது அன்பு வைத்து அதன் மூலம் பேரின்பத்தை அடைய விளைந்த போது தோன்றியவையே பக்தி இலக்கியங்களாக அமைகின்றது. சாதாரணமாக சிற்றின்பப் பற்றுள்ள மனிதனை மனித இயல்பில் நின்றும் மாற்றிப் பேரின்ப நிலையை அடைய வைப்பதற்கு இறைவனையும், இறைவனின் கருணைச் சிறப்பினையும், இறை பெருமையினையும் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் உரைப்பனவாக பக்தி இலக்கியங்கள் விளங்குகின்றன. சாதாரண மனிதன் உலகியல் ரீதியாக என்ன நிலையில் பற்று வைத்தானோ அதே நிலையில் இறைவனை நிறுத்தி தமது பக்தி உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்துவனவாக நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இலக்கியங்களைப் பாடியுள்ளனர்.

சாதாரண நிலையில் உலகியல் ரீதியாக தாய், தந்தை, தோழன், ஆண்டான், அடிமை, காதலன், குழந்தை என்ற பல நிலைகளில் பற்று வைத்த மனிதன் அத்தகைய நிலையிலே இறைவன் மீது பற்று வைப்பதன் மூலம் பேரின்பத்தை அடையலாம் என்பதனை விளக்க நாயன்மார்களும், ஆழ்வார்களும் அத்தகைய நிலையிலே இறைவனைக் கண்டு தமது பக்தி இலக்கியங்களைப் படைத்து உள்ளனர்.

மனித வாழ்வில் தோன்றாத் துணையாக விளங்கி அன்பு கொண்டு அரவணைத்து பாலூட்டும் அன்னையாகவும், அரிய பல கருத்துக்களைச் சொல்லி வாழ்வினை அழகுற அமைத்துக் கொடுக்கும் தந்தையாகவும் இறைவனைக் கண்ட சம்பந்தர் 'பீடுடைய பிரமா புர மேவிய பெம்மான்' எனப் போற்றியுள்ளார். சைவத்தில் தோன்றி சமணசமயம் சென்று மீண்டும் சைவத்திற்குத் திரும்பிய அப்பர் தன்னுடைய முன்னைய வாழ்க்கையை நினைந்து செல்லுமிடமெல்லாம் சேவை தனையே புரிந்து வாழும் அடிமையாகத் தன்னைக் கண்டதனால் 'ஏற்றாய் அடிக்கேன் இரவும் பகலும் பிரியாது வணங்குவன்' என்பதாக அவருடைய சித்திரிப்பு அமைகிறது. உள்ளும் பொழுதெல்லாம் உவகையூட்டும் உத்தம நண்பனாக சுந்தரர் இறைவனைக் கண்டதனால் 'பித்தா' என விழிக்கும் தோழமைக்குரல் அவரிடத்தே பிறக்கிறது. மனிதனுக்கு இயல்பாகவே ஏற்படுகின்ற காதல் உணர்வு கைவரப் பெற்ற உண்மைக் காதலனாக மாணிக்கவாசகர் இறைனைக் கண்டதனால் 'அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூரித் தித்திக்கப் பேசுவாய்' என்று அவருடைய சித்திரிப்பு அமைகிறது. பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் தம்மைத் தாயாகவும், கண்ணனைச் சேயாகவும் கொண்டு வாஸ்த்தலிய பாவனையைக் கையாண்டார்கள். ஆண்டாள் கண்ணனைக் காதலனாகக் கண்ட

தனால் 'மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக் கைத் தலம் பற்றக் கனாக் கண்டேன்' என்று பாடுவதைச் சுட்டிக் காட்டலாம்.

இறை பெருமையைப் புகழ்ந்து போற்றியும், வியந்து பாராட்டியும் பேசி வந்த இப் பக்தி இலக்கியங்கள் தவிர பக்தி சாரா இலக்கியங்களும் இக்காலத்தே தோன்றின. நந்திக் கலம் பகம் பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்தி வர்மனுடைய வீரம், புகழ், கொடை, ஆட்சிச்சிறப்பு என்பவற்றைச் சித்திரிப்பதாகப் புறப் பொருள் வகையில் பாடாண் திணையைச் சேர்ந்ததாக விளங்குகிறது. சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரைப் பற்றித் தனித்தனியே தொள்ளாயிரம், தொள்ளாயிரம் பாடல் களில் பாடப்பட்ட முத்தொள்ளாயிரம் காதற் சுவை ததும்பும் அக இலக்கியமாக அமைகிறது. பாரதக் கதையை வெண்பாக் களில் அமைத்துப் பெருந்தேவனார் பாடிய பாரத வெண்பா சிறந்த அக இலக்கியமாக அமைகிறது.

ஆன்மீக அடிப்படையில் தெய்வீகக் காதலைச் சித்திரிப்ப தாக அமையும் பாண்டிக் கோவையும் அகத்திணை மரபு பேணும் இலக்கியமாக அமைகிறது.

உதயணன் என்னும் மன்னனது வீரம், காதல், சிறப்பு, சாதனை, துறவு என்பவற்றை ஒரு காவிய வடிவில் கொங்கு வேளீர் என்னும் புலவரால் பாடப்பட்ட கொங்குவேளீர் மாக் கதை சிறந்த அகப்புற சித்திரிப்பினைக் கொண்ட இலக்கியமாக அமைகிறது.

## இலக்கியப் பண்புகள்

பக்தி இயக்கத்தின் உதய தாரகைகளாகிய நாயன்மார் களும், ஆழ்வார்களும் இறைவன் மீது உள்ளம் உருகி நின்றுதம் உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்திய போது பிறந்தவையே பக்தி இலக்கியங்களாகும். இவை தவிரப் பாராளும் மன்னரை யும், பணம் படைத்த பெரும் செல்வரையும் விதந்து பேசும் பக்தி சாரா இலக்கியங்களும் இக் காலத்தில் தோற்றம் பெற்றன. இவ் இலக்கியங்கள் தமக்கே உரித்தான சில தனித்துவமான பண்புகளைக் கொண்டமைகின்றன.

பக்தி என்பது இறைவன் மீது அன்பு வைத்தலாகும். உல கியல் ரீதியாகப் பல்வேறு உறவு நிலைகளில் அன்பு வைத்துப் பழக்கப்பட்ட சாதாரண மனிதன் அத்தகைய உறவு நிலைகளிலே

இறைவனையும் கண்டு தமது பக்தி உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தினான். சம்பந்தர் தாய், தந்தை என்ற நிலையிலும், அப்பர் ஆண்டான் அல்லது எஜமான் ஆகவும், சுந்தரர் தோழனாகவும், மாணிக்கவாசகர் காதலனாகவும், பெரியாழ்வாரும். குலசேகர ஆழ்வாரும் கண்ணனைக் குழந்தை ஆகவும், சும்மைத் தாயாகவும் கொண்டு பாடியுள்ளனர். பெரியாழ்வார் கண்ணனை வளர்த்த தாயாகிய யசோதையின் நிலையிலும். குலசேகர ஆழ்வார் கண்ணனைப் பெற்ற தாயாகிய தேவகியின் நிலையிலும் தம்மைக் கண்டதனால் முன்னவரது பாடலில் தாய்மைப் பரவசத்தையும், பின்னவரது பாடலில் பெற்ற குழந்தையை வளர்க்க முடியாது தவிக்கும் சுழிவிரக்கத்தையும் காண முடிகின்றது. தொண்டரடிப் பொடியாழ்வார் ஆண்டான் ஆகவும், ஆண்டாளும், நம்மாழ்வாரும் காதலனாகவும் கண்ணனைக் கண்டு தோத்திரப் பாடல்கள் பாடியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தின் மூலம் சமயப் பிரசாரம் செய்ய முற்பட்டனர். சாதாரண மக்களால் புரிந்து கொள்ளக் கூடியதாக எளிமையான சொற்களைக் கையாண்டனர். அத்துடன் 'இசையால் வசமாகா இதயமேது' என்பதற்கமைய மக்களைக் கவருவதற்காக இசையினையும் பயன்படுத்தி உள்ளனர். சம்பந்தர் இறைவனிடம் பொற்றாளம் பெற்ற நிகழ்ச்சியும், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்' என்று சம்பந்தர் போற்றப்படுவதும், அப்பர் 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று கூறுவதும், 'ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளுவன்' எனச் சுந்தரர் துதிப்பதும், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்' என மாணிக்கவாசகர் மனமுருகிப் பாடுவதும் இத் தன்மையினைப் புலப்படுத்துகின்றது.

இறைவன் மீது கொண்ட ஆறாக் காதலினால் இயற்கையிலும் இறைவனைக் கண்டனர். பாத யாத்திரை மேற்கொண்டு ஆலயங்களை வலம் வந்து அவற்றில் குடி கொண்டிருக்கும் இறைவனைப் புகழ்ந்து போற்றும் போது அவ் ஆலயங்கள் அமைந்த இயற்கைச் சூழ்நிலையையும் இணைத்துப் பாட வேண்டியதாயிற்று. சம்பந்தரது பாடல்கள் முதற் பாதி இறைவனைப் பற்றியும், இறுதிப் பாதி தல வர்ணனை ஆகவும் அமைகிறது. 'மான் பாய வயலருகே மரமேறி மந்தி பாய மடுக்கண் தோறும் தேன் பாய, மீன் பாய செழுங்கமல மொட்டலருந் திருவையாறே' எனச் சம்பந்தரும், 'சுரும்பருகே கருங் குவளைக் கண் வளரும் களனிக் கமலங்கள் முகம் மலரும் கலைய நல்லூர்

காணே' எனச் சுந்தரரும், 'சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை' என மாணிக்கவாசகரும், 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்து ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல் உகழ' என ஆண்டாளும், 'தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனை' எனக் குலசேகர ஆழ்வாரும் இயற்கை வர்ணனைகளைக் கையாண்டுள்ளனர்:

அவைதீக நெறியிலிருந்து வைதீக நெறிக்குத் திரும்பிய மக்கள் மீண்டும் அவைதீக நெறிக்கு மாறாதிருக்க அதனைத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. வயதில் சிறியவரும், அனுபவ அறிவு ஞானம் பெற்றவரும் ஆகிய ஞானசம்பந்தர் வேத நெறி தழைத்தோங்கி சைவம் வளமார் வளர்ச்சி காண திட்டமிட்ட பிரசார நடவடிக்கைகளில் இறங்கி யமையை அவரது பதிகங்கள் ஒவ்வொன்றும் பறைசாற்றி நிற்கின்றது; எட்டாம் பாடலில் இராவணன் பட்ட துன்பங்களையும் துயரங்களையும் எடுத்துக் காட்டிப் பல்லவ மன்னர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதனையும், மாலும் அயனும் அறியா சோதிப் பிழம்பாகச் சிவன் நின்றமையை ஒன்பதாம் பாடலில் சுட்டிக் காட்டி சைவத்தின் பெருமையை உயரச் செய்வதையும், 'நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும் நெறியில' என அவைதீக மதங்களை இழித்தும், பழித்தும் கூறி வைதீகத்தை மேன்மையுறச் செய்வதையும், 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்' எனத் தம்மைக் கூறி சைவத்தை வாழ வைக்கும் தகுதி தனக்கு உண்டெனக் காட்டியும் திட்டமிட்ட பிரசார இயக்கத்தில் இறங்கி உள்ளமை கவனிக்கத்தக்கது.

இந்து மத வழிபாட்டு முறைகளுள் சங்கம வழிபாடுதனித்துவம் வாய்ந்தது. பக்தி இயக்கம் இவ் வழிபாட்டு முறையை மக்களுக்கு உணர்த்தியதனால் அடியார்கள் அடியார்களை வணங்கும் நிலை காணப்பட்டது: சம காலத்தவராகிய சம்பந்தரும், அப்பரும் ஒருவரையொருவர் வணங்குவதும் 'கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே' என அப்பர் அருளுவதும், 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என சிவனடியவர்களை வணங்கிய சுந்தரரது திருத்தொண்டர் தொகையும், நம்மாழ்வாரின் சீடராகிய மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரையே போற்றித் துதித்தும் பாசுரம் பாடியுள்ளமையையும் குறிப்பிடலாம்.

அன்பு வைத்தலின் மிக உன்னத நிலையாகக் காதலன், காதலி நிலை அமைகிறது, நாயன்மார்களும், ஆழ்வார்களும் பல்வேறு உறவு நிலைகளில் இறைவனைக் கண்டாலும் மதுர

பாவச் சித்திரிப்பை தம் பக்தி இலக்கிங்களில் சிறப்பாக பேணி உள்ளனர் எனச் சில வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர், பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும், சோதனைகளை யும் கண்டு தெளிந்த அப்பர் இறைவன் மீது காதல் கொண்ட பெண்ணின் மனநிலையைச் சுட்டுவதாக 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.—— ...' எனப் பாடியுள்ளார், 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ——' எனச் சம்பந்தரும், 'அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறி தித்திக்கப் பேசுவாய் .. ' என மாணிக்கவாசகரும், 'மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழ்கிலேன்' என ஆண்டாளும், 'கங்குலும் பகலும் கண் துயில் அறியா கண்ணனீர் கைகள் இறைக்கும்' என நம்மாழ் வாரும் இறை காதலைச் சுட்டியுள்ளனர். பேராசிரியர் இராதா கிருஷ்ணன் அவர்கள் உலகில் அன்பு செலுத்தும் முறைகளுள் காதலன் காதலி நிலையே உயர்ந்தது எனக் கூறிய தன்மை யினை இவ் இலக்கியங்களில் கண்டு தெளியலாம்.

ஆதியும், அந்தமும் இல்லா இறைவன் மீது அன்பு வைப் பதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம் ஞானத்தின் துணை கொண்டு அகவுருத் தோற்றத்தை ஆக்கிக் கொடுத்து உள்ளனர். சம்பந்தர் தம்மை ஆட்கொண்ட இறைவனை 'தோடுடைய செவியன்' என்றும், அப்பர் தன்னை அரவணைத்த இறைவனைக் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்' என்றும், சுந்தரர் தம்மைத் தடுத்தாட் கொண்ட சிவனைப் 'பித்தா பிறைசூடி பெருமானே' என்றும், குருவடிவாக வந்து தம்மை ஆட்கொண்ட இறைவனை மாணிக்கவாசகர் 'அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்' என்றும், 'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா' என ஆழ்வார்களும் போற்றியுள் ளமையைக் குறிப்பிடலாம்,

பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் தமிழ் இலக்கியப் பரப்பிற்குப் பல இலக்கிய வடிவங்களை வழங்கியுள்ளது எனச் சில வரலாற்றறிஞர் குறிப்பிடுவர். விருத்தப்பாவினது துணை இனங்களான தாழிசை, துறை, விருத்தம் என்பனவும், அப்பரது திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம் என்பன தாண்ட கம் என்னும் வடிவத்தையும், பெரியாழ்வாரது பெரிய திருமடல், சிறிய திருமடல் என்பன மடல் என்ற இலக்கிய வடிவத்தையும், பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் கையாண்ட வாஸ்தலிய பாவனை முறை பிள்ளைத் தமிழ் இலக்கியத்திற்கும், சம்பந்தரது 'சிறையாரும் மடக்கிளியே' என்ற கிளியைத் தூது விடும் பாடல் தூதுப் பிரபந்தத்திற்கும் ஊற்றுக் காலாக அமைந்தமையைச் சுட்டிக் காட்டலாம்.

பல்லவர் கால பக்திப் பிரசாரத்தில் வடமொழி இதிகாச புராணக் கதைகள் பெருமளவு கையாளப்பட்டது. இக் கதைகளினூடு வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் பெருமளவு புகுந்தன. வடமொழியும், தமிழ் மொழியும் கலந்த மணிப்பிரவாள நடை இக் காலத்தே பெருமளவு கையாளப்பட்டது. அரச சபைகளில் கூடுதலாக வடமொழிப் புலவர்கள் ஆதரிக்கப்பட்டதனாலும் வடமொழிச் செல்வாக்குக் கூடுதலாகத் தமிழ் மொழியில் கலந்தமையைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

## சங்கம் மருவிய கால இலக்கியங்களும் பல்லவர் கால இலக்கியங்களும் ஓர் ஒப்பீடு

சங்கம் மருவிய கால இலக்கியங்களாகக் கீழ்க் கணக்கு நூல்களும், இரட்டைக் காவியங்களும், காரைக்கால் அம்மையாரது திருப்பாசுரங்களும், முதல் ஆழ்வார்களது முதல் மூன்று திருவந்தாதிகளும் விளங்குகின்றன. பல்லவர் கால இலக்கியங்களாக நாயன்மார்களது தேவாரம், திருவாசகம், திருக்கோவையாரும், ஒன்பது ஆழ்வார் திருப்பாசுரங்களும், நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம், பாரத வெண்பா, பாண்டிக்கோவை, பெருங்கதை அல்லது கொங்குவேளீர் மாக்கதை என்பனவும் அமைகின்றன. இவ்விரு கால இலக்கியங்களையும் கொண்டு ஒப்பிட்டு நோக்கும் போது சங்கம் மருவிய காலத்தில் காணப்பட்ட இலக்கியப்பாடுபொருளான அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம், அகம், புறம், பக்தி என்பன பல்லவர் கால இலக்கியங்களில் தொடர்வதனை அவதானிக்க முடிகின்றது.

சங்கம் மருவிய காலக் கீழ்க்கணக்கு நூல்கள் அறத்தை வலியுறுத்தும் தனி நூல்களாக அமைந்துள்ளன. பல்லவர் காலத்தில் இவ்வாறு தனி நூலாக, எழாது விட்டாலும் பக்தி இலக்கியங்களினூடும் அறக் கருத்துக்கள் ஊடு பொருளாகச் சித்திரிக்கப்பட்டு இருப்பதனை அவதானிக்க முடிகிறது. 'வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்' என்றும், 'ஊனுடம்பு புன்குரம்பை ஒன்றுமிலாக் குப்பை' என்றும், 'சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்' என்றும் இவை போன்ற இன்னும் பலவான கருத்துக்கள் திருமுறைகளில் காணப்படுவதனைச் சுட்டிக் காட்டலாம் சமண சமயம் சென்ற அப்பர் சமண சமயக் கருத்துக்களால் கவரப்பட்டவர் என்பதுவும் இதனால் அவரது பாடல்களில் அறம் சார் ஒழுக்கக் கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றது. பன்னெடுங் காலம் துறவு வாழ்க்கை வாழ்ந்த பழுத்த அனுபவம் வாய்க்கப் பெற்ற அப்பரது அருட் பாடல்களில் ஐம்புல ஆசையால் வரும் துன்பம், உலக நிலையாமை,

வாழ்க்கை நிலையாமை, பற்றிய கருத்துக்கள் ஆங்காங்கு செறிந்து காணப்படுகின்றன எனப் பேராசிரியர். வி. செல்வநாயகம் அவர்கள் கூறுகிறார்:

சங்கம் மருவிய காலத்தில் மக்களிடையே நிலவிய மானிடக் காதல் பல்லவர் காலத்தில் இறை காதலாகச் சித்திரிக்சப் படுகிறது. வள்ளுவரது,

'ஊரவர் கவ்வை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந் நோய்'

என்ற குறளை நம்மாழ்வார் 'ஊரவர் சுவ்வை எருவிட்டு அன்னை சொல் நீர்படுத்து ஈர நெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெரும் செய்யுள் பேரமர் காதல் கடல்புரைய' என அப்படியே எடுத் தாண்டுள்ளார். இவ்வாறே சங்கம் மருவிய கால அசத்திணை மரபு பல்லவர் கால பக்தி சாரா இலக்கியங்களில் பரவலாசச் சித்திரிக்கப்படுகிறது. இவ்வகையில் கொங்குவேளீர் மாக்கதையையும் முத்தொள்ளாயிரத்தையும் இறையனார் களவியலுரையையும் சிறந்த அக நூலாகக் குறிப்பிடலாம்.

சங்கம் மருவிய காலத்தில் காணப்பட்ட போரொழுக்கம் பல்லவர் காலத்திலே தொடர்ந்து கையாளப்படுகிறது. களவழி நாற்பது சங்கம் மருவிய காலத்தில் எழுந்த புறப்பொருள் இலக்கியமாகும். சோழன் செங்கணான் சேரன் கணைக்கால் இரும் பொறையை வென்ற செய்தியைக் கூறுவதாக இந் நூல் பாடப் பட்டது. இவ்வாறே பல்லவர் காலத்தில் பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மனது வீரம், புகழ், கொடை, ஆட்சிச் சிறப்பு என்பவற்றைச் சித்திரிப்பதாக புறப் பொருள் வகையில் பாடாண் திணையைச் சேர்ந்ததாகிய நந்திக் கலம்பகம் 'கானுறு புலியை அடைந்ததுன் வீரம்' எனக் கூறுவது கவனிக்கத்தக்கது.

சங்கம் மருவிய காலத்தில் காரைக்கால் அம்மையாரினாலும், முதல் ஆழ்வார்களினாலும் ஆரம்பிக்கப்பட்ட சைவ வைஷ்ணவ பக்தி உணர்வுகள் பல்லவர் காலத்து நாயன்மார் களினாலும், ஆழ்வார்களினாலும் பேணி வளர்க்கப்படலாயிற்று. பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் 'சங்கம் மருவிய காலப் பிற்பகுதியில் ஊற்றெடுத்த பக்தி ஆறு சைவம், வைஷ்ணவம் என்னும் இரு பெரும் கிளை நதிகளாசப் பாய்ந்து பல்லவர் காலத் தமிழ் இலக்கியத்தைத் தழைக்கச் செய்தது.' என்று கூறுவது நோக்கத்தக்கது. பக்தி என்னும் இறைவன் மீது அன்பு செலுத்துதல் ஆனது இறைவனுக்கு அசவுருத் தோற்றம் ஒன்றினை ஆக்கிக் கொடுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதனால் சங்கம் மருவிய காலத்தில் இறைவனுக்கு அம்மையார்

'காலையே போன்றிலங்கும் மேனி...' என்னும் அற்புதத் திருவந் தாதிப் பாடலில் நாளின் காலை, நண்பகல், மாலை, இரவு என்னும் பொழுதுகளை இறைவனது அங்கங்களோடு ஒப்பிட்டு இறை தோற்றத்தினைச் சித்திரித்துள்ளார். இவ் அம்சமே 'தோடு டைய செவியன் ' எனச் சம்பந்தராலும், 'குனித்த புருவமும் ......' என அப்பராலும், 'பித்தா பிறை—' எனச் சுந்தரராலும், காதார் குழையாட... ' என மாணிக்க வாசகராலும் கையாளப் படுகிறது.

சங்கம் மருவிய கால பக்தியின் மூலம் இறைபெருமையைச் சுட்டிச் சொல்ல முற்பட்ட காரைக்கால் அம்மையாரும், முதல் ஆழ்வார்களும் வடமொழி புராண இதிகாசக் கதைகளைக் கையாண்டனர். மன்மதனை எரித்தமை, இராவணனை நசுக்கியமை, அடிமுடி காணாத ஒளிப் பிழம்பாக எழுந்து நின்றமை போன்ற சிவனது பெருமை பேசும் புராண கதைகளை அம்மையாரும், ஹம்சனை வதைத்தமை, அரக்கியர்ளைக் கொன்றமை, காளிங்க நர்த்தனம் புரிந்தமை போன்ற திருமாலின் பெருமை பேசும் புராணக் கதைகளை முதலாழ்வார்களும் கையாண்டனர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்த மரபு பல்லவர் காலத்தில் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பக்திப் பிரசாரத்திற்கு கையாளப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

சங்கம் மருவிய காலத்தில் கையாளப்பட்ட வெண்பா, யாப்பு பல்லவர் காலத்தில் கையாளப்படுகிறது பாண்டிக் கோவை, முத்தொள்ளாயிரம், பாரத வெண்பா என்பன வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற விருத்தப்பா பல்லவர் காலத்தே தொடர்ந்து பேணப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

சங்கம் மருவிய காலத்தில் இலக்கியம் படைப்பதற்குக் கையாளப்பட்ட யாப்பு வகைகள் அனைத்தையும் நந்திக் கலம் பகத்தில் கண்டு தெளியலாம்.

சங்கம் மருவிய காலத்தில் கையாளப்பட்ட பதிக வடிவம் பல்லவர் காலத்திலும் தொடர்ந்து பெருமளவு கையாளப்பட்டது. சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற அந்தாதி பல்லவர் காலத்தே நம்மாழ்வாரது பெரிய திருவந்தாதியில் வெளிப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

சங்கம் மருவிய காலத்தே தோற்றம் பெற்ற சிலப்பதிகாரம் உரைத்தன்மையை இடையிடையே கொண்டு காணப்பட்டது இதனுடைய தொடர்ச்சியான வளர்ச்சியே பல்லவர் காலத்தில் இறையனார் களவியல் உரை தோன்ற வழிவகுத்தது.

# சோழர் காலம்

பல்லவர் காலத்தை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் காலப்பகுதி சோழர் காலமாகும். கி.பி 10 நூற் றாண்டு தொடக்கம் 13-ம் நூற்றாண்டு முடியவுள்ள 400 ஆண்டு களை உள்ளடக்கியது என பேராசிரியர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவர்.

## சோழர் காலத்தில் தமிழ் இலக்கியம் பெரு வளர்ச்சி அடைவதற்கான காரணங்கள்

1. பேரரசினுடைய ஸ்தாபிதம்.
2. பொருள் வளம் மிகுந்தமை.
3. சமயப் பொறை கையாண்டமை.
4. கவிச்சக்கரவர்த்திகளின் தோற்றம்.
5. சிற்றிலக்கிய ஆசிரியர்களின் தோற்றம்.
6. இலக்கண விற்பன்னர்களின் தோற்றம்.
7. தத்துவ ஆசிரியர்களின் தோற்றம்.
8. புராண விற்பன்னர்களின் தோற்றம்.
9. நம்பியாண்டார் நம்பி, நாதமுனிகளின் தோற்றம்.
10. ஏனைய ஆசிரியர்களது தோற்றம்.

தமிழக வரலாற்றில் முதன் முதல் பேரரசை ஸ்தாபித்த வர்கள் சோழப் பெருமன்னர்கள் ஆவர். 'கங்கா நதியும் கடார மும் கைவரப் பெற்று சிங்காசனத்தே வீற்றிருந்த செம்பியர்

கோன்' என இவர்களுடைய பேரரசின் ஸ்தாபித எல்லைகள் குறிக்கப்படுகின்றன. கங்கை தொட்டு கடாரம் ஈறாக சிங்களம் தொட்டு சீயம் ஈறாக உள்ள நாடுகளைக் கைப்பற்றி ஆண்டவர் கள் சோழர்கள், இவர்கள் தமது அரண்மனைகளில் கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, ஜெயங் கொண்டார் போன்ற புலவர் களை ஆதரித்தனர். சோழர்களின் கடல் வலிமை பற்றி வரலாற் றுப் பேரறிஞர் க. அ. நீலகண்ட சாஸ்திரியார் இந்துமா வாரி, சோழர்கள் நீந்தி விளையாடிய குளம் எனக் குறிப்பிடுவது சோழர்களின் படை பலத்தையும், சாம்ராச்சிய விஸ்தரிப்பை யும் காட்டுகின்றது. இவர்களுடைய சாம்ராச்சிய விஸ்தரிப் பின் மூலம் தாம் கைப்பற்றியாண்ட நாடுகளில் எல்லாம் தம் முடைய மொழி, மதம் ஆகிய தமிழ் மொழியையும், இந்து மதத்தையும், கலை கலாசாரப் பண்பாடுகளையும் பரப்பி யுள்ளனர்.

கடல் கடந்த நாடுகளையும் கட்டியாண்ட சோழப் பெரு மன்னர்கள் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் இருந்து சூறை யாடப்பட்ட செல்வம், கீழ் அரசுகளிடமிருந்து பெறப்பட்ட திறை, கடல் வாணிபத்தினால் ஈட்டப்பட்ட பொருள் எனப் பல வழிகளிலும் தமது பொருள் வளத்தை மிகுவித்துக் கொண் டனர். 'படை கொண்டு வருகிறேன் என்றால் படை கொண்டு வரவேண்டாம் திறை கொண்டு வந்தோம்' என்று சோழப் பெருமன்னர்களுக்கு கீழரசர்கள் திறை செலுத்தியமைய வர லாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். பொருள் வளம் மிகுந்த தன்மையானது புத்துணர்ச்சியையும், புத்தூக்கத்தையும் ஏற்படுத் தியது. கடல் கடந்த நாடுகளையும் கட்டியாளுகின்ற சோழப் பேரரசர்களது சொந்தக்காரர்களாக இருக்கின்றோம் என்கின்ற பெருமித உணர்வில் உந்தப்பட்ட மக்கள் தம்மை மத வளர்ச் சிப் பணியிலும், இலக்கியப் பணியிலும் ஈடுபடுத்திக் கொண்ட னர். 'கொள்வாரும் இல்லை கொடுப்பாரும் இல்லை' எனப் புகழப்படுகின்ற சோழர் காலச் சமுதாயத்தில் பொருள் வளம் இலக்கியப் பணிக்கு உந்துதலாக அமைந்தது எனலாம்.

சோழப் பேரரசர்களின் ஆட்சிக் கொள்கை உள்நாட்டி லும், வெளிநாட்டிலும் ஒற்றர் படையை நீக்கி மக்களின் மன வளத்தைக் கவர்ந்தது. சமயச் சண்டை நிலவிய சமுதாயத்தி லிருந்து 'எம்மதமும் சம்மதமே' என்ற சமயப் பொறையைப் பேணுகின்ற சமுதாயத்தை சோழப் பெருமன்னர்கள் ஏற்படுத்தி னர். இவ் ஆட்சிக் கொள்கை சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம் ஆகிய அனைத்து மதங்களையும் வளர்ச்சியடையச் செய்தன. மதங்கள் வளர்ச்சியடைய அம் மதக் கருத்துக்களைப்

பிரசாரம் செய்கின்ற இலக்கியங்கள் பல தோற்றம் பெறுவன வாக அமைகின்றன.

தமிழ் மொழியின் பேரிலக்கியமாகிய காவியங்களை ஆக்கி அளித்த கவிச்சக்கரவர்த்திகள் இக் காலத்தே தோற்றம் பெற்ற னர். கம்பராமாயணம் தந்த கம்பரும், சீவகசிந்தாமணி தந்த திருத்தக்க தேவரும், சூளாமணி ஆக்கியளித்த தோலாமொழித் தேவரும், குண்டலகேசி தந்த நாதகுத்தனாரும், சிறுகாப்பி யங்களை ஆக்கியளித்த கவி வல்லுநர்களும் இக் காலத்திலே வாழ்ந்து தமிழ் மொழிக்கு அளப்பெரும் தொண்டாற்றிச் சென் றிருக்கிறார்கள்.

பரணி இலக்கியம் பாடிய ஜெயங்கொண்டாரும், மூவருலா மொழிந்த ஒட்டக் கூத்தரும், நளவெண்பாவை ஆக்கிய புகழேந் தியாரும், பிள்ளைத்தமிழ் பாடிய ஆசிரியர்களும் இக் காலத்தே வாழ்ந்து தமிழ்மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங் களிப்புக்கு குறிப்பிடத்தக்கது.

தமிழின் தலை சிறந்த இலக்கண நூலாகிய நன்னூல் ஆசிரியர் பவணந்தியாரும், வடமொழி இலக்கண மரபைத் தமிழில் புகுத்திப் புரட்சியை ஏற்படுத்திய வீரசோழிய ஆசிரியர் புத்தமித்திரனாரும், நேமிநாதம் தந்த நேமிநாதஅடிகளும், அகப் பொருள் விளக்கம் தந்த நற்கவிராச நம்பியும், யாப்பருங் கலம், யாப்பருங் கலக் காரிகை என்ற யாப்பிலக்கணம் தந்த அமிதசாகரரும், அணி இலக்கணம் தந்த தண்டியாசிரியரும் இக் காலத்தே வாழ்ந்து தமிழ் மொழியின் இயல்புகள் அமைப் புக்களை விளக்கும் இலக்சண நூல்கள் இயற்றித் தமிழ் மொழியை விருத்தியுறச் செய்துள்ளனர்.

இந்துக்களது முடிந்த முடிபாகிய சைவசித்தாந்த தத்து வத்தை ஆக்கிய சித்தாந்த அறிஞர்களாகிய மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியர், திருவிய லூர் உய்யவந்த தேவர், திருக்கடவூர் உய்யவந்த தேவர், திருவ திகை மனவாசகங் கடந்தார் போன்ற சித்தாந்த அறிஞர்களும் விசிட்டாத்வைதம் தந்த இராமானுஜர் இக் காலத்தில் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சோழராட்சிக் காலத்தில் பல புராண விற்பன்னர்கள் தோற்றம் பெற்றனர். பெரியபுராணம் தந்த சேக்கிழார், கந்த புராணம் அளித்த கச்சியப்பர், மேருமந்த புராணம் கொடுத்த வாமனாச்சாரியார் போன்றவர்கள் இக் காலத்தில் வாழ்ந்தமை கவனிக்கத்தக்கது ஆகும்.

இறைவன் மீது பாடப்பட்ட தேவாரப் பதிகங்களையும், கண்ணன் மீது ஆழ்வார்களினால் பாடப்பட்ட திருப்பாசுரங்களையும் காலத்திற்கும், கறையானுக்கும், செல்லுக்கும் இரையாகாது தேடி எடுத்து வகுத்து திருமுறைகளாகவும், திவ்ய பிரபந்தமாகவும் தொகுத்துக் கொடுத்த நம்பியாண்டார் நம்பியும், நாத முனிகளும் இக் காலத்தில் வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சோழராட்சிக் காலத்தில் திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், பல்லாண்டு பாடிய சேந்தனார், பட்டினத்துச் சித்தர் போன்றவர்கள் இக்காலத்தில் வாழ்ந்து இலக்கியங்களாக்கித் தமிழ் அன்னைக்குச் சூட்டினர்.

சோழர் காலத்தில் இராஜராஜ சோழனின் வாழ்க்கைச் சரிதத்தைக் கூறுகின்ற 'இராஜராஜேஸ்வரம்' என்னும் நாடகத்தை ஆக்கியளித்த நாடக ஆசிரியர் வாழ்ந்தமையைப் பிரகதீஸ்வரர் ஆலயக் கல்வெட்டுக் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

## சோழர் காலமும் இலக்கியப் பெரு வளர்ச்சியும்

தமிழக வரலாற்றில் பேரரசுக் காலமாகிய சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழ் மொழியானது காவியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள், தத்துவ நூல்கள், உரை நடை வளர்தல், தொகுப்பு முயற்சி, நாடக இலக்கியம் போன்ற பல் துறைகளிலும் புதுப் பொலிவுடன் புகழ் பெற்று விளங்கியதை அக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

வடமொழியில் தோன்றிய காவிய இலக்கணங்களைப் பின்பற்றித் தமிழ் மொழியில் காவியம் செய்யும் மரபு இக் காலத்தே பெருவளர்ச்சி பெற்றது. தண்டியாசிரியர் கூறிய காவிய இலக்கண விதிகள் அனைத்தும் சரியாக பொருந்தப் பெற்ற சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் என்பன இக் காலத்தே பெருவளர்ச்சி பெற்றது. நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாக குமாரகாவியம், உதய குமார காவியம் என்னும் சிறு காப்பியங்களும் இக் காலத்தில் வளர்ச்சி பெற்றது. காவிய இலக்கியத்திலேயே பெருங் காப்பியம், சிறுகாப்பியம் எனப் பாகுபடுத்தக் கூடிய அளவுக்கு இவ் இலக்கியத்தினது வளர்ச்சி இடம் பெற்றதனால் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை 'காவிய காலம்' என அழைக்கிறார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பரணி, உலா, கோவை, மாலை, பிள்ளைத் தமிழ் போன்ற பல்வேறு சிற்றிலக்கியங்களும் இக் காலத்தே வளர்ச்சி பெற்றன. 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்ற பன்னிரு பாட்டியலின் வரைவிலக் கணத்திற்கு அமைய குலோத்துங்க மன்னன் ஆணையின் பெயரில் அவனது படைத்தளபதியாகிய கருணாகரத் தொண்டமான் கலிங்க நாட்டை அழித்த செய்தியைப் பொருளாகக் கொண்டு ஜெயங் கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணி இக் காலத்தில் எழுந்த தலை சிறந்த பரணிச் சிற்றிலக்கியமாக அமைகிறது. தலைவன் ஒருவன் உலா வருவதாகக் கொண்டு அவனைப் பார்த்து பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு பருவத்துப் பெண்களும் அவன் மீது காதல் கொள்வதாகக் கொண்டு பாடப் படுவது உலா ஆகும். விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராஜராஜசோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்கள் மீதும் ஒட்டக் கூத்தர் பாடிய மூவருலா பிரபந்தங்கள் இக்காலத்தில் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. மன்னரையோ, கடவுளையோ, பெரியாரையோ நாயகராகக் கொண்டு அவரது குழந்தை பருவ வாழ்க்கையைக் காப்பு, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி, சிறுதேர், சிற்றில், சிறுபறை எனப் பத்துப் பருவங்களாக வகுத்துப் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் ஆகும். இது ஆண்பால், பெண்பால் என இரு வகைப்படும். (பெண்கள் கழங்கு, அம்மானை, ஊசல்) குலோத்துங்க சோழனைக் குழந்தையாகக் கொண்டு ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் இக் காலத்தில் எழுந்த பிள்ளைத் தமிழாகும்.

எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்ற தமிழ் மொழியில் பல்வேறு அமைப்புக்களையும் விளக்குகின்ற பல்வகை இலக்கண நூல்கள் இக் காலத்தே தோற்றம் பெற்றன. எழுத்து இலக்கணத்தையும், சொல் இலக்கணத்தையும் விளக்குவதாக வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் என்பனவும், பொருள் இலக்கணத்தை விளக்கும் நம்பியகப் பொருளும், யாப்பிலக் கணத்தை விளக்குவதாக யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை யும், அணி இலக்கணத்தை விளக்குவதாக தண்டியலங்காரமும் இக் காலத்தே எழுச்சி பெற்றமை கவனிக்கத்தக்கதாகும்.

சமய நம்பிக்கை சமுதாயத்தில் வேர் விட்டு வளர்ந்து நிலை பெற்ற பின்பு அச் சமய உண்மைகளை விளக்கும் சமய தத்துவம் தோன்றுவது வரலாற்று நியதி. சமய நம்பிக்கை

உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. உணர்ச்சி வேகம் என்றும் நிலைத்திராது. உணர்ச்சி குறைய அறிவு முதன்மை பெற அறிவைத் திருப்திப்படுத்தும் தத்துவம் தோன்றுவது தவிர்க்க முடியாததே. இதனடிப்படையில் பல்லவர் காலத் தோத்திரப் பாடல்களில் காணப்பட்ட கடவுள், உயிர், உலகு போன்ற அம்சங்களை ஆராய்ந்து அறியும் தத்துவ நூல்கள் சோழர் காலத்தில் தோற்றம் பெற்றது. திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராக ரணம் என்ற பதினான்கு சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களும், மேருமந்த புராணம், நரி விருத்தம், திருப்தியட் போன்ற அவைதீக தத்துவ நூல்களும் இக் காலத்தில் வளர்ச்சியடைந் தமை குறிப்பிடத்தக்கதாகும். இதனாலேயே பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் இக் காலத்தை தத்துவ நெறிக் காலம் என அழைக்கிறார். சங்க காலத்தில் இருந்த உரை நடையானது சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம் என்பவற்றினூடு வளர்ச்சியடைந்து தனித்தனி உரையாசிரியர்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது. பேராசிரியர் சேனாவரையர், இளம்பூரணர் போன்ற தமிழில் புகழ் பூத்த ஆசிரியர்கள் வாழ்ந்து பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கு உரை வகுத்து தமிழ் மொழியை விருத்தியுறச் செய்தமை மிகச் சிறப்பான அம்ச மாகும்.

இறைவன் மீது அன்பு வைத்து அவனது பெருமைச் சிறப் புக்களை எல்லாம் போற்றியும் புகழ்ந்தும் வியந்தும் தமது உள் ளத்து உணர்வுகளை வெளிப்படுத்திய போது பிறந்த தோத்தி ரப் பாடல்களும், திருப்பாசுரங்களும் கவனிப்பாரற்று காலத் துக்கும், கறையானுக்கும் செல்லுக்கும் இரையாகிக் கொண்டு இருந்த நிலையில் சோழப் பெருமன்னர்கள் அவற்றைத் தேடி எடுத்து வகுத்து திருமுறைகளாகவும், திவ்ய பிரபந்தம் ஆகவும் தொகுத்து பேணிப் பாதுகாத்துத் தமிழ் மொழியை வளர்ச்சி யுறச் செய்தனர்.

தமிழ் இலக்கிய சரிதத்தில் பன்னெடுங் காலம் முதலே நாடக வடிவம் இருந்தாலும் நம் கைக்குக் கிடைக்கும் நாடக இலக்கியமான இராஜராஜேஸ்வரம் என்னும் நாடகம் சோழப் பெருமன்னர் காலத்திலேயே தோற்றம் பெற்றது. இராஜராஜ

சோழனின் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு அமைகிறது எனப் பிரகதீஸ்வர ஆலயக் கல்வெட்டுக் கூறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

## சோழர் கால இலக்கியப் பண்புகள்

சோழர் காலம் பொருள் வளம் மிகுந்த சமுதாயத்தைக் கொண்டு விளங்கியதனால் அச் சமூகத்திலிருந்து தோன்றிய இலக்கியங்கள் பொருள் வளமும், செழிப்பும் மிக்க ஓர் உலகியல் வாழ்க்கையைச் சித்திரிப்பனவாக அமைந்தன. சோழர் காலக் காவியங்களும், சிற்றிலக்கியங்களும், புராணங்களும் உலகியல் வாழ்க்கையில் பிரதான இடம்பெறும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் விரிவாகச் சித்திரிப்பனவாக அமை கின்றன. தன்னிகரில்லாத் தலைவர்களது பிறப்பு, வளர்ப்பு, வீரம், காதல், சாதனை, துறவு என்பவற்றை அவர்களது உல கியல் வாழ்க்கையின் அம்சங்களோடு விரித்துரைப்பனவாகக் காவி யங்களும் உலகியல் வாழ்வின் ஒரு பகுதியான குழந்தைப் பருவத் தினைச் சித்திரிப்பனவாகச் சிற்றிலக்கியங்களும் விளங்குகின்றன.

உலகியல் வாழ்வினோடு வீடு பேற்றை அடையலாம் என்ற சமயக் கருத்துக்களை ஊடுபொருளாகக் கொண்டனவாக இக் கால இலக்கியங்கள் விளங்குகின்றன. சைவ சமயக் கருத்துக் களைச் சித்திரிப்பனவாகப் பெரியபுராணமும், கந்தபுராணமும், வைஷ்ணவ மதக் கருத்துக்களை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டு இராமாயணமும், பௌத்த தத்துவக் கருத்துக்கள் பொதிந்ததாகக் குண்டலகேசியும், சமண தத்துவக் கருத்துக் களை எடுத்து விளக்குவதாக சீவக சிந்தாமணியும் அமைகின்றது. கசப்பு மாத்திரைக்கு இனிப்புப் பூச்சளிக்கும் முயற்சியாக சிற்றின் பத்தின் ஊடே பேரின்பக் கருத்துக்களை விளக்குவனவாகச் சோழர் கால இலக்கியங்கள் அமைகின்றன.

சோழர் காலத்தில் தோற்றம் பெற்ற காவியங்கள் நாட்டு வர்ணனை, நகர வர்ணனை, ஆற்று வர்ணனை போன்ற பல வர்ணனைகளைக் கொண்டமைய வேண்டுமெனக் கூறப்படு வதனால் அத்தகைய நீண்ட வர்ணனைகளைத் தாங்கி வருவ தாகக் காவியங்கள் அமைகின்றன: 'தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்கக் கொண்டல்கள் முழவினோங்க' எனக் கம்பரும், 'தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங் கதம்' எனத் திருத்தக்க தேவரும், போர்க்களம் பற்றிப் பாடும்

பரணி போர்க்கள வர்ணனைகளையும், உலாவும் பிள்ளைத்தமிழும் அவை சார்ந்த வர்ணனைகளையும், புராணங்களில் நாட்டு, நகர வர்ணனைகள் காணப்படுவதனையும் குறிப்பிடலாம்.

சொல் அழகும், பொருள் அழகும் தோன்றாச் சுவை அழகு என்பவற்றை விளக்க உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் உயர்வுநவிற்சி போன்ற பல்வேறு அணி வகைகளைச் சோழர் கால இலக்கியங்கள் கொண்டமைகின்றன. தெரிந்த ஒரு பொருளைத் தெரியாத ஒரு பொருளோடு ஒப்பிடுவது உவமையணி. இவ் அணி மூலம் பொருள் விளக்கமும் அழகு நயமும் வெளிப்படும் அயோத்தி அரசை ஏற்றுக் கொள் என்ற போதிலும் அதைத் துறந்து கானகம் செல் என்ற போதும் எவ்வித மாற்றமும், சலனமும் இன்றி இருந்த இராமனது முகத்தைக் கூறவந்த கம்பன் ஒப்பதே முன்புபின் அவ் வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா' என அழகாக உவமையினைக் கையாளுகின்றார்.

ஒன்றை இன்னொன்றாக உருவகித்துக் காட்டுவது உருவகம் ஆகும். இவ் அணியும் சோழர் கால இலக்கியங்களில் கையாளப்படுகிறது. தமயந்தியை ஒரு அரசியாகக் காட்ட முற்பட்ட புகழேந்தியார் அரசனுக்குரிய அம்சங்கள் அவளிடத்தில் உள்ளன என்பதனைக் கூறும் போது 'வதன மதிக் குடைக்கீழ் ஆளுமே பெண்மை அரசு' என அரசனது வெண்கொற் குடையாக அவளது முகத்தை உருவகப்படுத்தியுள்ளார்.

வழக்கமான நிகழ்ச்சி ஒன்றில் புலவன் தனது கற்பனை வளத்தை ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றமாகும். தமயந்தி நளனைக் காட்டில் தேடி வருகையிலே பொழுது விடியப் போவதனால் சேவல்கள் கூவுவதைச் சொல்லவந்த புகழேந்தி,

'தையல் துயர்க்கும் தரியாது தன் சிறகாம்
கையால் வயிறலைத்து காரிருள் வாய் - வெய்யோனை
வாவு பரித் தேர் ஏறிவாவென்று அழைப்பது போல்
கூவின கோழிக் குலம்'

எனக் கூறுவதன் மூலம் தமயந்தியின் உடைய துயரத்தைத் தாங்காது சூரியனை அழைப்பதற்காகவே கோழிகள் கூவின எனத் தனது கருத்தை ஏற்றிச் சொல்கிறார். இவ்வாறே இராமனின் அம்புகள் இராவணனின் உடலெங்கும் தைத்திருப்பதற்கு,

'கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் ஜானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

என மண்டோதரி வாயிலாகக் காரணம் கற்பித்து கம்பன் தற்குறிப்பேற்றத்தைக் கையாளுகிறார்.

தாம் சொல்ல வந்த பொருளைச் சிறப்பிப்பதற்கு அதனை அதிகளவு உயர்த்திச் சொல்வது உயர்வு நவிற்சி ஆகும். கம்பன் அயோத்தியின் சிறப்பினைச் சொல்லும் போது கொள்வாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை என்பதனால் அங்கு பொருள் இரப்பவர்களோ பொருள் கொடுப்பவர்களோ இல்லை என உயர்வு நவிற்சியைக் கையாளுகிறார்.

பல்லவர் காலத்தில் நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும் இறைக்காதல் பக்தி இலக்கியமாகப் பரிணமித்தது. இவ் இலக்கியங்களில் காணப்பட்ட பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களைப் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் திரட்டப்பட்டு சைவ சித்தாந்தக் கோட்பாடாக உருப்பெற்று அது பற்றிய விளக்கங்களும் இலக்கியப் பொருளாகி சைவ சித்தாந்த சாத்திர நூல்களாக பதினான்கு சித்தாந்த நூல்களும், சமண, பௌத்த தத்துவ நூல்களும் தோற்றம் பெற்றன. இந் நூல்கள் மூலம் தத்துவக் கருத்துக்கள் இலக்கியப் பொருளாக அமைவதாயிற்று.

காவியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள், தத்துவ நூல்கள், உரை நடை வளர்தல், தொகுப்பு முயற்சி, நாடக இலக்கியம் என்ற இன்னோரன்ன துறைகள் சோழர் காலத்தில் தமிழ் மொழியில் விருத்தி அடைந்து காணப்பட்டன. இவ்வாறு பன்முகப்பட்ட வளர்ச்சியினைக் கொண்டு தனித்தனி இலக்கிய வடிவங்களாகச் சிறந்து நிற்பதை நோக்கும் போது தொகை வகை, புதிய வடிவம், புதிய அமைப்பு, சிறப்பு எனப் பல கோணங்களில் தமிழ் மொழி சிறந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும் அன்பினைச் சொல்லும் பக்தி இலக்கியங்களாகிய இசைத் தமிழைப் பாடுதற்குக் கையாளப்பட்ட விருத்தப்பாவும் அதன் துணைப் பாவினங்களும் சோழர் காலத்தே இயற்றமிழைப் பாடுதற்குப் பயன்பட்டது. சீவகனது கதையைக் கூறும் சீவக சிந்தாமணி ஆகிய இயற்றமிழ்

காவியத்தை விருத்தப்பாவில் அழகுறப் பாடியதன் மூலம் திருத்தக்கதேவர் ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கம்பர், சேக்கிழார் போன்ற பெரும் புலவர்களாலும் விருத்தப்பா கையாளப்பட்டதனால் அதன் உச்சவளர்ச்சியையும் சோழர் காலம் பெற்றமைகிறது.

வடமொழிச் சொற்களும், சொற்றொடர்களும் பெருமளவு தமிழில் புகுந்தும், மிகுந்தும் காணப்படும் நிலை சோழர் காலத்திலேயே ஏற்பட்டது. வடமொழி வான்மீகி இராமாயணத்தை தழுவிக் கம்பன் இராமாயணம் செய்ததும், ஸ்கந்த புராணத்தைத் தழுவி கச்சியப்பர் கந்தபுராணம் செய்ததும், வடமொழி இலக்கண மரபுகளை உள்வாங்கிப் புத்தமித்திரன் வீரசோழியம் ஆக்கியதும் இக் காலத்திலேயே ஆகும். வடமொழி இலக்கிய வடிவங்களாகிய காவியம் புராணம் என்பன வளர்ச்சியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பல்லவர் கால இலக்கியங்களும்

## சோழர் கால இலக்கியங்களும் ஓர் ஒப்பீடு

பல்லவர் கால இலக்கியங்களாகிய நாயன்மார்களது தேவார திருவாசகங்களும், ஒன்பது ஆழ்வார்களது திருப்பாசுரங்களும் சேரமான் பெருமாள் நாயனாரது திருக்கைலாய ஞான உலாவும் பக்தி சாரா இலக்கியங்களாகிய நந்திக் கலம்பகம், முத்தொள்ளாயிரம், பாரத வெண்பா, பாண்டிக்கோவை, கொங்கு வேளீர் மாக்கதை, இறையனார் களவியலுரை என்பனவும் அமைகின்றன. சோழர் கால இலக்கியங்களாக சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள், சிற்றிலக்கியங்கள் சிறு காப்பியங்கள், சித்தர் பாடல்கள் என்பன விளங்குகின்றன.

தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் முன்னைய காலங்களின் தொடர்ச்சியாகவே இலக்கிய செல் நெறி பாரம்பரியமாகச் செல்வதனை இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் சுட்டிச் செல்வர் மக்களின் வாழ்விலிருந்து முகிழ்க்கின்ற இலக்கியங்கள் அம் மக்களின் வாழ்க்கை முறைகளையும், பிரச்சினைகளையும் அரசியல் கலை, கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களையும் பாராட்டிச் செல்வது தவிர்க்க முடியாததே. பல்லவர் கால இலக்கியப் பாடு பொருளாகிய பக்தி, அகம், புறம், அறம், நீதி, ஆசார ஒழுக்கம்

வாழ்க்கை நிலையாமை என்பனவும், இலக்கிய வடிவங்களும் யாப்பு வகைகளும் சோழர் கால இலக்கியங்களில் சித்திரிக்கப் பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

பல்லவர் கால இலக்கியங்களின் பிரதான பாடுபொருள் ஆகிய பக்தி சோழர் கால இலக்கியங்களில் வெளிப்படுவதனைப் பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகிய காவியங் களில் அவதானிக்க முடிகிறது. பல்லவர் கால சுந்தரமூர்த்தி நாயனாரது திருத் தொண்டர் தொகை சோழர் காலத்தில் சேக்கிழாரது பெரியபுராணம் தோன்ற வழிவகுத்தது ஆழ்வார் களது திருப்பாசுரம் கம்பராமாயண காவியத்தின் கருப் பொருளா யிற்று. பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், மதுரகவியாழ்வார், போன்றோரது கருத்துக்கள் கம்பராமாயணத்தில் வெளிப்படு கின்றன.

குகனைத் தன் தம்பியாக ஏற்றுக் கொண்ட இராமனை திருமங்கையாழ்வார் 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவர்க்கு இன்னருள் சுரந்து மாலை மான் மட நோக்கியுன் தோழி உம்பி எம்பி என்று ஒழிந்திலை உகந்து தோழன் நீ எனக்கு ... ...' என்ற பாடலைக் கம்பர்; குகன், சுக்கிரீவன், விபீடணன் வரை தொடர்ந்து செல்வதனை 'ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனுக்கெம்பி நின் தம்பி நீ தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன ... ...' என்ற பாடல் புலப் படுத்துகின்றது.

பல்லவர் கால இறை காதலும் அகப்பொருள் துறையும் சோழர் கால இலக்கியங்களில் வெளிப்படுகின்றது. பல்லவர் காலத்தில் பாய்ந்தோடிய இறை காதலை 'முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள் ... ...' என்ற பாடலில் அப்பரும், 'காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ... ...' எனச் சம்பந்தரும் சித் திரிக்கின்றனர். சோழர் காலத்தில் 'கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெரு வாழ்வோ ... ...' எனச் சேக்கிழாரிடத்தில் இறை காதலாக வெளிப்படுகின்றது.

பல்லவர் காலத்தில் 'இப்பி ஈன்று இட்ட எறிகதிர் நித்தி லம் ... ...' என்ற முத்தொள்ளாயிரப் பாடலில் சிப்பிகளிலிருந்து பிறக்கும் ஒளி பொருந்திய முத்துக்கள் கிடைக்குமிடம் பாண்டி யன் உடைய துறைமுகமாகிய கொற்கை மட்டுமல்ல பாண்டிய னுடைய குளிர் சந்தனம் பூசிய மார்பை எண்ணி ஏங்கும் பெண்களின் கண்களில் முத்துக்கள் பிறக்கும் என அகப் பொருள் சுவை விளக்கப்படுகிறது. 'காதன்மை கண்ணிலே அடக்கிக் கண்ணெனும் தூதினால் துணி பொருள் உணர்த்தி தான் தமக்கு எனச் சீவக சிந்தாமணி... ...' என்ற பாடலில் சீவகனின் அழ

கில் ஈடுபட்ட கேமசரி அவனைக் கண்ணால் நோக்கிய போது அந் நோக்கத்திற்கு ஈடாகப் பாற்கடலில் தோன்றிய அமிர்தத் தையும், பரந்த பெரிய உலகத்தையும் பரிமாற வேண்டும் எனச் சீவகன் கூறுவது சோழர் கால அகப் பொருட் துறையில் காண முடிகிறது.

முத்தொள்ளாயிரத்தில் வரும் 'கண்ணார் கதவம் திறமின் களிறொடு தேர் ...' என்ற பாடல் பாண்டியன் உடைய வீரத் தின் உயர்வினைச் சுட்டுகிறது. இவ் அம்சமே சோழர் காலத் தில் கலிங்கத்துப் பரணியில் கடைதிறப்பு இடம்பெறக் காரண மாயிற்று என்பர். பல்லவர் கால நந்திக் கலம்பகம் நந்திவர் மனது வீரத்தைப் புகழும் புறப் பொருளாகவும் அப்பரது 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற வீர உணர்வும் சோழர் காலத் தில் இப் புறப்பொருள் மரபு கம்பரிடத்து இராமன் மூலமும், திருத்தக்க தேவரிடத்து சீவகன் மூலமும் வெளிப்படுகின்றது, இராமனின் வீரத்தை அனுமன் மூலமாகச் சித்திரிக்க வந்த கம்பன் 'விற்பெருந் தடந்தோள் வீர... ' எனக் குறிப்பிடுவது நோக்குதற்குரியதாகும்.

பல்லவர் காலத்தே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று இருந்த சமண, பௌத்த மதங்களில் அறம், நீதி, ஆசார, ஒழுக்க, நிலையாமைக் கருத்துக்கள் சோழர் கால இலக்கியங் களில் பரவலாகக் காணமுடிகிறது. 'வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்' என்றும், 'ஊனுடம்பு புன்குரம்பை ஒன்றுமிலா குப்பை' என்றும், 'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக, வாய்மனம் தூய்மையாக' என்றும் பல்லவர் கால இலக்கியங்களில் பயிலப்பட்ட கருத்துக்கள் சோழர் கால இலக் கியங்களிலும் தொடர்கின்றது. குண்டலகேசி 'பாலையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்... மீளும் இவ் இயல்புமின்னே மேல் வரு மூப்பு ஆகி' எனக் கூறுவதும், 'பொய்கை இன்றித் தேறல் ஐம்பொறியும் வாட்டி உய்வகை உயிரைத் தேயா ஒழுகுதல் ஒழுக்கம்' எனச் சிந்தாமணியும் பிறன் மனை நோக்காத பேராண்மை கொண்ட அறத்தின் நாயகனாக இராமனையும், கற்பின் கனலியாக சீதையையும், வாய்மையும் மரபும் காத்த வள்ளலாகத் தசரதனையும், தன்னலங் கருதாத சேவை மனப்பான்மை கொண்டவனாக அனுமனையும், பண்பி மில் குணத்தனாகப் பரதனையும் காட்டுகின்றது.

பல்லவர் காலத்தே பாய்ந்தோடிய பக்தி உணர்வினைப் பாடுதற்குப் பயன்பட்ட இயற்கை வர்ணனைகள் சோழர் கால இலக்கியங்களில் துள்ளு நடை போட்டது. 'மான் பாய வய

லருகே மரமேறி மந்தி பாய மடுக்கண் தோறும் தேன் பாய மீன் பாய செங்கமல மொட்டலருந் திருவையாறே' எனச் சம்பந்தரும், 'அணிமயில்கள் நடமாடும் அணி பொழில் சூழ் வயலில் சுரும்பருகே கருங்குவளைக் கண் வளரும் களனிக் கம லங்கள் முக மலரும் கலய நல்லூர்' எனச் சுந்தரரும், 'தேனார் பூஞ்சோலை திருவேங்கடம்' என ஆழ்வார்களும் பாடிய இயற்கை வர்ணனைகளை 'தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கதம்' எனத் திருத்தக்கதேவரும், 'தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்கக் கொண்டல்கள் முழவி னோங்கக் குவளைகள் விழித்து நோக்க' எனக் கம்பரிடத்தும், 'காடெல்லாம் களைக் கரும்பு காவெல்லாம் குழைக் கரும்பு, மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் தெருங்குவளை' எனச் சேக்கிழாரிடத்தும், 'செந்நெல் கரும்பினோடு இகலும் தீஞ்சுவை கண்ணலக் கரும்புதன் கமுகை காய்ந்து எழும்——' என வளை யாபதியிலும் வர்ணனைகள் பயிலப்படுகின்றன.

பல்லவர் காலத்தே இறை பெருமையைப் புகழ்ந்தும், வியந்தும், போற்றியும் சேரமான் பெருமாள் நாயனாரினால் பாடப்பட்ட திருக்கைலாய ஞான உலா பிரபந்தம் சோழர் காலத்தில் அரசனது புகழ்பாடி உலகியல் வாழ்க்கையைச் சித் திரிப்பதாக ஒட்டக்கூத்தரது மூலரூலாவாக உருப் பெறுகிறது.

கண்ணனைக் குழந்தையாகவும், தம்மைத் தாயாகவும் கொண்டு பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் பாடிய பாடல் கள் சோழர் காலத்திலே பிள்ளைத் தமிழ் என்ற சிற்றிலக்கியம் தோன்ற அடிக்கல் ஆயிற்று.

திருஞான சம்பந்தரும், நம்மாழ்வாரும் பரமனிடத்தும் பரந்தாமனிடத்தும் 'சிறையாரும் மடக்கிளியே' என்றும், 'நீயலையே சிறுபூவாய் நெடுமால் அவர்க்குத் தூதாய்' என்றும், கிளியையும், பூவையும் தூது அனுப்பிய பாடல் வரிகள் சோழர் காலத்தில் உமாபதி சிவாச்சாரியாரது நெஞ்சு விடு தூது என் னும் தூதுப் பிரபந்தத்திற்குத் தோற்றுவாய் ஆயிற்று.

பல்லவர் காலத்தில் நின்ற சீர் நெடுமாறன் மீது பாடப் பட்ட பாண்டிக்கோவையும், மணிவாசகரது திருக்கோவையாரும் சோழர் காலத்தே பொய்யா மொழிப் புலவரால் தஞ்சை வாணன் கோவை பாடக் காரணமாயிற்று.

சேரமான் பெருமாள் நாயனாரது பொன்வண்ணத்தந்தாதி, பெரியாழ்வாரது பெரிய திருவந்தாதி என்பன சோழர் காலத்தே

நம்பியாண்டார் நம்பியினது திருத்தொண்டர் திருவந்தாதியும், கம்பரது சரஸ்வதி அந்தாதியும், சடகோபர் அந்தாதியும் தோன்றக் காரணமாயிற்று.

பல்லவர் காலத்தே கையாளப்பட்ட வெண்பா, விருத்தப்பா போன்ற யாப்பு வடிவங்கள் சோழர் கால இலக்கியங்களில் வெளிப்படுவதனோடு விருத்தப்பாவினதும், வெண்பாவினதும் உச்ச வளர்ச்சியைக் கம்பரும், புகழேந்தியும் சிறப்புறப் கையாண்டதனால் விருத்தத்திற்கு உயர் கம்பர் என்றும், வெண்பாவிற் புகழேந்தி என்றும் பிற்கால புலவர் பெருமக்களால் போற்றப்படுகின்றனர்.

தமிழ்மொழியில் உரை நடை என்ற பெயரில் முதன் முதல் தோற்றம் பெற்றது பல்லவர் காலத்து இறையனார் களவியல் உரையாகும். இதுவே வளர்ச்சியடைந்து சோழர் காலத்தே பேராசிரியர், சேனாவரையர், இளம்பூரணர் போன்ற புகழ் பூத்த உரையாசிரியர் தோன்றி உரையாக்கம் செய்யக் காரணமாயிற்று என்பர்.

# நாயக்கர் காலம்

சோழர் காலத்தை அடுத்து தமிழ் இலக்கியவரலாற்றில் இடம் பெறும் காலப்பகுதி நாயக்கர் காலமாகும். கி.பி. 14-ம் நூற்றாண்டு தொடக்கம் 17-ம் நூற்றாண்டு முடியவுள்ள 400 ஆண்டுகளை உள்ளடக்கியது என பேராசிரியர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவர்.

## வரண்ட காலம் என அழைப்பதற்கான காரணங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்பவர்கள் நாயக்கர் காலத்தை வரண்ட காலம் எனக் கூறுகின்றனர். தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகம், வரலாறு என்பவற்றின் உன்னதமான நிலையைப் பெற்ற காலமாகிய சோழர் காலத்தோடு ஒப்பு நோக்கி இக்காலம் வரண்ட காலம் எனக் குறிப்பிடுகின்றனர். சோழர் காலத்திலிருந்த அரசியல், பொருளாதார, சமூக காரணங்கள் நாயக்கர் காலத்தில் சிறப்பாக அமையவில்லை. ஒரு நாட்டின் மக்களின் இலக்கிய முயற்சிகளைத் தீர்மானிக்கும் பாங்கு முற்கிழந்த அம்சங்களையே பொறுத்தது, ஓங்கு புகழ் பெற்ற சோழ மன்னர்கள் ஆட்சி குன்ற தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் தன்னிலை குன்ற வளமான இலக்கியங்கள் தோன்ற முடியாது போய் விட்டது என்பர்.

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் பெரும் சாம்ராச்சியமாகத் திகழ்ந்த தமிழ்நாடு சிதைந்து குறுகி குறுநில மன்னர்களினாலும், பாளையக்காரர்களினாலும் ஆளப்படும் நிலை உருவாகியது. சோழப் பேரரசைப் போன்று உறுதிமிக்க நீண்டகால அரசாக இது இல்லாததனால் தமிழகம் பல்வேறு சமஸ்

தானங்கள் ஆகவும், சிற்றரசுர்கள் ஆகவும் ஆகிக் கொண்டது. தமிழ் மொழியையும் தமிழர் தம் கலை, கலாசார, பண்பாட்டு பாரம்பரியங்களையும் பாதுகாத்து வந்த அரசு அழிவு பெறும் நிலை உருவாகிய போது பஞ்சமும் பசியுமே தலை விரித்தாடியது. இத்தகைய சமுதாயச் சூழ்நிலை தமிழ் மொழியிலே வளமான இலக்கியங்களையோ வகையான காவியங்களையோ உருவாக்க முடியாமல் போய்விட்டது.

நாயக்கர் காலத்தில் வேற்றுமொழி பேசும் அந்நியர்கள் ஆகிய இஸ்லாமியர்கள் தமிழகத்தில் வேந்தர்களாய் ஆட்சிபுரிந்தனர். தமிழரசர்கள் தம்மரசு இழந்தனர். தமிழ்ப்பேரரசு தகர்த்தது. தமிழ் மொழியே புறக்கணிக்கப்பட்டது. இத்தகைய சூழ்நிலையைக் கொண்ட அந்நியராட்சியில் தலை சிறந்த இலக்கியங்கள் தோன்ற முடியவில்லை. வாழ்க்கை வள்மே சிதைந்து அமைதி குன்றிக் குலைந்த சூழ்நிலையில் பார காவியங்களைப் பைந்தமிழ் கவிஞர்கள் படைக்கவில்லை. காலத்தின் கோலத்திற் கேற்றாற் போல் இக் காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் சிறு சிறு இலக்கியங்கள் ஆகிய பிரபந்தங்களையே பிரசவித்தனர். வளமான காவியங்கள் தோன்றிய தமிழகச் சூழ்நிலையிலே இருந்து வேறுபட்டு சிறுசிறு இலக்கியங்கள் தோன்றிய நாயக்கர் காலம் வரண்ட காலம் என அழைக்கப்படுகிறது.

வரலாற்று அறிஞர்களினால் ஒரு கையில் வாளுடனும் மறுகையில் குர்ஆனுடனும் வந்திறங்கினர் எனக் குறிப்பிடப்படும் இஸ்லாமியரது வருகை தமிழகத்திலே தமிழ் மக்கள் மத்தியிலே மிகவும் பயங்கர விளைவை ஏற்படுத்தின. இஸ்லாமியரது வருகை பற்றிக் குறிப்பிடுகின்ற போது இதைப் படையெடுப்பு என்று கூறுவதிலும் பார்க்க கொள்ளையடித்தல், சூறையாடுதல் என்று குறிப்பிடுவதே பொருந்தும் என்ற கூற்று தமிழகத்தின் செல்வம் கொள்ளை அடிக்கப்பட்ட சூழ்நிலையைக் காட்டுகின்றது. மாலிக் கபூர் என்பவர் இராமநாதபுரம் சோமநாதர் ஆலயத்தின் மீது 17 தடவைகள் படையெடுத்தான் என்கின்ற வரலாற்றுக் குறிப்பு இஸ்லாமியரது மத அழிப்பு நடவடிக்கைகளையும் கொள்ளையடிக்கும் முயற்சிகளையுமே கோடி காட்டுகிறது எனலாம். இவ்வாறு தமிழகத்தினது செல்வங்கள் அனைத்தும் இஸ்லாமியர்களினாலே கொள்ளையடிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் பொருள் வளம் அற்ற சூழ்நிலையையே ஏற்படுத்தியது. பொருள் வளம் அற்ற சூழ்நிலையினால் விரக்தி, வேதனை, துன்பம் துயரமடைந்த தமிழ் மக்களது வாழ்க்கையில் பஞ்சமும் பசியும் பட்

டினியும் விஞ்சிக் காணப்பட்டதனால் பேரிலக்கியங்களோ, இலக்கணங்களோ, காவியங்களோ தோன்றமுடியாது வரட்சியடைந்தன.

நாயக்கர் காலத்தே ஏற்பட்ட பொருள்வளம் அற்ற சூழ்நிலையினால் புலவர்கள் ஆதரிக்கப்படாத நிலையைத் தோற்றுவித்தது. சங்க காலம் தொடக்கம் சோழர் காலம் வரைக்கும் தமிழ் அரசர்கள் ஆதரவோடு தமிழ் மொழியை வளர்த்து வந்த புலவர் பெருமக்கள் நாயக்கர் காலத்திலே அங்காடி வீதிகளில் அல்லலுற்றுத் திரிந்தனர். பொருள் வளமற்ற நிலை புலவர் மத்தியிலே நம்பிக்கை வரட்சியை விரக்தி மனப்பான்மையை முடிவற்ற சோகத்தை ஏற்படுத்தியது. மூவேந்தர் அற்று முடியுமற்று முச்சங்கமும் போய் பாவேந்தர் காற்றில் இலவும் பஞ்சாகப் பறந்த சூழ்நிலை கொண்ட நாயக்கர் காலம் செழிப்பற்ற ஓர் உலகியல் வாழ்க்கையில் சிந்தனைகளது வளர்ச்சியையோ, கற்பனை ஆற்றல்களது பெருக்கத்தையோ அக்காலப் புலவனுக்கு ஏற்படுத்தாததனால் புலவர் பெருமக்களினால் செழிப்பு மிக்க இலக்கியங்களைத் தோற்றுவிக்க முடியாமல் போக இம் என்னும் முன்னே 700, 800 உம், அம் என்னும் முன்னும் 1000 உம் பாடுகின்ற காளமேகம் போன்ற புலமை மிக்க கவிஞர்கள் தம் புலமை வெளிப்படும் முறையில் புகழ் மிக்க இலக்கியங்களை ஆக்க முடியாது போய்விட்டமை நாயக்கர் காலத் தன்மையினை வெளிப்படுத்துகின்றது.

நாயக்கர் காலத்தே இஸ்லாமியர்கள் தம் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்ய அம் மதக் கருத்துக்களைத் தமிழ் மக்கள் தம் சொந்த மதக் கருத்துக்களாக ஏற்றுக் கொள்ள மறுத்தமை நாயக்கர் காலத்தே வரண்ட இலக்கியங்கள் தோன்றக் காரணமாயிற்று என்பர்.

## இலக்கியங்கள்

நாயக்கர் காலச் சமுதாயம் உயிர்த் துடிப்பும் உணர்ச்சி பெருக்குமுள்ள இலக்கியங்களை தோற்றுவிக்கவில்லை எனலாம். இதனால் பொருட் சிறப்பும் உணர்ச்சிப் பெருக்கும் சிறந்து நிற்பது அன்றி சொல் அலங்காரங்களும், அணி நயங்களும் மிகுந்து விளங்குவனவாகவே காணப்படுகின்றன. பொருள் வளமற்ற புலவர்கள் ஆதரிக்கப்படாது அல்லலுறும் தன்மை மிகுந்து விளங்கியமையால் புலவர்கள் தமது வித்துவச் செருக்கை வெளிப்படுத்தினர். சமயம், தத்துவம், கடவுள் என்ற கருத்துக்கள் மேலோங்கிக் காணப்பட்டதனால் இவற்றைக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றைச் சிறப்பிக்கும் தல புராணங்களும் தோற்றம் பெற்றன. இக் கால சமுதாயம் புதிய பொருள் எதனையும் இலக்கியம் படைக்கும் புலவருக்கு வழங் காததனால் பழைய காலப் பெருமைகளைத் திரும்பிப் பார்த்த புலவனுக்கு சோழர் காலத்தில் பிரமாண்டமான ஆலயங்கள் கற்பனை உணர்ச்சியைத் தூண்ட அவற்றைக் கொண்ட தல புராணங்களைப் பாடினர்.

சோழர் காலக் காவியங்களைத் தொடரக் கூடிய வாய்ப்பு நாயக்கர் காலத்தில் இல்லை. சோழர் காலத்தின் சிற்றிலக்கியங் கள் நாயக்கர் காலத்திலும் தொடர்கிறது. பரணி, உலா, பிள் ளைத் தமிழ் என்பன மட்டுமன்றி கோவை, அந்தாதி, கலம்ப கம், தூது, மாலை முதலான சிற்றிலக்கியங்கள் இக் காலப் பகுதியில் தோற்றம் பெற்றன. இதனால் சிற்றிலக்கிய காலம் என அழைக்கப்படுகிறது.

ஆதரிப்பாரின்றி அங்காடி வீதியில் அல்லலுற்றுத் திரிந்த நாயக்கர் காலப் புலவர்கள் தாம் கண்டு கேட்டவற்றைத் தனித் தனி பாடல்களாகப் பாடினார்கள். சொல்லலங்காரங்களும் அணி நயங்களும் கொண்டமையும் புலவர்களினது வித்துவச் செருக்கை வெளிப்படுத்துவனவாக இத் தனிப்பாடல்கள் விளங்குகின்றன.

சமயம், கடவுள், தத்துவம், என்பவற்றைச் சித்திரித்து பல்வேறு சொல்லங்காரங்களையும், சந்த நயங்களையும் கொண்ட இலக்கியங்களாக அருணகிரிநாதரது திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, குமரகுருபரது சகல கலா வல்லிமாலை, கந்தர் கலிவெண்பா என்ற இலக்கியங்கள் அமைகின்றன.

அரசனையும், வள்ளலையும், கடவுளையும் கடவுள் தம் மெய்யடியாரையும் பாராட்டிச் சென்ற தமிழ் இலக்கியம் இக் காலப் பகுதியில் பொதுமக்கள் பால் தம் முகத்தைத் திருப்பி யதனால் திரிகூடராசப்பக் கவிராயரது குற்றாலக் குறவஞ்சியும் முக்கூடற் பள்ளும் பொதுமக்கள் இலக்கியமாக நாயக்கர் காலத் தில் மிளிர்வதனை அவதானிக்க முடிகிறது.

## இலக்கியப் பண்புகள்

நாயக்கர் காலச் சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்ப கடவுளை யும் சமயத்தையும் கூடுதலாக சித்திரிக்கும் இலக்கியங்கள் தோற் றம் பெற்றன. முஸ்லிம்களது படையெடுப்பினால் தமிழர் தம் சமய தத்துவக் கோட்பாடுகள் வெளிப்படையாக இயங்கக் கூடிய

சூழ்நிலை தென்படவில்லை. அந்நியரை எதிர்க்க வலுவற்றிருந்த தமிழ் மக்கள் தம் சமய தத்துவக் கருத்துக்களை இலக்கியமாகப் படைக்க முற்பட்டனர்; சைவ, வைஷ்ணவ மதங்கள் தம்முள் உடன்பட்டு சமய சார்பான இலக்கியங்களைத் தோற்று வித்தனர். புதுவாகத் தமிழகத்தில் தோற்றம் பெற்ற மதங்கள் தம் சமயக் கருத்துக்களை நிலை நிறுத்த இலக்கியங்களைத் தோற்று வித்தன. நாயக்கர் காலத்தில் தொழிற்பட்ட மடாலயங்கள் அல்லது ஆதீனங்கள் அரசர்களின் நிலையில் நின்று புலவர்களை ஆதரித்ததனால் சமய சார்பான இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு நாயக்கர் காலத்தில் சமயச் சார்பான இலக்கியங்கள் கூடுதலாகத் தோற்றம் பெற்றதனால் சமயச் சார்பைக் கொண்டு காணப்படுகின்றன. நாயக்கர் காலத்தில் முருகப் பெருமான் போர்க் கடவுளாகவும், வெற்றிக் கடவுளாகவும் அவரது கையாயுதமாகிய வேல் பகையை அழிக்கும் கருவியாகவும் சிறப்பிக்கப்படுவது நாயக்கர் காலச் சமயச் சார்பினைப் புலப்படுத்துகின்றது.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இயக்கங்களின் பெறுபேறாகச் சோழர் காலத்தில் தத்துவம் சார்பான விளக்கங்கள் உருவாகின. சோழர் காலத்தில் அரசரும் அவர் தம் திறன்களும் விதந்து பாராட்டப்பட்ட அதே வடிவில் நாயக்கர் காலத்தே தத்துவ நூல்கள் தோற்றம் பெற்றன. சோழர் காலத்தில் உலகியலைப் பாட எழுந்த இலக்கியங்கள் நாயக்கர் காலத்தே தத்துவத்தைப் பாட எழுந்தன. நாயக்கர் காலத்தில் புதுவதாகப் புகுந்த மதங்கள் தம் சமய தத்துவக் கொள்கைகளை நிலை நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட அதை விளக்குகின்ற சமய தத்துவ இலக்கியங்களைத் தோற்றுவித்தன. வடமொழிக் கல்வியும், வடமொழிக் கலாசார தொடர்பும் இத்தத்துவ விளக்க நூல்களுக்கு உள் உரமாக அமைய தத்துவம் சார் கொள்கைகள் வலுவடைந்தன. இதனாலேயே சோழர் காலத்தோடு நாயக்கர் காலத்தை இணைத்து தத்துவ நெறிக் காலம் எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

நாயக்கர் கால இலக்கியங்களில் மற்றோர் பண்பு பழமை போற்றுதலாகும். நாயக்கர் கால சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி இப் பண்பிற்கான காரணத்தைப் புலப்படுத்துகின்றது. அந்நியர் ஆதிக்கத்திற் கட்டுண்டு கிடந்த தமிழ் நாட்டு மக்கள் தம்மால் புதுவதாக ஒன்றும் செய்ய முடியாத நிலையிலே முன்னோரின் முதுசொமான அவர்களின் இலக்கியப் பங்களிப்பினைப் பேணிப் பாதுகாப்பதைக் காணலாம். மடங்கள் ஆதீனங்

களிலே இலக்கிய இலக்கணங்கள் கற்பிக்கப்பட்டன. உரையாசிரியர்கள் பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்தும் படிப்பித்தும், பதிப்பித்தும் பேணினர். பல்லவர் காலத்து எழுந்த பக்திப் பாடல்கள் ஆலயங்களிலும் ஆதீனங்களிலும் ஓதப்பட்டமையும் ஆழ்வார்களினாலும் நாயன்மார்களினாலும் விதந்து போற்றிப் பாடப்பட்ட தலங்கள் மீதும் தலபுராணங்கள் போற்றிப் பாடப் பட்டமையும் பழமை போற்றும் பண்பினையே புலப்படுத்து கின்றது.

வளமற்ற சூழ்நிலையும் செழிப்பற்ற உலகியல் வாழ்க்கையும் புலவர்கள் ஆதரிக்கப்படாத நிலையைத் தோற்றுவித்தது. இச் சூழ்நிலை புலவனுக்குத் தனது வித்துவத் திறமையை வெளிக் காட்ட வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. பொருள் வகையில் சிறப்பற்ற இலக்கியங்களை வித்துவத் திறமையைக் கொண்டே சிறப்பிக்க வேண்டிய தேவையும் புலவனுக்கு ஏற்பட்டது.

'முக்காலுக்கு ஏகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கால் அரைக்கால் கண்டஞ் சாமுன் - விக்கி
இருமாமுன் மாகாணிக் கோமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது'

மூன்று கால்களாகக் கடி தாங்கும் முதுமைப் பருவத்தை அடைவதற்கு முன்பு தலையில் நரை விழுவதற்கு முன்பு கால தூதர்களின் காலைக் கண்டு அஞ்சுவதற்கு முன்பு விக்கி இருமுவதற்கு முன் சுடுகாட்டிற்கு செல்லுவதற்கு முன்பு காஞ்சிபுரத்தில் மாமரத் தின் கீழ் வீற்றிருக்கும் இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பதனை விளக்குவதற்கு முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என வாய்ப்பாட்டு வரிசை புரளாமல் வித்துவச் செருக்கைக் காளமேகப் புலவர் வெளிப் படுத்தி உள்ளார்.

வளமற்ற நாயக்கர் காலச் சமுதாயச் சூழ்நிலை எரிச்சல், கோபம், ஆத்திரம் போன்ற உணர்வுகளை மனிதனுக்கு ஏற்படுத்தியது. இவ் உணர்வுகளின் வெளிப்பாடாகப் பலவாறு திட்டுதல் அல்லது ஏசுதல் என்ற வசை, நாயக்கர் காலப் பகுதியில் கூடுதலாகக் காணப்பட்டன. இத்தகைய வசையினைக் கொண்டமையும் ஏராளமான பாடல்கள் நாயக்கர் காலத்திலே தோற்றம் பெற்றன. வசைபாடக் காளமேகம் எனச் சிறப்பிக்கப்படும் அளவிற்குக் கூடுதலாக வசை காணப்பட்டது.

'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்று
பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தை
கோட்டானே நாயே குரங்கே உன்னையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்'

என்ற பாடலை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

வித்துவச் செருக்கு வெளிக்காட்டப்பட்டதனால் உவமை, உருவகம், உயர்வுநவிற்சி, சொற்பின்வருநிலையணி, முன் வரு நிலையணி, பலபடபுனைவணி முதலான சொல் அலங்காரங் களும், யமகம், திரிபு, மடக்கு, சிலேடை முதலான சொல்லணி களும் இவ் இலக்கியங்களில் கூடுதலாகக் கையாளப்பட்டன. சொல்லலங்காரங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அருணகிரி நாதரது அனுமனை வர்ணிக்கும் முறையை,

'இலங்கையில் இலங்கிய இலங்களுள் இலங்கருள்
இலெங்கனும்
இலங்கென - முறையோதி - இடுங்கனல் குரங்கு'

என்ற பாடலைச் சுட்டிக் காட்டலாம். திருப்புகழில் 1000 - க்கு பேற்பட்ட சந்தங்கள் உண்டு எனக் கூறப்படுகிறது. சந்தநயம் மிக்க மற்றொரு இலக்கியமான குற்றாலக் குறவஞ்சியில் கதா நாயகி வசந்தவல்லியை வர்ணிக்கும் 'இருண்ட மேகம் சுற்றிச் சுருண்டு சுழி ஏறியும் கொண்டையாள் ... ' என்ற பாடலும் அவள் விளையாடுவதைக் குறிக்கும் 'செங்கையில் வண்டு கலின் கலின் என்று செயம் செயம் என்றாட' என்ற பாடலையும், மலை வளத்தைக் கூறுவதாக அமையும் 'வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்' என்ற பாடலையும் குறிப் பிட்டுக் காட்டலாம்.

ஆதரிப்பாரின்றி அல்லலுற்றுத் திரிந்த நாயக்ர் காலப் புலவர்கள் தமது வித்துவத் திறமையைப் புலப்படுத்தியதனால் இக்கால இலக்கியங்கள் எளிதிலே பொருளுணர்ந்து கொள்ள முடியாதவை ஆயிற்று. ஒருவனது இலக்கியம் எந்தளவிற்குப் பிறரால் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறதோ அவ்வளவிற்கு அவன் சிறந்த புலவன் என ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

'மடியாத தக்கன் மகம் போல கூட்டி முடியாத கூந்தலி னால்' என்ற நாய்க்கர் காலப் புலவனது உவமையை விளங்கிக் கொள்ள தக்கனது மகம் அது ஏன் முடியாமற் போனது' என்ற அறிவு ஒருவனுக்குத் தேவை. இவ்வாறே இறைவனும் இறைவி யும் இணைந்த தோற்றத்திற்கு சிவப்பிரகாரச சுவாமிகள் குறிப்

பிடும் இலக்கண சூத்திர உவமையை விளங்கிக் கொள்ள இலக்கண அறிவு தேவை. அகராதியும் ஆசானும் துணை செய்தாலன்றி உட்புக முடியாத இரும்புக் கோட்டைகளாக நாயக்கர் கால இலக்கியங்கள் விளங்கின.

நாயக்கர் காலம் வரை அரசனையும், வள்ளல்களையும், கடவுளையும், கடவுள் தம் மெய்யடியாரையும் போற்றிப் புகழ்ந்து சென்ற தமிழ் இலக்கியம் நாயக்கர் காலப் பிற்பகுதியிலே சாதாரண ஏழை பொதுமக்கள் பக்கம் தன் முகத்தைத் திருப்பியது. இவ் வகையில் குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு என்னும் இவ்விரு இலக்கியங்களும் முதன் முதலில் பொது மக்கள் பற்றிப் பாடும் தமிழ் இலக்கியங்களாக அமைகின்றன. குறவன் குறத்தியர் என்னும் சாதாரண பொதுமக்கள் குற்றாலக் குறவஞ்சியிலும், சாதாரண பள்ளன், பள்ளி முக்கூடற் பள்ளிலும் பாடப்படுகின்றன.

வடமொழிக் கதைப்பொருள் இலக்கிய வடிவம் இலக்கண அமைப்பு என்பவற்றோடு வடமொழிச் சொற்களை நிறையப் பெய்து தமிழ்ப் பாடல்கள் பாடும் வழக்கம் நாயக்கர் காலத்தில் காணப்பட்டது. 'நாத விந்து கலாதி நமோ நமோ' என்ற திருப்புகழின் ஒரு வரியிலேயே பல வடசொற்கள் வந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது.

## சோழர் காலமும் நாயக்கர் காலமும் ஓர் ஒப்பீடு

'கங்கா நதியும் கடாரமும் கைவரப் பெற்று சிங்காசனத்தே வீற்றிருந்த செம்பியர்கள் கோன்' என்று புகழப்படுகின்ற சோழ மன்னர்களது ஆட்சி தமிழ் நாட்டில் மாத்திரமன்றி தமிழ் நாட்டிற்கு அப்பாலுள்ள கடல் கடந்த நாடுகளையும் உள்ளடக்கிய பேரரசாக விளங்கியது. தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு தளைத்தது. சமுதாய பொருளாதார நிலை உயர்ந்தது. இலக்கியத் துறையிலும் பலகலைக் கோயில்கள் எழுந்து பல் துறை வளர்ச்சியைப் பெற்றது. இந் நிலையிலே இருந்து வேறுபட்டு தமிழர் தம்மரசு இழந்து தமிழ்ப் பேரரசு தகர்ந்து வேற்றுமொழி பேசும் அந்நியர்கள் வேந்தர்களாய்த் தமிழகத்தை ஆண்ட காலம் நாயக்கர் காலம் ஆகும். இவ்விரு காலங்களிலும் காணப்பட்ட அரசியல், சமுதாய, பொருளாதார வளர்ச்சிகள் அவ்வக்கால இலக்கியகளைத் தீர்மானிப்பனவாய் அமைந்தன.

கடல் கடந்த நாடுகளையும் கட்டியாளுகின்ற சோழப் பேரரசினது சொந்தக்காரர்களாக இருக்கிறோம் என்ற பெரு மித உணர்விலே உந்தப்பட்ட சோழர் கால மக்கள் புத்துணர் வும் புத்தூக்கமும் மிக்க புதுப் பொலிவு பெற்ற வளமார் காவி யங்களையும், வகையான இலக்கியங்களையும் தமிழ் மொழியின் அமைப்பு, இயல்பு, நுணுக்கம் என்பவற்றைப் பேணிப் பாது காக்கும் இலக்கண நூல்களையும் இயற்றினர். மூவேந்தர் அற்று முடியுமற்று முச்சங்கமும் போய்ப் பாவேந்தர் காற்றின் இலவம் பஞ்சாகப் பறந்த நாயக்கர் காலச் சமுதாயச் சூழ்நிலை கற் பனை வரட்சியும், வித்துவச் செருக்கின் வெளிப்பாட்டையும் வெளிப்படுத்தும் இலக்கியங்களையே தோற்றுவித்தன.

இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன் முதலிய புவிச் சக்கரவர்த்திகளும் திருத்தக்க தேவர், கம்பன் முதலிய கவிச்சக்கரவர்த்திகளும் ஆட்சி புரிந்த காலம் எனச் சில வர லாற்றாய்வாளர்கள் குறிப்பிடுவர். நாடும் மதங்களும் எந்நேர மும் அழிவுக்குள்ளாகும் எனப் பயந்த சூழ்நிலையில் பாவேந்தர் கள் அங்காடி வீதியில் அல்லலுற்ற காலம் நாயக்கர் காலம் இவ் வகையில் சோழர் காலத்தில் தோன்றிய நம் முன்னோரின் சொத்தாகிய இலக்கிய இலக்கணங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதையே தம் பணியாக நாயக்கர் கால மக்கள் மேற்கொண்டனர்.

சோழர் காலத்தில் உலகியல் வாழ்க்கையைச் சித்திரிப்பன வாகத் தமிழ் இலக்கியங்கள் அமைந்தன. தமிழ்க் கவிதா மண் டலத்தின் மிக உன்னத உச்சியும் கற்பனை உலகத்தின் விரிவும் பொலியும் தமிழ்க் கலை வாழ்வின் வளமும் சுவையும் தமிழ்ச் சொற்களின் அழகும் ஆற்றலும், தமிழ் நடையின் சிறப்பும் பெருமிதமும் சோழர் காலக் காவியங்களிலே துள்ளுநடை போட்டு உலகியலைச் சித்திரிக்கின்றன.

'வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்'

எனக் கம்பராமாயணம் கூறுவதைக் குறிப்பிடலாம். நாயக்கர் காலத்தே உலகியல் வாழ்வு சிறக்கும் பொருள் வளமற்ற நிலை தம் வயிற்றை வளர்க்க அன்றாடம் இரக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியதனை,

'புராதனமான தமிழ்புலவீர் இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென்னோ வந்தவாறு
சொல்வேன்
தராதலம் என்னும் தமிழ் மாறனையும் தன் தம்பியையும்
இராகவன் என்றும் இலக்குவன்என்றும் கூறவந்து
எய்தியதே.'

என்ற இரட்டையரின் பாடலைக் குறிப்பிடலாம்.

வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்று ஆறே எனக் கணக்கிட்டுக் கூறமுடியாதவாறு பல்வேறு யாப்புத் திறனையும் சந்த நயத்தையும் கட்டங்களுக்குத் தக்கவாறு கூறவேண்டிய கருத்துக்களுக்கு இயைந்தவாறு செய்யுள் வகைகளைக் கம்பன் அமைக்கிறான் இராமனைக் கவர வரும் சூர்ப்பனகையின் அழகு கொஞ்சும் நளின நடையை,

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்சவிய கஞ்சநிமிர் சீறடிகள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

என்ற சந்தத்தில் கூறிய கம்பன் தாடகை கோபக் கனலோடு இராமனை எதிர்க்கும் நிலையை,

'இறைக்கடை துடித்த புருவத்தளெயிறு என்னும்
பிறைக்கடை பிறங்கிட மடித்தபில வாயள்
மறைக்கடை அரக்கி வடவைக் கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பென விழித்தாள்'

என்ற சந்தத்தில் விளக்கியுள்ளார். கம்பராமாயணத்தில் காணப்படும் இப் பல்வேறு சந்தங்களை நாயக்கர் கால இலக்கியங்களான திருக்குற்றாலக் குறவஞ்சி, அருணகிரிநாதரது திருப்புகழ் போன்றவற்றில் வெளிப்படுகின்றன. திருப்புகழிலே 1008 சந்தங்கள் அமைந்துள்ளன என்பர்.

சோழர் காலத்தே உலகியல் சார்ந்ததாக அரசனும் அவனது திறன்களும் விதந்து பாடப்பட்ட சிற்றிலக்கியமானது நாயக்கர் காலத்தே தக்க யாகப் பரணி, பாசவதைப் பரணி, மேகவதைப் பரணி, அஞ்ஞானவதைப் பரணி எனத் தத்துவப் போரைப் பாடுகின்றது. உலகியலைப் பாடவந்த பரணி பிரபந்த வடிவத்தைத் தத்துவத்திற்கு மாற்றிய பெருமை நாயக்கர் காலப் புலவரையே சாரும் என சில வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுவர்.

சோழர் காலத்திலே உலகியல் வாழ்வோடு இறை பெருமையையும் பக்திச் சித்திரிப்பினையும் வியந்து போற்றுவனவாக சேக்கிழாரது பெரியபுராணம் தோற்றம் பெற்றது.

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவள மலர் மதி பூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார்'

எனச் சேக்கிழார் கூறுவதனைச் சுட்டிக் காட்டலாம்.

நாயக்கர் காலத்திலே மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்பினை விளக்கி தத்துவம் சார் கருத்துக்களை வலியுறுத்துவனவாக தணிகைப் புராணம், திருக் கூவப் புராணம், சீர்காளத்திப் புராணம், திருக்கழுக்குன்ற புராணம் முதலிய தல புராணங்களை இயற்றினர்.

சோழர் காலத்திலே மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனது குழந்தைப் பருவ வாழ்க்கையைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் இலக்கியமாக குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் அமைகிறது. பிள்ளைத் தமிழ் இலக்கியத்திலே இறைவன் அல்லது இறைவியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவர்களது குழந்தைப் பருவங்களைக் கற்பனை செய்து பாடுவதாக நாயக்கர் காலத்தில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் போன்ற பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் விளங்குகின்றன.

சோழர் காலத்தில் மன்னன் வீதியுலா வருவதாகக் கொண்டு அவனைப் பார்த்து பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு பருவத்துப் பெண்களும் அவன் மீது காதல் கொள்வதாகவும் கொண்டு பாடப்பட்ட உலாப் பிரபந்தமாக ஒட்டக்கூத்தரது மூவருலா அமைகிறது. இப் பிரபந்தத்தை நாயக்கர் காலத்திலே இறைவன் வீதியுலா வருவதாகக் கொண்டு இறை புகழைச் சித்திரிப்பதாகக் திருக்குற்றால நாதருலா, ஏகாம்பர நாதருலா முதலியவை அமைகின்றன.

சோழர் காலத்தில் நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் என்பன நாயக்கர் காலத்தே கச்சிக் கலம்பகம், தில்லைக் கலம்பகம் போன்ற கலம்பக இலக்கிய வடிவங்கள் தோன்றக் காரணமாயிற்று.

சோழர் காலத்திலே தமிழ் மொழியின் அமைப்பு இயல்பை விளக்குகின்ற (எழுத்து, சொல்) இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றதன் பிற்பாடு குறிப்பிடத்தக்க தமிழ் இலக்கண நூல்கள் தோற்றம் பெறவில்லை எனக் குறிப்பிடலாம். நாயக்கர் காலப் பகுதியில் பட்டியல் நூல்களும், திருக்குருகைப் பெருமாள் எழுதிய மாறன் அலங்காரம், மாறன் அகப்பொருள் போன்ற இலக்கண நூல்களும் தோற்றம் பெற்றன.

சோழர் காலத்திலே தோற்றம் பெறாத பொதுமக்கள் இலக்கியம் நாயக்கர் காலத்தே திருக்குற்றாலக் குறவஞ்சி, திருமுக்கூடற் பள்ளு என பொதுமக்கள் இலக்கியமாக சிறப்புப் பெறுகின்றன.

சோழர் காலப் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற தனிப் பாடல்கள் நாயக்கர் காலப் புலவர்களினாலும் தொடர்ந்து பாடப்பட்டன.

# ஐரோப்பியர் காலம்

நாயக்கர் காலத்தை அடுத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் காலப்பகுதி ஐரோப்பியர் காலமாகும். கி.பி. 18. 19 நூற்றாண்டுகளை உள்ளடக்கிய இருநூறு ஆண்டுகளைக் கொண்டதெனப் பேராசிரியர் வி. செல்வநாயகம் குறிப்பிடுவர்.

## ஐரோப்பியர் காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்கான காரணங்கள்

வணிக நோக்குடனும் மதம் பரவுவதற்காகவும் வந்த ஐரோப்பியர் படிப்படியாக ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் தமது ஆட்சியில் மருத்துவமனைகள், ஏழை விடுதிகள், அநாதைக் குழந்தைகள் இல்லம், கல்வி நிலையங்கள் முதலியன நிறுவி மக்களுக்குத் தொண்டு செய்தனர், இவர்களது அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களும், ஆங்கிலக் கல்வியும் தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் விளைவாக தமிழ் மொழியும் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

ஐரோப்பியர் கீழைத் தேசங்களில் கல்வியை பரவலாக்கினார்கள். மரபு வழி நிலவி வந்த கல்வி முறை விஸ்தரிக்கப்பட்டது. கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவினார்கள் உயர் வகுப்பினரிடத்தும் செல்வம் பெற்றோரிடத்தும் தனியுடைமையாக இருந்த கல்வி பொதுவுடைமையாக மாறியது. சமுதாய ஏற்றத்தாழ்வை நீக்கி சமூகத்தின் சகல வகுப்பினரும் எழுத்தறிவு

பெற உதவினர். மக்களை மதம் மாற்றவும், கிறீஸ்தவ மதக் கருத்துக்களைப் படித்தறிந்து கொள்ளவும், தமது ஆட்சிக்கேற்ற அலுவலர்களை ஆக்கிக் கொள்வதற்குமான சுயநல நோக்கில் கல்வி விருத்தி மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய கல்விப் பரவலாக்கல் தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த படித்த மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். ஆங்கிலக் கல்வி பயின்று பாண்டித்தியம் பெற்ற தமிழர் ஆங்கில இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, திறனாய்வு, ஒப்பியல், கட்டுரை, நாடகம், அகராதி முதலியவற்றை தமிழில் புகுத்த வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அதன் விளைவாக தமிழ் மொழியிலும், இலக்கியங்களிலும் ஐரோப்பிய மொழிப் போக்குகளும் வளர்ச்சிகளும் இடம்பெறலாயின.

ஐரோப்பியர் காலத்தில் கிறீஸ்தவ மதப் பிரசாரம் முதன்மை பெற்றது. கிறீஸ்தவ மதப் பிரசாரத்திற்காக வந்த பாதிரிமார்கள் இந் நாட்டு மொழியைக் கற்று அம்மொழியிலேயே தம் மதக் கருத்துக்களைப் பிரசாரப்படுத்துவதே மதப் பிரசாரத்துக்கு சிறந்த வழி எனக் கண்டனர். போப், கால்டுவெல், சீகன்பால்கு ஐயர் போன்ற ஐரோப்பியப் பாதிரிமார் தமிழ் மொழியைக் கற்று தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்று தமிழ் மொழியிலேயே கிறீஸ்தவ மதப் பிரசாரத்தை மேற்கொண்டனர். அத்துடன் கிறீஸ்தவ மதக் கருத்துக்களை உள்ளடக்கிய தமிழ் இலக்கியங்களையும்ஏனைய தமிழ் இலக்கியங்களையும் வெளியிட்டனர். இந் நிகழ்ச்சி தமிழ் இலக்கியங்களும், தமிழ் மொழியும் குறிப்பிடத்தக்களவு மாற்றமும் வளர்ச்சியும் பெறக் காரணமாயிற்று.

ஐரோப்பியர் காலத்தில் தமிழ் மொழிக்குக் கிடைத்த மிகப் பெரிய அதிஷ்டங்களில் ஒன்று அச்சுப் பொறி கிடைத்தமை ஆகும். ஓலையில் எழுதி தமிழ்மொழி பாதுகாக்கப்பட்ட நிலையே ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இருந்தது. ஐரோப்பியர் தமது மதத்தைப் பரப்பவும், அஞ்ஞானிகளை நல்வழிப் படுத்தவும் அச்சில் தமிழ் நூல்களை வெளியிட்டனர். முதன் முதல் தமிழ் மொழியில் அச்சில் வெளிவந்த நூல் 'கிறீஸ்தவ வேதோபதேசம்' ஆகும். (கி.பி 1577) இதற்கு முன் வெளியிடப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' என்ற ஆறு (6) பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றை உரோமாபுரியில் உள்ள நூலகம் ஒன்றில் தான் கண்டதாக வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகள் குறிப்பிடுவர்.

'ஐரோப்பியர் வருகையால் அச்சுயந்திரம் வராதிருக்குமே யானால் அநேகமான தமிழ் நூல்களை இன்று நாம் கண்டிருக்க முடியாது.'

என்று மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுவர். ஏட்டுச் சுவடிகளில் எழுதுவதும் அதைப் படிப்பதும், பாதுகாப்பதும் கடினமானதே. தமிழ் மக்களுக்கு எழுதா எழுத்தாகிய அச்செழுத்து புதுமையானதாகவும், ஆச்சரியமானதாகவும் இருந்தது. கை வலிக்க ஏடு எழுதும் வழக்கம் மாறியது. ஒரே நேரத்தில் பல்லாயிரம் பிரதிகளை வெளியிடும் நிலை தோன்றியது. அச்சுயந்திரப் பயன்பாட்டுக்குக் கடதாசியின் உபயோகமும் உறுதுணை புரிந்தது. ஓலையில் உறங்கிக் கிடந்த தமிழ் மொழி அச்சுயந்திரத்தால் கடதாசியில் பவனி வரத் தொடங்கியது இவ் அம்சம் பரவலான கல்விக்குப் பசுமையான தீனியாகியது இதன் மூலம் தமிழ் மொழி வளர்ச்சி அடையலாயிற்று.

ஐரோப்பியர் வருகையால் தமிழ் மொழி உரை நடையிலும் பெரு வளர்ச்சியைப் பெற்றது. அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களும் கல்வி, அச்சுயந்திரம் முதலிய சாதனங்களும் உரைநடைக்கு உந்துதல் அளித்தது. வீரமாமுனிவர், சீகன் பால்கு, ஐயர் தத்துவ போதக சுவாமிகள் போன்றோர் சிறப்பான பணியாற்றினர். 'தமிழ் உரை நடை எழுந்து நடக்கத் தொடங்கியது (19-ம்) பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே' என்ப் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடுகின்றார். உரைநடை வளர்ச்சியின் மூலம் பத்திரிகைத்துறை, கண்டன நூல்கள், சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், நாவல், சிறுகதை, ஒப்பியல் போன்ற இன்னோரன்ன பல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்த தமிழ்மொழி பல்துறை வளர்ச்சியைப் பெறக் காரணமாயின;

## ஐரோப்பியர் கால இலக்கியங்கள்

ஐரோப்பியர் காலத்தில் உரைநடை வளர்ச்சியும் அச்சுயந்திர வருகையும், மதப் பிரசார நடவடிக்கைகளும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பங்காற்றின. ஆங்கிலேய கிறீஸ்தவப் பாதிரிமார்களினாலும், தமிழக கிறீஸ்தவர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட மதப் பிரசாரத்தினால் செய்யுள் நடையிலும் உரைநடையிலும் பல கிறீஸ்தவ மத இலக்கியங்கள் தோற்றம் பெற்றன அதேவேளை தமிழ் நாட்டில் இஸ்லாமிய மதப் பிரசாரமும் நடைபெற்றது. சுதேசிய மதமாகிய இந்து மதமும் தம் மதக் கருத்துக்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களைத் தோற்றுவித்தது. ஆங்கிலக் கல்வி விருத்தியினால் படித்த மத்திய தர வர்க்கத்தினர் ஆங்கில மொழியினால் கவரப்பட்டு

மேலைத்தேய இலக்கிய வடிவங்களையும், இலக்கியத் துறைகளை யும் தமிழில் புகுத்த விரும்பினர். இதனால் தமிழ் மொழியில் பல இலக்கியங்களும் இலக்கியத் துறைகளும் வளர்ச்சி பெற்றன.

ஐரோப்பியர் காலத்தில் எழுச்சி பெற்ற இலக்கியங்களை உரைநடை இலக்கியம், செய்யுள் இலக்கியம், நாடக இலக்கியம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். வீரமாமுனிவரால் எழுதப் பட்ட வேத ஒழுக்கம், வேதிய விளக்கம் என்பனவும் தத்துவ போதக சுவாமிகளால் ஆக்கப்பட்ட ஆத்ம நிர்ணயம், கடவுள் நிர்ணயம், தத்துவக்கண்ணாடி என்பனவும் கிறீஸ்தவ உரை நூல் களாகின்றன. ஆறுமுகநாவலரது பெரிய புராண வசனம், திரு விளையாடற் புராண வசனம், சைவ வினா விடை, பாலபாடம் என்பன இந்து மத உரை நூல்களாக அமைகின்றன.

மதப் பிரசாரத்திற்காக ஒவ்வொரு மதமும் தமது மதத் தைப் போற்றியும், ஏனைய மதங்களைக் கண்டிப்பனவுமாக அமைந்த கண்டன நூல்களும் உரைநடையிலேயே அமைந்துள் ளன. கத்தோலிக்க மதத்தினருக்கு எதிரான புரட்டஸ்தாந்து மதத்தினர் திருச்சபை பேதகம் என்னும் நூலும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு எதிரான கத்தோலிக்க மதத்தினரின் பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு என்பனவும் கிறீஸ்தவர்களுக்கு எதிரான இந்து மதத்தவரின் சுப்பிரபோதம், வச்சிரதண்டம், சித்தாந்தமரபு, கண்டன கண்டனம் என்பனவும் கண்டன நூல் களாக அமைகின்றன.

வசன நடை வந்து சேர்ந்ததோடு புதிய இலக்கிய வடிவங் களும் தோற்றம் பெற்றன. பாரிய இலக்கிய வடிவங்களாகக் கருதப்படுகின்ற நாவல், சிறுகதை என்பவற்றின் எழுச்சி ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்டதேயாகும். உரைநடையைக் கையாண்டு வேதநாயகம் பிள்ளையினால் எழுதி முடிக்கப்பட்ட பிரதாப முதலியார் சரித்திரம் தமிழில் தோன்றிய முதல் நாவலாக அமைகிறது. இவரது சுகுண சுந்தரி, சூரிய நாராயண சாஸ்திரி யாரது மதிவாணன், ராஜம்மையரின் கமலாம்பாள் சரித்திரம், திருகோணமலை சரவணமுத்துபிள்ளையின் மோகனாங்கி என்பன இக் காலப்பகுதியின் சிறந்த நாவல்களாக விளங்கு கின்றன.

மற்றொரு இலக்கிய வகையான சிறுகதையினை வீரமா முனிவர் பரமார்த்த குரு கதையோடு அறிமுகப்படுத்தினார். இதனோடு வினோதரச மஞ்சரி, பஞ்சதந்திரக்கதை, ராமன்கதை இக்காலத்தில் எழுந்த சிறுகதை இலக்கியங்கள் ஆகும்.

செய்யுள் வடிவில் இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பாலும் மத நூலாக அமைகின்றன. யேசுநாதரின் தந்தையாகிய சூசையப்பரைக் காவியத் தலைவராகக் கொண்டு வீரமாமுனிவரால் பாடப்பட்ட தேம்பாவணி குறிப்பிடத்தக்கது ஆகும். இவை தவிர திருக்காவலூர் கலம்பகம், கிந்தேரி அம்மாள் அம்மானை, அடைக்கலநாயகி வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி என்னும் பிரபந்தங்களும் கிருஸ்ணபிள்ளை அவர்களால் பாடப்பட்ட இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் என்பனவும் குறிப்பிடத்தக்க கிறீஸ்தவ மத இலக்கியங்களாக விளங்குகின்றன.

இந்து மதக்கருத்துக்களை விளக்குகின்ற சமய இலக்கியங்களும் இக்காலத்தே தோற்றம் பெற்றன. திருவிளையாடற் புராணம், சின்னத்தம்பி புலவரின் பறாளாய் விநாயகர் பள்ளு, தாயுமானவர் பாடல்கள், ராமலிங்க அடிகளின் திருவருட்பா என்பனவும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் பத்து (10) பிள்ளைத் தமிழ் நூல்களும், பதினாறு (16) அந்தாதியும், நான்கு (4) மாலைகளும் திருவிடை மருதூர் உலா, காழிக் கோவை முதலிய சிற்றிலக்கியங்களும் சிறப்புடன் குறிப்பிடத்தக்கன.

இஸ்லாமிய மதக் கருத்துக்களை விளக்குகின்ற வண்ணக் களஞ்சியப் புலவரின் முகைதீன் புராணம், மதாறு சாகிபு புலவரின் மிதிறுசாநா, முகம்மது உசைன் புலவரால் பாடப்பட்ட பெண் புத்தி மாலை, நயினா முகமது புலவரினது முன்கிரின் மாலை முதலிய நூல்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஐரோப்பியர் கால இலக்கிய வடிவங்களில் நாடக இலக்கியமும் குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியர் காலத்தில் எழுந்த நாடக இலக்கியம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையினது மனோன்மணியமாகும். ஒரு சிறந்த நாடக இலக்கியத்திற்கு இருக்க வேண்டிய இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தப்பெற்றதாக மனோன்மணியம் அமைகின்றது. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் ரூபாவதி, கலாவதி, மான விஜயம் போன்ற நாடக இலக்கியங்கள் சிறப்புப் பெறுகின்றன.

புதிய பல இலக்கியத்துறைகளும் ஐரோப்பியர் வருகையால் தமிழில் வளர்ச்சி பெற்றது. கால்டுவல் பாதிரியாரினது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழில் ஒப்பியல் துறைக்கு அடிக்கல் ஆயிற்று. வீரமாமுனிவரது சதுர அகராதியோடு அகராதித்துறை தமிழில் அடியெடுத்து வைத்தது. திராவிட மொழி

களின் ஒப்பிலக்கணமும், வீரமாமுனிவரது 90 இலக்கண ஆராய்ச்சிகளும் வழிகாட்ட ஆராய்ச்சித் துறை தமிழில் ஆரம்பமானது. மதப் பிரசாரமும் ஆங்கிலக் கல்வியும் பத்திரிகைத் துறையைத் தமிழில் தோற்றுவித்தது பத்திரிகைத் துறையினூடு கட்டுரைக் கலையும் தமிழில் அறிமுகமானது.

ஐரோப்பியர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளில் அளப்பரியது மொழி பெயர்ப்புக் கலையாகும். வீரமாமுனிவர் திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் என்னும் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவை சிறந்த மொழி பெயர்ப்புக்களாகப் போற்றப்படுகின்றன.

## ஐரோப்பியர் கால இலக்கியப் பண்புகள்

ஐரோப்பியர் காலத் தமிழகத்தில் கிறீஸ்தவம், இந்து மதம். இஸ்லாம் மதம் என்பன தம் மதங்களைப் பிரசாரம் செய்தன ஐரோப்பிய கிறீஸ்தவ பாதிரிமார்கள் தமிழ் மொழியிலேயே தம் மதக் கருத்துக்களைப் பரப்ப முற்பட்டனர். தம் மதப் பரப்புதலுக்கு செய்யுள் இலக்கியங்களையும் உரைநடை இலக்கியங்களையும் கூடுதலாகக் கையாண்டனர். இந்துக்களும் தம் மதக்கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கு கிறீஸ்தவர்கள் பின்பற்றிய வழிமுறையினையே பின்பற்றினர். ஐரோப்பியர் கால இலக்கியங்களை பொருள் அடிப்படையில் மத இலக்கியங்கள், பிற இலக்கியங்கள் எனப் பாகுபடுத்தலாம். இக்காலத்தில் எழுந்த பெருந்தொகையான இலக்கியங்கள் மத இலக்கியங்களாகவே அமைகின்றன மதக் கருத்துக்களைச் சொல்வதற்கு இலக்கியம் ஒரு கருவியாகப் பயன்பட்டது. இந்துமதக் கருத்துக்களை விளக்குவதாக ஆறுமுகநாவலர், இராமலிங்க அடிகள், தாயுமானவர், திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை போன்றவர்களால் ஆக்கப் பட்ட நூல்களும், கிறீஸ்தவ மதக் கருத்துக்களை விளக்குவதாக வீரமாமுனிவர், தத்துவ போதக சுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, சின்னச் சவேரியார் போன்றோரது நூல்களும், இஸ்லாம் மதக் கருத்துக்களை விளக்குவதாக வண்ணக் களஞ்சியப் புலவர், மதாறு சாகிபு புலவர், முகமது செயின் போன்றவர்களது நூல்களும் மதக் கருத்துக்களைச் சுமந்து வருவனவாக அமைந்தன. எனவே சமயப் பிரசார வாகனமாக அமைதல் என்ற பண்பு ஐரோப்பியர் கால இலக்கியங்களுக்கு உரியதாயிறறு.

உரைநடையின் வளர்ச்சியைக் கொண்டமைதல் ஐரோப்பியர் கால இலக்கியங்களின் ஓர் பண்பாகும். அச்சியந்திரத்தின் வருகை, பத்திரிகைத் துறையின் எழுச்சி முதலிய பல்வேறு காரணங்களினால் உரைநடை ஐரோப்பியர் காலத்தில் கணிசமாக வளர்ந்தது. தத்துவ போதக சுவாமிகள், வீரமாமுனிவர், ஆறுமுகநாவலர், சிவஞான முனிவர், சபாபதிநாவலர், வேதநாயகம் பிள்ளை, மாதவையா, ஆரிய நாராயண சாஸ்திரியார், மறைமலையடிகள் போன்ற பல்வேறு உரைநடையாசிரியர், இக் காலப் பகுதியில் வாழ்ந்து வெவ்வேறு தன்மையான உரைநடைகளை வளர்த்து எடுத்துள்ளனர். தத்துவ போதக சுவாமிகளது உரைநடை வடமொழிச் சொற்கள் கலந்த எளிமையும், பொருட்செறிவும் தர்க்க முறையாகக் காரணகாரியத் தொடர்பு காட்டி விளக்குவதாக அமைகிறது. வீரமாமுனிவர் பண்பட்ட உரைநடையினைக் கையாண்டார். சாதாரண பாமரமக்களும் கற்றுணரும் வண்ணம் எளிமை மிகுந்திருந்தது. சிவஞான முனிவரது உரைநடை தர்க்க ரீதியான பொருட்செறிவு மிக்க கம்பீரமான தொன்றாக அமைந்தது. சிறிய சிறிய வாக்கியங்களாக நீட்டி எழுதப்படும் எளிமை மிக்கதாக ஆறுமுகநாவலரின் உரைநடை அமைந்தது. உரைநடை இக் காலத்தில் வளர்ச்சியடைந்தது மட்டுமன்றி வெவ்வேறு தன்மைகளைக் கொண்டமைந்தனவாகவும் காணப்பட்டது.

ஐரோப்பிய கால இலக்கியப் பண்புகளில் விதந்து குறிப்பிடக்கூடியது புதிய இலக்கிய வடிவங்களாகும். ஆங்கிலக் கல்வியினாலும் படித்த மத்திய தர வர்க்கத்தின் எழுச்சியினாலும் ஆங்கில மொழியில் காணப்பட்ட இலக்கிய வடிவங்கள் தமிழ் மொழியிலும் புகுவதாயிற்று. இத்தகைய இலக்கிய வடிவங்களுள் முதற் பிரசவமாக நாவல் 1876 இல் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைவதாயிற்று. உரைநடையில் அமையும் நீண்டகதை, சிறு கதை என்ற புதிய இலக்கிய வடிவமாக விளங்குகின்றது. வீரமாமுனிவரது பரமார்த்த குரு கதை, கேலி, கிண்டல் என்பவற்றைப் பொருளாகக் கொண்டமையும் அங்கதம் என்ற புதிய இலக்கிய வகை ஒன்றின் தோற்றத்தைக் குறித்து நிற்பதாயிற்று.

ஆங்கில மொழித் தொடர்பும் ஆங்கிலேயர்களது முயற்சிகளும், மொழியறிவு வளர்ச்சியும் புதிய அறிவியல் துறைகள் பலவற்றின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. வீரமாமுனிவரின் சதுர அகராதி தமிழில் தோற்றம் பெற்றது ஐரோப்பியர் காலத்திலாகும். மொழி வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சித்துறை தமிழில் அறிமுகமாகியது. இலக்கியங்களினது குறைநிறைகளை மதிப்பீடு செய்யும் (விமர்சனம்) திறனாய்வுத்துறை இலக்கியங்களையோ, இலக்கிய கர்த்தாக்களையோ ஒப்பிட்டு மதிப்பீடு

செய்யும் ஒப்பியல் துறையும் தமிழில் தோன்றி வளர்ச்சியடைந்தன. இவ் அறிவியல் துறைகளினது கருத்துக்களை வெளிப்படுத்தும் கட்டுரை என்னும் புதிய வடிவமும் வளர்ச்சி அடைந்தது. மதப் பிரசார நோக்கில் பத்திரிகைத்துறையும் வளர்ச்சியடைந்தது. இத்தகைய அறிவியல் துறைகளின் வளர்ச்சி இக்காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மரபு ரீதியான அடிப்படையில் வளர்ந்து வந்த தமிழ் மொழி காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய அமைப்புக்களை உள்வாங்கி நவீனத்துவம் பெற்றுக் காணப்பட்டது. காலத்திற்கு ஏற்ற மொழி நடையான உரைநடை இக்காலத்தில் வளர்ச்சி பெற்றது, இவ் வளர்ச்சியினால் மேலைத்தேச அறிவியல் துறைகளான மொழியியல், மருத்துவம் முதலிய துறைகள் தமிழ் மொழியிலும் விருத்தி அடைந்தது, அறிவியல் துறை வளர்ச்சியைப் பெற்று தமிழ் மொழி நவீனமயப்படுத்தப்பட்டது.

ஆங்கில மொழிச் செல்வாக்கு தமிழ் மொழியில் காணப்பட்டது. ஆங்கில மொழியின் இலக்கிய வடிவங்களும் இலக்கியக் கதைகளும் தமிழில் கையாளப்பட்டது. ஆங்கில மொழியில் வளர்ச்சி பெற்றிருந்த அறிவியற்துறைகளும் தமிழ் மொழியில் கொண்டு வரப்பட்டன. ஆங்கில மொழிப் பிரயோகமும் தமிழ் மொழியில் கையாளப்பட்டது. ஆங்கில மொழிச் செல்வாக்கு அல்லது பாதிப்பு தமிழ் மொழியில் ஊடுருவிய காலம் ஐரோப்பியர் காலம் ஆகும்.

## நாயக்கர் கால இலக்கியங்களும் ஐரோப்பிய கால இலக்கியங்களும் ஓர் ஒப்பீடு

நாயக்கர் கால இலக்கியப் போக்கினையும், ஐரோப்பியர் கால இலக்கியப் போக்கினையும் ஒப்பிட்டு நோக்குவதற்கு அவ் இரு காலப் பகுதிகளிலும் அரசியல், பொருளாதார, சமுதாயப் பின்னணிகளின் அடிப்படையிலிருந்து முகிழ்த்த இலங்கியங்களே சான்றாதாரங்களாக விளங்குகின்றன. நாயக்கர் காலத்திலும், ஐரோப்பியர் காலத்திலும் தமிழகத்தில் வேற்று மொழி பேசும் அந்நியர்கள் வேந்தர்களாய் ஆட்சி புரிந்தனர். தமிழ்ப் பேரரசு தகர்ந்தது. தமிழர் தம் அரசு இழந்தனர்.

இச் சூழ்நிலையில் நாயக்கர் காலத்தே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. தமிழர் வாழ்க்கை வளமே சிதைந்தது. அமைதி குலைந்தது; இப் பின்னணியின் காலத்தின் கோலத்திற்கு

ஏற்றாற் போல் சிறு சிறு இலக்கியங்களையே இயம்பினர்; காளமேகம், இரட்டையர் போன்ற புகழ்மிகு புலவர்களும் தம் புலமை புலப்படுமாறு ஏற்றமிகு இலக்கியங்களை இயம்பவில்லை. வசை பாடுவதிலும், சிலேடை மொழிவதிலும் தம் காலத்தைக் கழித்தனர். வளமார் காவியங்களையோ, வகையான இலக்கியங்களையோ படைக்கக் கூடிய பொருள் வளமற்ற நிலை காணப்பட்டது. இதனால் நாயக்கர் காலம் 'வரண்ட காலம்' எனவும் அழைப்பதுண்டு.

ஐரோப்பியர் வருகை தமிழக வரலாற்றில் அரசியல், பொருளாதார நோக்கில் தீமை பயத்தது உண்மை; ஆனாலும் தமிழ் இலக்கியத்திலும், தமிழக சமுதாயத்திலும் அவர்களது வருகை புதுமையைப் புகுத்தியது, புரட்சி புரிக்கச் செய்தது; தமிழர்கள் எட்டுத் திசையும் அலைந்து புதிய கலைகளைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இன்றி அக் கலைகள் தமிழைத் தேடி, தமிழரைத் தேடி, தமிழகத்தைத் தேடி தமிழ் அன்னையின் மடியில் வந்து குவிந்தன. அவற்றைக் கொண்டு வந்து குவித்தவர்கள் ஐரோப்பியர்கள் என்பது மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை, இதனாலேயே வரண்ட காலமாகிய நாயக்கர் காலத்திலிருந்து வேறுபட்டு தமிழ் மொழி ஏற்றமிகு புதுப் புதுத் துறைகளில் ஏற்றம் பெற்று வளர்ந்தது;

சங்க காலம் முதல் சோழர் காலம் வரை பல்துறை வளர்ச்சியைப் பெற்ற இலக்கியம் நாயக்கர் காலத்தே பொருள் வளமற்ற சூழ்நிலையில் புதியன எதையும் ஆக்க முடியாது போய் விட்டது. தம் முன்னோரின் முதுசொம்களான இலக்கிய இலக்கணங்களைப் பேணிப் பாதுகாத்தனர், பசியும், பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடிய நிலையில் தம்மைப் படைத்தவனாகிய இறைவனிடம் தஞ்சம் அடைந்தனர். இறைவன் மீதும் இறைவன் குடி கொண்டிருக்கும் தலத்தின் மீதும் உலா, கோவை, பிள்ளைத்தமிழ், பரணி, மாலை, அந்தாதி, கலம்பகம் முதலிய பிரபந்தங்களையும் தல புராணங்களையும் பாடி அரைத்த மாவை அரைப்பது போன்று பழைய பாணியிலேயே (தடம்) சென்றது; ஐரோப்பியர்கள் மருத்துவ மனைகள், ஏழை விடுதிகள், கல்வி நிலையங்கள், அநாதைக் குழந்தைகள் இல்லம் முதலியன அமைத்து சாதி பேதமற்ற சமுதாயப் பணிகள் மூலம் கிறீஸ்தவ மதப் பிரசாரத்தை மேற்கொண்டனர்

நாயக்கர் காலத்து இஸ்லாமிய மதப் பிரசாரமும் இந்துக்களது மதக் கருத்துக்களும் இலக்கியங்கள் வாயிலாகப் புலப்படுத்தப்பட்டன; ஐரோப்பியர் காலத்தில் இவ்விரு மதங்களோடும்

கிறீஸ்தவ மதமும் தமது பிரசாரத்தை ஆரம்பித்தது. நாயக்கர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மதப் பிரசாரம் ஐரோப்பியர் காலத்திலும் தொடர்வதாயிற்று.

நாயக்கர் காலத்தில் கையாளப்பட்ட அந்தாதி என்ற சிற்றிலககிய வடிவம் ஐரோப்பிய காலத்தே வேதநாயகம்பிள் ளையின் வேதமா அந்தாதி, மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் குழந்தைத் திரிபந்தாதி முதலியவற்றில் வெளிப்படுகின்றது

நாயக்கர் காலத்தில் பொதுமக்களைப் பாடிய திருக்குற்றா லக்குறவஞ்சி என்னும் இலக்கிய வடிவம் ஐரோப்பிய காலத்தில் வேதநாயக சாஸ்திரியாரது யேசுநாதரைப் பாட்டுடைத் தலைவ னாகக்கொண்டு பாடப்பட்ட பெத்ழேகம் குறவஞ்சியும், மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் திருவிடைக்களிக் குறவஞ்சியும் தோன்று வதற்குக் காரணமாயிற்று.

நாயக்கர் காலத்தில் தோன்றிய திருவாரூர் மும்மணிக் கோவை என்னும் கோவைப் பிரபந்தம் ஐரோப்பியர் காலத்தில் வேதநாயகம்பிள்ளையின் வேதநாயகன் கோவைப் பிரபந்தத் திற்கு அடிக்கல் ஆயிற்று.

நாயக்கர் காலத்தில் தோன்றிய திருவாரூர் நான்மணி மாலை என்னும் பிரபந்தம் ஐரோப்பிய காலத்தில் வேதநாய கம்பிள்ளையின் பெண் மதி மாலையும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அகிலாண்ட நாயகி மாலையும் தோற்றம் பெறக் காரணமாயிற்று.

நாயக்கர் காலத்தில் தோன்றிய கச்சிக் கலம்பகம் என்னும் பிரபந்தம் ஐரோப்பியர் காலத்தில் வீரமாமுனிவரது திருக்காவ லூரின் கண் எழுந்தருளியிருக்கும் தேவமாதாவின் மீது பாடப் பட்ட திருக்காவலூர் கலம்பகம், மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் அம்பலவாணர் தேசிகர் கலம்பகம், வாட்போக்கிக் கலம்பகம் என்பன வெளிப்படக் காரணம் ஆயிற்று.

நாயக்கர் காலத்தே கையாளப்பட்ட தூதுப் பிரபந்தம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடு தூது என்னும் தூதுப் பிரபந்தம் தோற்றம் பெறக் காரண மாயிற்று.

நாயக்கர் காலத்தே தோன்றிய தலபுராணம் என்னும் இலக்கிய வடிவம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் திருப்பெருந்

துறைப் புராணம், திருக் குடந்தைப் புராணம், ஆற்றூர் புராணம் போன்றவற்றின் தோற்றத்திற்கு காலாயிற்று.

நாயக்கர் காலத்தே கையாளப்பட்ட உலாப் பிரபந்தம் ஐரோப்பியர் காலத்தில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திருவிடை மருதூர் என்ற உலா பிரபந்தத்தில் கண்டு தெளியலாம். நாயக்கர் காலத்தே தோன்றிய மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் ஐரோப்பிய காலத்தில் சேக்கிழார் பிள்ளைத்தமிழ், முருகன் பிள்ளைத்தமிழ் என்பவற்றில் வெளிப்படுகின்றது.

இலக்கிய வடிவம் பாடுபொருள் என்பவற்றில் நாயக்கர் காலத்தோடு ஐரோப்பிய காலம் ஒன்றிச் சென்றாலும் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் சோழர் காலத்தை அடுத்து நாயக்கர் காலத்தில் குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் எதுவும் தோன்றவில்லை. ஐரோப்பிய காலத்தில் வீரமாமுனிவரது குட்டித்தொல்காப்பியம் எனப்பலராலும் போற்றப்படுகின்ற தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலும், ஆறுமுகநாவலரது இலக்கணச் சுருக்கமும் தோற்றம் பெற்றது.

நாயக்கர் காலத்தே நச்சினார்க்கினியார், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் தமிழ் நூல்களுக்கு உரை எழுதினர். ஐரேப்பியர் காலத்தில் தத்துவ போதசுவாமிகள், வீரமாமுனிவர் ஆறுமுகநாவலர் போன்றோர் செப்பமான உரைநடையைத் தமிழ்மொழியில் கையாண்டு தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உரமூட்டினர்.

நாயக்கர் காலத்தே இஸ்லாமிய மதப்பிரசாரத்தை மேற்கொள்வதற்காக உமறுப் புலவரின் சீறாப்புராணம் தோற்றம் பெற்றது. ஐரோப்பியர் காலத்தில் யேசு நாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைத் தெள்ளு தமிழில் கூறுகின்ற தேம்பாவணி என்னும் நூலை வீரமாமுனிவர் தமிழ் அன்னைக்குச் சூட்டினார்.

பழமையையும் பழமை போற்றும் பண்பினையும் பாராட்டிச் சென்ற நாயக்கர் காலத்திலே மேற்கே வளருகின்ற புதுதம் புதிய கலைச் செல்வங்கள் அனைத்தும் தமிழ் அன்னையை அலங்கரித்தது ஐரோப்பியர் காலத்திலேயே. தமிழ்ச் சொற்களை அகர வரிசையாகத் தொகுத்து எளிதில் பொருள் புலப்படுமாறு செய்யும் அகராதித் துறையை ஆக்கிக் கொடுத்தவர்கள் ஐரோப்பியர்களே, ஆங்கில மொழியைத் தமிழர்கள் உணரவும், தமிழ் மொழியை ஆங்கிலேயர் போற்றவும் பேர்சிவல் என்னும்

பேரறிஞர் ஆங்கிலத் தமிழ் அகராதிக்கு அடியெடுத்துக் கொடுத்தார். தமிழ் மொழி தவிர பிறமொழியைக் கற்று அறிவுப் பசி தீர்க்க மொழி பெயர்ப்புத் துறையையும்; இலக்கியத்தின் குறை நிறைகளை மதிப்பிட்டு ஆராயும் விமர்சனத் துறையையும், இலக்கியத்தையும், இலக்கிய கர்த்தாவையும், ஒப்பிட்டு மதிப்பிடும் ஒப்பியல் துறையையும் மொழிகளின் அமைப்பு இயல்புகள் தன்மைகள் என்பவற்றை ஆராய்ந்து அறிந்திடும் ஆராய்ச்சி துறையையும், அறிவியல் துறைகளை அழகுறக் கற்று அனைவரும் பயின்றிடக் கட்டுரைக் கலையையும் தமிழிலே புகுத்தினர்.

ஐரோப்பிய அறிஞர் வீரமா முனிவரின் நகைச்சுவை ததும்பும் பரமார்த்த குருகதையினோடு சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் வளரலாயிற்று. சாதாரண பாமர மக்களை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவல் என்னும் இலக்கிய வடிவம் ஐரோப்பியர் தமிழுக்குக் கொடுத்த கொடையே: முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழும் கணிசமான வளர்ச்சி பெற ஐரோப்பியர் வருகையே காரணமாயிற்று.

வீரமா முனிவர் தமிழ் எழுத்துக்களில் மாற்றத்தைப் புகுத்தினார். நிறுத்தற் குறிகள் மூலம் தமிழ் இலக்கியம் கற்பதை எளிமையாக்கினார். வீரமா முனிவர் புகுத்திய வரி வடிவத் திருத்த முறையும், நிறுத்தற் குறியீடுகள் மொழியின் வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்தது.

ஐரோப்பியர் ஆட்சியில் மதப் பிரசாரம் மேன்மையுற்று இருந்தது. ஒவ்வொரு மதத்தவரும் தம் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த பத்திரிகைத் துறையைப் பயன் படுத்தினர்.

மேலைத் தேசத்தவர் எனக் கருதப்படும் ஐரோப்பியர் தம் மொழிகளில் உள்ள பல்வேறு துறைகளைத் தமிழ்மொழியிலே தோற்றுவித்தனர். வேறு பிற துறைகளும் ஐரோப்பியர் காலத்தில் வேர் விட்டுத் தளைத்தன. அச்சுக்கலை தமிழகத்தில் புகுத்தப் பட்டதனால் ஏட்டுச் சுவடிகளாய் எலிக்கும் கறையானுக்கும், காலத்திற்கும் செல்லுக்கும் இரையாக்கிக் கொண்டிருந்த தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டமையே ஐரோப்பியர் தமிழுக்குச் செய்த அளப்பரிய தொண்டு என்பது மறக்கமுடியாது.

# உசாத்துணை நூல்கள்


1. அகமும் புறமும்
— பேராசிரியர் ஞானசம்பந்தன் அ. ச.

2. அகநானூறு

3. அப்பர் தேவாரம்

4. இந்திய வரலாறு
— பேராசிரியர் தங்கவேலு கோ.

5. இந்திய வரலாறு
— பேராசிரியர் சத்தியநாத ஐயர் ஆர்.

6. இலக்கியக் கலை
— பேராசிரியர் ஞானசம்பந்தன் அ. ச.

7. இலக்கியச் சாறு
— மூதறிஞர் மாணிக்கம் வ. சுப.

8. இலக்கியச் சிந்தனைகள்
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

9. இலக்கியச் சிந்தனைகள்
— பேராசிரியர் கைலாசபதி க.

10. இலக்கியச் சிந்தனைகள்
— டாக்டர் சிவ. அரசி முத்துக்காளத்தி.

11. இலக்கியச் சுடர்
— பேராசிரியர் சாயபுமரைக்காயர் மு.

12. இலக்கிய மணிமாலை
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

13. இலக்கியமும் சமுதாயமும்
— பேராசிரியர் தில்லைநாதன் எஸ்.

14. இலக்கிய விளக்கம்
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

15. இனிக்கும் இலக்கியம்
— பேராசிரியர் சாயபுமரைக்கார் மு.

16. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்
— சிதம்பரனார் சாமி.

17. ஐந்திணை ஐம்பது

18. கம்பராமாயணம்
— கோபாலகிஷ்ணமாச்சாரியார் வை. மு.

19. கலித்தொகை

20. கலித்தொகை ஓர் ஆய்வு
— டாக்டர் ஆறுமுகம் நா.

21. காப்பியப் பார்வை
— மூதறிஞர் மாணிக்கம் வ. சுப.

22. காவிய காலம்
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

23. குறுந்தொகை

24. சங்ககாலம்
— முத்துராசன் கு.

25. சங்க இலக்கியம் சில பார்வைகள்
— பேராசிரியர் பாலசுப்பிரமணியம் சி.

26. சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும்
— டாக்டர் சாமிநாதையர் உ. வே.

27. சங்க நெறி
— மூதறிஞர் மாணிக்கம். வ. சுப.

28. சமயங்கள் வளர்த்த தமிழ்
— மயிலை சீனி. வேங்கடசாமி

29. சமய இலக்கியச் சிந்தனைகள்
— பாலசுப்பிரமணியன் எம். கே.

30. சம்பந்தர் தேவாரம்

31. சாசனமும் தமிழும்
— பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆ.

32. சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
— பேராசிரியர் பாலசுப்பிரமணியம் சி.

33. சேரர் இலக்கியச் செல்வம்
— புலவர் செந்துறை முத்து

34. சைவ இலக்கிய வரலாறு
— ஔவை துரைசுவாமிபிள்ளை சு.

35. சோழர் வரலாறு
— பேராசிரியர் இராச மாணிக்கனார் மா.

36. தமிழர் பண்பாடு காவியம்
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

37. தமிழர் பண்பாட்டியல்
— பேராசிரியர் கிட்டிணன் அ.

38. தமிழர் சால்பு
— பேராசிரியர் வித்தியானந்தன் சு.

39. தமிழில் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் சிவத்தம்பி கா.

40. தமிழின் மறுமலர்ச்சி
— பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை எஸ்.

41. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்
— பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆ.

42. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் செல்வநாயகம் வி.

43. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் பாலசுப்பிரமணியம் சி.

44. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் சாமிமூத்து சா.

45. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் அடைக்கலசாமி எம். ஆர்.

46. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் தமிழண்ணல்.

47. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் அருள்சுவாமி மு. சு

48. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் சோம. இளவரசு

49. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் வரதராசஐயர் இ. எஸ்.

50. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் பூவண்ணன்.

51. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் இறையரசன் பா.

52. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் சீனிவாசன் ரா.

53. தமிழ் இலக்கிய வரலாறு
— பேராசிரியர் வரதராசன் மு.

54. தமிழ் இலக்கிய வரலாறு பாகம் I, II.
— பேராசிரியர் சுப்பிரமணியபிள்ளை கா.

55. தமிழ் உரைநடை
— பேராசிரியர் பரமசிவானந்தம் அ. மு.

56. தமிழ் உரைநடை வரலாறு
— பேராசிரியர் செல்வநாயகம் வி.

57. தமிழ்க் காதல்
— மூதறிஞர் மாணிக்கம் வ. சுப.

58. தமிழ்க் காப்பியங்கள்
— பேராசிரியர் ஜெகந்நாதன். கி. வா.

59. தமிழ்ச் சங்கம்
— பேராசிரியர் தமிழண்ணல்

60. தமிழ் நாட்டு வரலாறு
— பேராசிரியர் இறையரசன். பா.

61 தமிழ் மொழி வரலாறு
— பேராசிரியர் இராசமாணிக்கனார். மா.

62. தமிழ் மொழி வரலாறு
— பேராசிரியர் சத்திவேல் சு.

63. தமிழ் வரலாறு
— பேராசிரியர் ராகவையங்கார் ரா.

64. திருக்குறள்
— பரிமேலழகர் உரை.

65. திருவாசகம் விரிவுரை
— வரதராஜன் ஜி.

66. தென் இந்திய வரலாறு
— டாக்டர் பிள்ளை கே. கே.

67. தென் இந்திய வரலாறு
— பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி க. அ:

68. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

69. நான்மணிக்கடிகை

70. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்
— மயிலை சீனி வேங்கடசாமி

71. பத்துப் பாட்டு மூலமும் உரையும்
— சாமிநாதையர் உ. வே.

72. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்
— மயிலை, சீனி, வேங்கடசாமி

73. பல்லவர் வரலாறு
— பேராசிரியர் இராசமாணிக்கனார் மா.

74. புதிய கோணங்களில் சங்க இலக்கியம்
— சுப்பிரமணியன் ஏ: வி.

75. புறநானூறு
— ஔவை துரைசுவாமிபிள்ளை சு.

76. பெரிய புராணம்

77. முதுமொழிக் காஞ்சி
— புலவர் மாணிக்கனார் அ.

78. வளரும் தமிழ்
— சோமலெ

79. வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை
— பேராசிரியர் தில்லைநாதன் எஸ்.

80. வழிவழி வள்ளுவர்
— சேதுப்பிள்ளை ரா. பி.

## ஆசிரியரின் ஏனைய நூல்கள் . . .

இந்துமத வரலாறு பகுதி I

இந்துமத வரலாறு பகுதி II (அச்சில்)

தி. மதிவதனன் B. A., Dip - in - Ed.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

E. MARY CONSAT